பொருளியல் நோக்கு

ஜூன் 1977

மக்கள் வங்கி வெளியீடு

வ லு

வலு

லு பல உருவங்களைக் கொள்ளும். பல்லாண்டு காலமாக இருந்த
னித வலு மிருக வலுவுக்கு இடங்கொடுத்துப் பின்னர் கரி
பான்ற உயிரற்ற பொருள்களுக்கு இடங்கொடுத்தது. கடந்த 200
ண்டுகளிலே மிக முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நேரடி
ாகப் பயன்படுத்தப்பட்ட நீரும் காற்றும் எண்ணெய்க்கு இடம
த்துப் பின்னர் அண்மைக் காலத்திலே அணு எரிபொருளுக்கு
டம் கொடுத்தன. எண்ணெய் அருகி விலை உயரும் சாத்தியக்
றும் அணு எரிபொருள் பயங்கரமான தோன்றுகத்தோற்றமளிப்ப
ம் காரணமாக நீரையும் காற்றையும் சூரியனையும் சேதனவாயு
வயும் உபயோகிப்பது பற்றிய அதிகரித்த விழிப்புணர்ச்சி ஏற்பட்
ள்ளது. இவற்றுள் சில கைத்தொழில் காலத்துக்கு முந்திய யுகத்
துக்கு எடுத்துச் செல்வனவாகும்.

→



லங்கையில் அண்மைக்காலம் வரை யானைகளே முக்கிய வலு உற்
த்திச் சாதனங்களாக இருந்தன. இங்கே காட்டப்பட்டுள்ள யானை
ள் 1882 இல் வக்ஓய - கொழும்பு நீர்த்திட்டத்துக்கான கற்பா
றகளைக் கொண்டு செல்லக் கூட்டாகப் பயன்படுத்தப்பட்டன.

னிதச்சக்தி: மரத்துண்டுகளிலே வைத்து பெரிய கற்பாறைகள்
ிஸெப் இல் உள்ள எகிப்திய பிரமிட்களைக் கட்டி எழுப்பத் தொழி
ாளர் பயன்படுத்தப்பட்டனர். 15 தொன்கள் வரை பாரமான
ாறைகளை நூற்றுக்கணக்கான யார் தூரத்துக்கு நைல் நதிக் கரைச்
ரங்கங்:ளிலிருந்து எடுத்துச் செல்லல். (கீழே)

↓

பாக்கிஸ்தானில் உள்ள 'சுயி வாயு வயலிலி
ருந்து வாயு பெருக்கெடுக்கிறது. (வலது)



←

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சேதன வாயு
மின் ஆக்கி அழியும் இலை குழைகளிலிருந்து
வாயுவை உற்பத்தி செய்கிறது. (இடது)

BIO GAS GENERATOR



17 ஆம் 18 ஆம் நூற்றுண்டுகளில் சிறு வண்
டிகளை இயக்குவதற்கு ஆவி வேகமானியின்
வளர்ச்சி வெற்றிகரமாகப் பயன்படுத்தப்
பட்டது. மாபெரும் நிவ்டன் கூட இத்த
கைய வாகனம் பற்றி கூறினுர். (கீழே
பார்க்க)

பொருளியல் நோக்கு

மலர் 3 இதழ் 3 ஜூன் 1977

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு:
35, பார்க் வீதி,
கொழும்பு 2, இலங்கை

பொருளடக்கம்

MOWBRAY COLLEGE
KANDY.

சிறப்புக் கட்டுரைகள்

ஜே. டியன்டாஸ் 20 வலுவும் போக்குவரத்தும்

எர்ல் சி. டிசில்வா 27 தேசியத் திட்டமிடலின் முழு உள நோக்கும் நடுத்தர காலத் திட்டத்துக்கான அபிவிருத்தி உபாயங்கள்

தலைமைக் கட்டுரை

3 வலு

நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

21 வியாபாரப் பொருள்கள்

24 வங்கியும் நிதியும்

26 வெளிநாட்டுச் செய்தி தொகுப்பு

அடுத்த இதழில்:

- தேர்தலுக்குப் பின்னர்—முக்கிய பிரச்சினைகள்: அடிப்படைப் புள்ளி விவரம், யார் எதனை எங்கே பெற்றனர்கள்? பிரச்சாரப் பொருள் ஆய்வு பெறுபேறுகளின் மேலார்ந்த வாரியான கருத்து
- வேலையின்மை — இலங்கையில் உள்ள பிரச்சினைகளின் பரிமாணம் எமது இளைஞர்களிடையே தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கை கிராமப் புற வேலைவாய்ப்பு அபிவிருத்தி

அட்டைப்படம்:

உலகில் கிடைக்கக் கூடிய எல்லா வலுவும் இறுதியாக சூரியனிலிருந்தே பெறப்படுகிறது. கரி, வாயு, பெற்றோலியம் முதலியன பலவற்றிற்கு உயிர் நாடியாக அமைவது சூரியனே. எமது அட்டைப்படம் பாலித்த கன்னங்கராவினால் வரையப்பட்டது. அது சூரிய கிரகணத்தின் படம், சூரியன் எவ்வாறு உயிர் நாடியாக அமைகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது படம். புகைப் படத் துறையிலே திரு. கன்னங்கரா பல சருவதேச பரிசில்களைப் பெற்றவர்.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விபரங்களையும் தரவுகளையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளியல் வளர்ச்சி முறையிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமுதாயப் பணித் திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாகும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களேயாம். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

நிகழ்ச்சிக் குறிப்பேடு

மே

2 இறக்குமதி செய்யப்பட்ட பெட்ரோலியத்துக்குத் தொடர்ந்து உள்ள கடுமையான தேவை காரணமாக 1977 மார்ச் மாதத்தில் 'எப்பொழுதும் இல்லாதவாறு' ஐக்கிய அமெரிக்காவில் மாதாந்த வியாபாரப் பற்றுக்குறை ஏற்பட்டது. 239 கோடி டொலர்களாக இருந்த இப்பற்றுக்குறை 1977 பெப்ரவரியில் 52 கோடியே 30 இலட்சம் டொலர்களாக இருந்தது. பினான்சியல் டைம்ஸ் இதை அறிவித்துள்ளது.

6 நிவ் சைனா நிவ்ஸ் ஏஜென்ஸி அறிக்கைக்கு இணங்க பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் முகமாக வெளிநாட்டுத் தொழில் நுட்பத் திறனையும் உபகரணங்களையும் இறக்குமதி செய்வதை சீனப் பொதுவுடமைப் பத்திரிகை (பீபிள்ஸ் டெய்லி) வலியுறுத்தி உள்ளது.

7 ஓர் அவுன்ஸ் 147.33 டொலரிலிருந்து 150.26 டொலர் வரையிலான விலை வீச்சில் 524,800 அவுன்ஸ் தங்கத்தினை வாஷிங்டனில் சருவதேச நாணய நிறுவனம் வெற்றிகரமாக ஏலத்தில் விற்றது என நிவ் யோர்க்கில் அறிவிக்கப்பட்டது.

8 இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மாணிக்க கற்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் அரச மாணிக்கக்கல் கூட்டுத்தாபனம் 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையைச் சம்பாதித்துள்ளது என கூட்டுத்தாபன பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். இலங்கை மாணிக்க கற்களை பெருமளவில் யப்பான் வாங்கியது.

மிக மோசமான கொடுப்பனவு நிலுவைக் கஷ்டங்களை உடைய வளர்முக நாடுகளுக்கு உதவும் பொருட்டு நூறு கோடி டொலரைக் கொண்ட விசேட உதவித் திட்டத்துக்கான ஐ. பொ. ச. யோசனையைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு ஐ. அமெரிக்கா, பிரித்தன், கனடா, பிரான்ஸ், இத்தாலி, யப்பான், மேற்கு ஜெர்மனி என்ற ஏழு செல்வந்த நாடுகளின் உச்சி மாநாடு லண்டனில் முடிவுற்றது.

9 கோப்பி சந்தைப்படுத்தலில் அனுபவமுள்ள டொமினிக்கன் நிபுணர் குறைந்தது 1978 முடிவு வரை கோப்பியின் விலை அதிகரித்துக் கொண்டே இருக்கும் என ஹேஷ்யம் கூறியுள்ளதாக சன்டோ டொமிங்கோவிலிருந்து வரும் செய்தி அறிக்கைகள் கூறுகின்றன. பெருமளவில் கோப்பி உற்பத்தி செய்யும் நாடுகளில் கையிருப்பு மட்டம் குறைந்துள்ளதால் அந்நாடுகள் விலைக் குறைப்பை அனுமதிக்க மாட்டா என்றும் அவர் கூறினார்.

11 இலங்கைக்கு மானியமாக ஏறத்தாழ 25 கோடி ரூபாவை வழங்க சுவீடன் அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே ஸ்டொக்ஹோமில் ஓர் உடன்படிக்கை கைச்சாத்தாயது. 1977 ஜூலை 1 ஆந் திகதி இலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு சுகாதாரம், விவசாயம், மிருக வளர்ப்பு, மீன்பிடி முதலிய பல திட்டங்களுக்கு இத்தொகை வழங்கப்படும்.

பல்கலைக் கழக விரிவுரையாளருக்கான ஒரு புதிய சம்பளத் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

12 எல்லாத் தேயிலை ஏற்றுமதியாளரும் வெளிநாட்டுக் கொள்வனவு செய்வோருடன் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கைகளை அத்தகைய உடன்படிக்கை ஏற்படுத்தி 48 மணித்தியாளங்களுக்குள் தேயிலை வாரியத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். இத்திட்டத்தை அறிவித்த பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் இது 1977 ஜூன் 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என அறிவித்தார்.

13 சோவியத் யூனியன் பெருமளவில் எண்ணெயை கொள்வனவு செய்ய உடன்படிக்கை செய்து கொண்டுள்ள நாடான இருக்கிலிருந்து இந்தியாவுக்கு 10 இலட்சம் டொன் மசகு எண்ணெய் வழங்க சோவியத் யூனியன் இணக்கம்தெரிவித்துள்ளது. இந்தியத் தாங்கிகளிலே மசகு எண்ணெய் கொண்டு செல்லப்படும். இதே பெறுமதியான உருக்குப் பொருள்களை இந்தியாவிலிருந்து சோவியத் யூனியன் கொள்வனவு செய்யும். இவ்வாறு லண்டன் அறிக்கைகள் கூறுகின்றன.

மூன்று வாரங்களில் முதன்முதல் சாதாரணச் சந்தை விடுமுறை செயல்பட அனுமதித்தது என இங்கிலாந்து வங்கி அறிவித்ததைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியத்தின் மிகக் குறைந்த கடன் கொடுக்கும் விகிதம் கால் புள்ளியால் 8 சதவீதத்துக்கு வீழ்ச்சியுற்றது.

மாத்தளை மாவட்டத்தில் உள்ள உக்குவளையில் மக்கள் வங்கியின் 201 வது கிளை திறக்கப்பட்டது.

15 வெட்டப்பட்டதும் வெட்டப்படாததுமான எல்லா வித மரக் கட்டைகளை ஏற்றுமதி செய்வதை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் இடை நிறுத்தி உள்ளார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

16 நாட்டின் நிர்மாணத் துறையைப் பாதிக்கும் வகையில் ஏற்பட்டுள்ள கடுமையான தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக 100,000 டொன் சிமெந்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆசியாவில் உள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு பணம் வழங்கும் முகமாக 12 கோடி டொலர்களைக் கடனாக வழங்குவதாக உலக வங்கியும் அதன் கூறான சருவதேச அபிவிருத்திச் சங்கமும் அறிவித்துள்ளன. ச. அ. ச உம் கனடாவும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கான வெளிநாட்டு நாணயச் செலவின் பாதிக்கான தொகையாக 14 இலட்சம் டொலர்களை வழங்கும்.

18 ஜனாதிபதியின் பிரகடனத்தினால் (18-19) நடுநிசியில் தேசிய அரசப் பேரவை கலைக்கப்பட்டது. இலங்கையின் 8 வது நாடாளுமன்றத்துக்கான வேட்பு மனு தாக்கல் செய்யும் தினமாக ஜூன் 8 ஆந் திகதி (திங்கட்கிழமை) யும் தேர்தல் தினமாக ஜூலை 21 ஆந் திகதி (வியாழக் கிழமை)யும் புதிய தேசீய அரசப் பேரவை கூடும் தினமாக ஆகஸ்ட் 29 ஆந் திகதி (வெள்ளிக்கிழமை) யும் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண் வெளியை சமாதானத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதில் ஒத்துழைக்க சோவியத் யூனியனும் ஐ. அ. வும் ஐந்து ஆண்டு உடன்படிக்கையை ஜெனிவாவில் கைச்சாத்திட்டன.

21 சுவிட்சர்லந்து வங்கிகளில் கணக்கு வைப்பவர்களையும் அவர்களின் பணங்களையும் இனங் காணுவதை சீராக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்த சுவிஸ் தேசிய வங்கியும் சுவிஸ் வங்கியாளர் சங்கமும் முடிவு செய்துள்ளது என பினான்சியல் டைம்ஸ் அறிக்கை கூறுகிறது.

22 நாட்டின் பல பாகங்களிலும் இலங்கைக் குடியரசின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா சாதாரண முறையில் கொண்டாடப்பட்டது.

24 1973 இல் சோவியத் யூனியனிலிருந்து கடனாகப் பெற்ற 20 இலட்சம் டொன் கோதுமையில் 4 இலட்சம் டொன்களை இந்தியா திருப்பிக் கொடுத்துள்ளது என விவசாய அமைச்சு அதிகாரிகள் கூறினர். 4 இலட்சம் டொன்களை இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்தும்.

25 பினான்சியல் டைம்ஸுக்கு இணங்க ஐக்கிய இராச்சியத்தில் வேலையற்றோர் தொகை 13 இலட்சம் 20 ஆயிரம் அல்லது வேலை செய்வோர் எண்ணிக்கையில் 5.6% ஆகும்.

26 எண்ணெய் இறக்குமதியின் பெறுமானம் 40 கோடி டொலர்களால் வீழ்ச்சியுற்ற போதிலும் ஏப்றில் மாதத்தில் ஐ. அமெரிக்காவின் வியாபாரக் பற்றுக்குறை அதிகரித்து 260 கோடி டொலராயது. முக்கியமாக வெளிநாடு மூலதனங்களினாலும் வெளிநாட்டு ராணுவ உபகரண விற்பனையினாலும் பெற்ற உபரி வருவாய் காரணமாக இந்த வியாபாரப் பற்றுக்குறையை நிவிர்த்தி செய்யலாம் என ஐ. அ. உதவி இறைசேரிச் செயலாளர் கூறினார்.

27 இலங்கையிலிருந்து வெளிநாடுகட்குச் செல்லும் பொறியியலாளரைத் தடுக்கவும் பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் பொறியியலாளரிடமிருந்து எதிர்காலத்தில் உத்தரவாதப் பிணையைப் பெறவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஐந்து வருடங்களுக்கு அரசாங்க சேவையில் ஈடுபட வேண்டும் என்றும் 35,000 ரூபா பெறுமதிக்குச் சமமான தொகையில் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்துக்குக் கொடுக்கும் உத்தரவாதப் பிணை குறிப்பிடுகிறது.

31 சீனாவுக்கு 33 கோடி ஐ. அ. டொலர் பெறுமதியான முப்பது இலட்சம் தொன் கோதுமையை விற்றுள்ளதாகக் கனேடிய கோதுமை வாரியம் அறிவித்துள்ளது. கொடுப்பனவு கனேடிய டொலர்களில் செலுத்தப்படும். சீனாவின் அறுவடையை வறட்சி பாதித்துள்ளதால் சாதாரண மட்டத்தை விட அதிகமான அளவு கோதுமையே மேற்கத்தைய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்ய சீனா நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

வலுவின் பெறுமதிகள்

இன்றைய உலகில் எண்ணெய்க்குக் காணப்படும் நுகர்ச்சிப் போக்கு தொடர்ந்தும் நிலவுமிடத்து, உலகின் எண்ணெய்க் கையிருப்பு ஆக இன்னும் 10 ஆண்டுகளுக்குப் போதுமாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னர், இக் கையிருப்பு 30 வருடங்களுக்குப் போதுமானதென மதிப்பிடப்பட்டிருந்தது. இது உலகில் வலுப் பொருள்கள் பற்றிய விஷயத்தை மீண்டும் கிளப்பி விட்டுள்ளது. இந்நிலையில், 1985 ம் ஆண்டளவிலோ அதற்கு முன்னரோ எண்ணெய் உற்பத்தியாளர்கள் தங்களது எண்ணெய்க் கையிருப்புக்களை ''பதுக்கல்'' செய்ய முயலலாமென எண்ணெய் வள நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அத்துடன் கடந்த டிசம்பரில் நடைபெற்ற பெற்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் மாநாட்டில் எண்ணெய் விலை அதிகரிப்பின் அளவு, காலம் தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள், எண்ணெய் உற்பத்தி செய்யும்பல நாடுகளும், முடிந்து செல்லும் தங்கள் எண்ணெய் வளங்கள் பற்றிக் கவலை கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. இந்நிலைமையை மேலும் மோசமடையச் செய்வது போன்று கடந்த வருடம் தொட்டு உலகில் எண்ணெய்க்கான கேள்வி அதிகரித்து வருகிறது. அண்மையில் எண்ணெய் நெருக்கடியைத் தொடர்ந்து 1974 ன் தொடக்கக் காலத்தி

லிருந்து இக்கேள்வி வீழ்ச்சியுற்று காணப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. மேலும், ஐக்கிய அமெரிக்கா, தனது "வலுப் பொருளிற் தங்கியிராத் திட்ட"த்திலிருந்து மாறி எண்ணெயைப் பெருமளவிற் கொள்வனவு செய்யத் தொடங்கிற்று.

இலங்கையிலும் கூட, உள்ளூரில் பெருமளவு நீர் மின்சக்தி வளமும், ஏனைய வலு மூல வளங்களும் கிடைக்கின்ற போதிலும், எமது பிரதான வலு மூல வளம் என்ற ஸ்தானத்தைத் தொடர்ந்தும் எண்ணெய், அதிகமதிகமாகப் பெற்று வருவதானது, கவலையை ஏற்படுத்தி வருகிறது. முதற் தடவையாக எமது மொத்த இறக்குமதிச் செலவினத்தில் காற் பங்கிற்கும் அதிகமான பகுதி பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிக்குச் செலவாகியுள்ளது. 1973 ம் ஆண்டு வரை, எமது மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 10 சதவீதத்துக்கும் குறைவாக இருந்த பெற்றோலியப் பொருள்களின் இறக்குமதி, 1974 ம், 1975ம் ஆண்டுகளில் 20 சதவீதமாகி, 1976ல் 26 சதவீதமாக அதிகரித்தது. இவ்வகையில் போதிய வலு மூல வளங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியுமா என்ற அச்சம், இன்று ஒரு தேசிய வலுக் கொள்கையின் அவசியத்தை வற்புறுத்தி நிற்கின்றது.

வலுவின் செயற்பாடுகள்

வலு என்பது வேலை அல்லது முயற்சி எனலாம். இது சேமித்து வைக்கப்படும் வலுவையும் உள்ளடக்கும். இன்று உலக நாடுகளினதும் அவற்றின் தலைவர்களினதும் கவனத்தை ஈர்த்துள்ள வலுப் பிரச்சினையானது வர்த்தக ரீதியான வலுவையே — அதாவது கொள்வனவு செய்யக் கூடியதும் விற்பனை செய்யக் கூடியதுமான வலுவைக் குறிக்கிறது.

இத்தகைய வலு நான்கு முக்கிய துறைகளில் உபயோகிக்கப்படுகிறது:

* கைத்தொழில் விவசாயப் பாவனை:

இயந்திரங்களின் இயக்கம், பயிர் நிலங்களை உழவடித்தல், அறுவடை செய்தல், பயிர் வகைகளைக் காய விடுதல் போன்ற செய் முறைகளை இது உள்ளடக்குகிறது;

* வீட்டு வர்த்தகப் பாவனைகள்:

வெளிச்ச மேற்றல், வெப்ப மூட்டல், குளிரூட்டல், தொலைபேசி, டெலிவிஷன், வானொலி, செய்திப் போக்குவரத்துத் துறைகளை உள்ளடக்குகிறது;

* போக்குவரத்து:

மக்களின் போக்குவரத்து வசதிகளும், பொருள்களின் ஏற்றியிறக்கலும்;

* மின்சார உற்பத்தி:

இது ஒரு தனித்த பாவனை அல்ல, ஏனைய பாவனைகளுக்கு இவ்வுற்பத்தி உதவுகிறது.

மின்சார உபயோகத்தைப் பொறுத்தளவில் உலகின் சகல பகுதிகளிலும் ஒரே மாதிரியே காணப்படுகின்றன. வீடுகள், கடைகள், ஆலைகள், கட்டிடங்கள் முதலியன வற்றுக்குக் குளிரூட்டல் அல்லது வெப்ப மூட்டல் என்பன மாத்திரம் அவ்வந் நாடுகளின் கால நிலைக்கேற்பவும், மக்களது வாழ்க்கைத் தரத்துக்கேற்பவும் வேறுபடுகிறது.

மனிதன் முதன் முதல் நெருப்பைக் கண்டுபிடித்தபோது, அவனுக்குப் பின்னர் தோன்றிய தற்போதைய மனிதனது வாழ்க்கையின் சகல அம்சங்களும் வெப்பம் அல்லது வலுவாலேயே கட்டுப்படுத்தப்படவுள்ளதென்பதை நிச்சயம் உணர்ந்திருக்க மாட்டான். மோட்டார் வாகன மொன்றில் நாம் பயணம் செய்யும் போதோ அல்லது ஏதாவது ஒரு என்ஜின் மூலமான பயணப் பெறுகையிலோ நாம் வெப்ப வலுவில் தங்கியிருக்கிறோம்; மின் விளக்கைப் போடுகையில் நாம் மின்சாரத்தால் உற்பத்தி செய்யப்படும் வெப்ப வலுவிற் தங்கியிருக்கிறோம்; இவை தவிர உணவு தயாரித்தல் முதலிய எமது அன்றாட தேவைகளுக்கும் வெப்ப வலு தேவை. ஏன் — எமது உடல் அசைவதற்குக் கூட, எமது உடலிலுள்ள வெப்ப வலு அவசியம். மனித வாழ்க்கையில் வலு இத்துணை முக்கிய ஒரு பங்கு வகிக்கிறது. இவ்வகையில் இன்று மனிதன் வலுவை அதிகமதிகமாக உபயோகித்து வருகிறான். உண்மையில், திரும்பப் பெற முடியாத வலுமூல வளங்களின் விரயத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டிய இன்றைய நிலையில் இது கவனத்திற்கெடுத்துச் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே.

வலு மூலவளங்கள்:

வலு மூலவளங்கள் அனைத்தும் சூரியனிலிருந்தே தோன்றுகின்றன; ஆனல் அவை பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன:

வர்த்தக ரீதியானவை:

பெற்றோலியம்
இயற்கை வாயு
நிலக்கரி
யுரேனியம்

வர்த்தக ரீதியற்றவை:

மரம் அல்லது விறகு
தசை நார் (மனிதனும் மிருகத்தினதும்)
ஈர்ப்பு
காற்று
சூரியன்

வர்த்தக ரீதியான வலு பின்வரும் மூலவளங்களிலிருந்து பெற முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது:

எண்ணெய் மாக்கற்பாறை,
தார் மணல்
புவி வெப்பம் (நிலத்திலிருந்தும் கடலிலிருந்தும)
வலு இயந்திரங்கள்
நேரடி சூரிய வெப்ப வலு
காற்று, கடல் அலை என்பன.

வர்த்தக ரீதியற்ற வலுவைப் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வேறு நாடுகளில் வர்த்தக வலுவால் செய்யப்படும் பல வேலைகள் இங்கு மனிதர்கள் அல்லது மிருகங்கள் செய்கின்றன. அத்துடன், குளிர் கால நிலையுள்ள நாடுகளில், வர்த்தக வலுவைக் கொண்டு செய்யப்பட வேண்டிய வெப்ப மூட்டல், பயிர்களைக் காய வைத்தல் போன்ற வேலைகள் இலங்கை போன்ற கீழை நாடுகளில் சூரியன், காற்று, விறகு முதலியவற்றின் உதவியுடன் செய்யப்படுகின்றன. அத்துடன், பூமத்திய ரேகைக்கு அருகே இருக்கும் நாடுகளில், மனித உடம்புக்குச் சூடு தரத் தேவையான வெப்பம் சூரியனிலிந்து நேரடியாகப் பெறப்படுகிறது.

வலுவும் வாழ்க்கைத் தரமும்

ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீடுகள் பல்வேறு உலக நாடுகளையும் மொத்த தேசிய உற்பத்தி, தலா வருமானம் என்ற அடிப்படைகளிலும் வருடத்துக்கான தலா வலு நுகர்ச்சி என்ற அடிப்படையிலும் பிரித்து ஒப்பிட்டுள்

ளன. ஆனல் இது ஒரு தவருன ஒப்பீடாகும்.

ஏனெனில், வெப்ப வலய நாடுகளைப் பொறுத்த வரையில் அங்குள்ள மக்களின் வீட்டுத் தேவைகளுக்கோ, அல்லது விவசாயத் தேவைகளுக்கோ இன்ன பிறவற்றுக்கோ குறைந்தளவு வர்த்தக ரீதியான வலுவே தேவை. உதாரணமாக வீடுகளைச் சூடாக்கல், தானியங்களைக் காய வைத்தல் போன்றவற்றுக்குப் போதியளவு சூரியவெப்பம் கிடைக்கிறது. விவசாயத்துறை நடவடிக்கைகள் பலவற்றை மிருகங்கள் செய்கின்றன. எனவே, வெப்ப வலய நாடுகளுக்குக் குறைந்தளவிலேயே தலாவலு தேவைப்படுகிறது.

இரண்டாவதாக மனிதர்களது குணதிசயங்கள் இவ்விஷயத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்கர்கள் வலுவைச் சிக்கனமின்றிப் பாவிக்கின்றனர். இதே வேளை, அதே போன்ற கால நிலையைக் கொண்ட மேற்கு ஜெர்மனிய தேசத்தவன் ஓர் அமெரிக்கனது தலா நுகர்ச்சியின் அரைவாசியையே நுகர்கிருன். இங்கே, இரு நாட்டு மக்களது வாழ்க்கைத் தரங்களிலும் வேறுபாடுகள் எதுவும் இல்லாவிட்டாலும், மேற்கு ஜெர்மனிய மக்களது வலுவை வீண் விரயம் செய்யாதபடியால் அவர்கள் குறைந்தளவு வலுவையே உபயோகிக்கின்றனர்.

எனவே, வலுவைப் பொறுத்தளவில் தலா நுகர்ச்சி அடிப்படையில் நாடுகளை ஒப்பிடல் தவறென்றே கூற வேண்டும்.

இலங்கையின் வலு நுகர்ச்சி

இந் நாட்டில் உபயோகிக்கப்படும் விறகின் மொத்த அளவு பற்றி எவ்வித புள்ளி விபரங்களும் கிடையாது. அதே போன்று, இலங்கையில் பல்வேறு வேலைகளும், மனித, மிருக வலுக்களாலேயே மேற்கொள்ளப்படுவதால் இவ்வகையிற் சேமிக்கப்படும் வர்த்தக ரீதியான வலுபற்றிய புள்ளி விவரங்களும் கிடையாது.

கடந்த 5 வருட காலத்தில் உள்ளூரில் உபயோகிக்கப்பட்ட வலு விவரத்தை 1ம் அட்டவணையிற் காணலாம்.

அட்டவணை 1

இலங்கையில் வலு உபயோகம் 1972 — 76

	நீர் மின்சாரம்			பெற்ரோலியம்				மொத்தம்	
			நூறுயிரம் கோடி	ஆயிரம் தொன்களில்	பத்து இலட்சம் பீப்பாய்கள்	பத்து இலட்சம் கலன்கள்	நூறுயிரம் கோடி		நூறுயிரம் கோடி
1972..	846	68	11	930	4.1	244	41	312	52
1973..	698	56	9	964	7.2	253	43	309	52
1974..	997	80	13	766	5.7	201	34	281	47
1975..	1077	86	14	735	5.5	193	32	279	46
1976..	1108	89	14	731	5.5	192	32	281	47

மூலம்:
இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கைகள்.

மாற்று எடுகோள்கள்:
1 கிலோ வொட் = 13,000 பிரித்தானிய வெப்ப அலகு = 12 கலன் சுத்திகரிக்கப்படாத — 11½ கலன் சுத்திகரிக்கப்பட்ட பெற்ரோல்.
1 தொன் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் = 7½ பீப்பாய்கள் = 262½ கலன் = 43,000,00 பிரித்தானிய வெப்ப அலகு.
1 கலன் மோட்டார் காசோலின் — 1,46,000 பிரித்தானிய வெப்ப அலகு.
1கலன்கலந்தவெளியீடு— 168.000 பிரித்தானியவெப்ப அலகு.

இதனை ஒரு தூர அடிப்படையில் ஆராயும்போது 1973ம் ஆண்டின் உலக நுகர்ச்சி பின்வருமாறு அமைந்தது:

அட்டவணை 2

உலக வலு உபயோகம் 1973

	முழு உலகம்	ஐக்கிய அமெரிக்கா	ஜப்பான்	அயர்	இலங்கை
பெற்ரோலியம்	1,18,500	32,000	11,200	223	43
இயற்கை வாயு	47,800	25,200	200		
நிலக்கரி	69,100	13,300	2,200		
நீர்மின்சக்தி	13,200	3,000	800		9
அணு	1,900	900	100		
மொத்தம் ..	2,50,500	74,700	14,500	223	52

மூலம்: ஐக்கிய அமெரிக்க உள்ளகத் திணைக்கள சுரங்க அலுவலகம்
''இன்டர்நேசனல் பெற்ரோலியம் எனுவல் 1973''
''இனர்ஜி பேர்ஸ்பெக்டிவ்ஸ் 2''

யையே இலங்கை உபயோகிக்கிறது. இருந்தபோதிலும் உலக எண்ணெய் விநியோகம் குறையும் பட்சத்தில், விலை அதிகரிக்கவே செய்யும்; எனவே, நாம் மிகக் குறைவாக உபயோகிக்கும் எண்ணெயையும் அதிக செலவிலேயே பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

எண்ணெய் உபயோகம் உலகில் அதிகரித்து வரும் வேகத்தைப் பார்க்கையில், இப் பிரச்சினை எத்துணை பாரியதென்பது தெரிய வரும். அட்டவணை 3, 1960 இலிருந்து 1973 வரை இது எங்ஙனம் அதிகரித்துள்ளதென்பதைக் காட்டும்:

உலகப் பிரச்சினை

இலங்கையில் வர்த்தக ரீதியான வலு உபயோகம் பற்றி ஆராய முன்னர், உலக நிலை பற்றி ஆராய்தல் பொருத்தமுடையதாகும். உலகின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் மிக மிகக் குறைந்த ஒரு தொகை

வலு மூல வளங்களுள் மிகவும் அச் சத்தைத் தருவதொன்ருக விருப்பது பெற்ரோலியமாகும். உடனடியாகவும், சிரமங்களின்றியும் அது தேவையான இடங்களுக்குக் கொண்டு செல்லக் கூடியதாக விருப்பதே இதன் காரணமாகும். (குழாய்கள், கடல், தரை, புகையிரத மார்க்கங்களில் இதனைக் கொண்டு செல்லலாம்). தவிர, இன்றைய உலகின் முக்கிய தேவைகளுக்கு — குறிப்பாகப் போக்குவரத்துத் துறைக்கு — (கார்கள், பஸ்கள், டிரக் வண்டிகள், விமானங்கள், கப்பல்கள், புகையிரதங்கள் முதலியவற்றுக்கு) இது முக்கிய ஓர் எரி பொருளாக விளங்குகிறது. அத்துடன் வீட்டு கைத்தொழிற் தேவைகளுக்கும் பெற்ரோலியம் வெகுவாக விரும்பப்படுகிறது.

1960 முதல் 1976ம் ஆண்டு வரையான உலக, ஐக்கிய அமெரிக்க, இலங்கை பெற்ரோலிய (எண்ணெய்) உபயோகம் அட்டவணை 4 இல் தரப்பட்டுள்ளது.

உலக எண்ணெய் நுகர்ச்சி பற்றிய பல ஆய்வுகள், இந் நுகர்ச்சி

அட்டவணை 3

உலக வலு எபயோகம்

	அலகு	1960	1973
பெற்றோலியம்	பில்லியன் பீப்பாய்கள்	7.9	20.7
இயற்கை வாயு	ட்ரிலியன் கன அடி	16.4	44.4
நிலக்கரி	பில்லியன் தொன்	2.4	2.7
நீர் மின்	பில்லியன் கிலோவோற்	.7	1.3
அணு	பில்லியன் கிலோவோற்	—	.2

மூலம்: ‘‘இனர்ஜி பேர்ஸ்பெக்டிவ்ஸ்’’

வருடாந்தம் 2000 கோடி பீப்பாய்களிலிருந்து 5000 கோடி பீப்பாய்கள் வரை அதிகரிக்குமெனத் தெரிவிக்கின்றன. ஏற்கனவே எண்ணெயை அதிகமாக உபயோகிக்கும் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் மேலும் அதனை அதிகமாக உபயோகிக்குமென்பதுடன், முக்கியமாக பிரேசில், இந்தியா, சோவியத் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தங்களது நுகர்ச்சியை எதிர் காலத்தில் வெகுவாக அதிகரிக்குமென்ற எதிர்பார்க்கையுமே இதன் காரணமாகும். உலக வருடாந்த நுகர்ச்சியில் எதிர்காலத்தில் எவ்வித அதிகரிப்பும் இல்லாது அது 2000 கோடி பீப்பாய்களாக நிரந்தரமாக இருந்தாலும் கூட நிலை அத்துணை சாதகமாக இல்லை. ஏனெனில், உலகின் நிரூபிக்கப்பட்ட எண்ணெய் வளங்கள், ஆகக் கூடியது 30 வருடங்களுக்கே போதுமானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

‘‘நிரூபிக்கப்பட்ட இருப்புக்கள்’’ எனபது உறுதியான ஒரு வார்த்தை அல்ல; ஏனெனில் எண்ணெய் வள இருப்புக்களைப் பூமிக்குள் இறங்கி ஒருவரும் சரியாகக் கணக்கிடவில்லை. அத்துடன் எண்ணெய் விற்பனை தொடர்பாக அரசாங்கங்களுடன் செய்யும் பேரங்களின் அடிப்படையில் எண்ணெய்க் கம்பெனிகள் தங்கள் வள இருப்புக்கள் பற்றிய மதிப்பீடுகளைக் கூட்டி அல்லது குறைத்துக் கொள்வதுமுண்டு. பொதுவாக, எண்ணெய் உபயோகமும் புதிய இருப்புக்களின் கண்டுபிடிப்பும் இணைந்து செல்லுமெனவும், எனவே, எண்ணெய்க்குத் தட்டுப்பாடு என்ற ஒரு நிலை ஏற்படாதெனவும், இவ்வகையில் சுமார் 35 வருடங்களுக்குப் போதுமான நிரூபிக்கப்பட்ட எண்ணெய் இருப்புக்கள் உலகில் எனறும் இருந்து கொண்டே இருக்குமெனவும் கருதும் சில நிபுணர்களும் உள்ளனர். எனினும், புதிதாக எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டவுடன், அதன் அளவை மதிப்பீடு செய்வது போன்றே, அவை முடிவுறுகின்ற போதும் கூடவோ குறையவோ அவை மீண்டும் மதிப்பீடு செய்யப்படுவது வழக்கம்.

புதிய இருப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லாவிட்டாலும் இன்றிலிருந்து இன்னும் 20 க்கும் 50 க்கும் இடைப்பட்ட வருட காலத்துக்குள் எண்ணெய் வளம் முடிந்து விடு மென்பது தெரிந்த ஒன்றே. 1990 ஐ அடுத்த ஆண்டுகளில், எண்ணெய் நுகர்ச்சி குறையுமெனப் பல ஆய்வுகள் கூறுகின்றன. விலை ஒன்றே இவ்வளம் முற்றாக முடிவுறுவதைத் தடுக்கும். எண்ணெயைப் பெற்றுக் கொள்ளல் அரிதாக அரிதாக அதன் விலை பெருமளவில் அதிகரிக்கும். (கவனமாக தயார் செய்யப்பட்ட ஒரு விலைக் கொள்கை காரணமாக) எண்ணெய் வளங்களை அதிகம் அகழாது தங்கள் பூமியில் எண்ணெய் வளத்தை வைத்துக் கொள்ளும் நாடுகள், பின்னால் அதன் மூலம் கூடிய வசதிகளைப் பெறும். இந்நிலையில் பணவீக்கம் இருந்ததோ இல்லையோ எண்ணெய் விலையானது ஏனைய பொது விலைகளை விட எந்நேரத்திலும் அதிகரிக்கலாம். 2000ம் ஆண்டில் எண்ணெய் விலை இரு மடங்காகுமென (இன்றைய டாலர் பெறுமதியில்) சில நிபுணர்கள் கருதுகின்றனர்; சில நிபுணர்கள் இவ்விலை, 8 மடங்காக அதிகரிக்குமென எதிர்பார்க்கின்றனர்; இதன்படி ஒரு பீப்பாயின் விலை 100 டாலராக (இன்றைய பெறுமதியில்) இருக்கும்.

உலகம் இதற்குத் தீர்வாக எதைக் கொண்டுள்ளது? விலைகளை அதிகரித்து, எண்ணெய்க்கான கேள்வியைக் குறைக்கலாமென ஜனாதிபதி கார்ட்டர் கருதுகிறார். எண்ணெய்க்கு மிகக் குறைந்தளவு வரியையே விதிக்க அவர் எதிர்பார்க்கிறார்; ஆனால், அமெரிக்க காங்கிரஸ் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போற் தோன்றுகிறது.

புதிய வலு மூல வளங்களைக் கண்டுபிடிக்கவும், வலு மூலவளங்களைப் பாதுகாப்பதற்குமான பல்வேறுநவீன ஆராய்ச்சி முறைகளை உலக நாடுகள் பலவும் தற்போது மேற்கொண்டு வருகின்றன. இதில் குறிப்பிடத்தக்க வெற்றிகளும் எய்தப்பெற்றுள்ளன. இருந்தும் இவற்றுள் சிலவற்றுக்குத் தடைகளும் இருக்கத்தான் செய்கின்றன. சூரிய வெப்பம், புவி வெப்பம், அணு சக்தி, கடல் அலை, மாக்கற்பாறை முதலியவற்றிலிருந்து வலுவை உற்பத்தி செய்தற்கான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், பெருமளவு செலவு, சூழல் அசுத்தமடையும் அபாயம், பாதுகாப்பு போன்ற பல தடைகள் காணப்படுகின்றன.

உதாரணமாக ஜனாதிபதி கார்ட்டரின் திட்டப்படி, வலு உற்பத்தி மூலவளத்தைப் பொறுத்தளவில், எதிர் காலத்தில் அணு சக்தியை விட, நிலக்கரியே முக்

அட்டவணை 4

உலக எண்ணேம் உபயோகம் 1960 — 76

	முழு உலகம்	ஐக்கிய அமெரிக்	உலக சோஷலிஸ நாடுகள்	கிரீஸ்	இலங்கை
1960	7,929	3,275	1,108	—	—
1961	8,492	3,287	1,184	—	—
1962	8,788	3,417	1,318	—	—
1963	9,777	3,851	1,414	27	4
1964	10,515	3,959	1,522	30	5
1965	11,318	4,126	1,647	31	5
1966	12,166	4,325	1,765	34	6
1967	12,993	4,585	1,927	40	6
1968	14,252	4,902	2,061	41	6
1969	15,586	5,160	2,228	45	7
1970	16,682	5,364	2,374	45	7
1971	17,701	5,555	2,622	54	7
1972	18,745	5,990	2,608	63	7
1973	20,426	6,317	3,173	77	7
1974	19,790	6,078	3,034	77	6
1975	19,317	5,946	3,232	70	6
1976	21,000	6,350	—	—	5

கிய இடம் பெறவுள்ளது. ஆனல், நீர்மின் உற்பத்தியின் அபிவிருத்தி பற்றி அத்துணை அக்கறை செலுத்தாதது புதிராகத் தோன்றுகிறது; எனினும் இயற்கைச் சூழல் பாதுகாப்பு வாதிகள் இதற்கும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். 1,78,000 மெகவோட் நீர் மின் சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய ஐக்கிய அமெரிக்காவில் 55,000 மெகவோட்டை மாத்திரமே உற்பத்தி செய்கிறதென்பது குறிப்பிடத்தக்கது. நீர் மின் சக்தி தொடர்பான உள்ளார்ந்த வளம் தற்போது வெகுவாக அதிகரித்திருக்கும்; ஏனெனில் மேலேயுள்ள 1,78,000 மெகவோட் வளம், 1964ல் கணிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. மின் வலு பற்றி பின்னர் விவரிக்கப்படும்.

1976ல் ஐக்கிய அமெரிக்கா, இவ்வலுவை எங்ஙனம் உபயோகித்ததென்பதை அட்டவணை 5 விளக்குகிறது;

அமெரிக்கர் தங்கள் போக்குவரத்துக்கென வெளிநாட்டு எண்ணெயிற் தங்கியிருப்பதைக் குறைத்துக் கொள்ளல் அத்துணை இலகுவானதல்ல; இவ்வெண்ணெயில் அரைப் பங்குக்கு மேல் அவர்களது மோட்டார் வாகனங்களுக்குச் செலவாகின்றது.

இலங்கையில் உலக நிலைமைகளின் தாக்கம்

உலகப் பிரச்சினைகள், குறிப்பாக அமெரிக்கப் பிரச்சினைகள் இலங்கையில் எவ்விதத் தாக்கங்களை ஏற்படுத்தும்? அமெரிக்கப் பிரச்சினைகளை நாம் முற்றாகக் கவனத்திலெடுக்காது விட்டுவிட முடியுமா? இதற்கு இல்லை என்பதே பதிலாகும். ஏனெனில், வட அமெரிக்காவில் காணப்படும் எண்ணெயுடன் இணைந்து விட்ட மக்களது வாழ்க்கை முறையானது ஏற்கனவே, ஜப்பான், மேற்கைரோப்பா முதலிய நாடுகளுக்கு பரவிவிட்டது. இது உடனடியாக நின்று விடுமென்று கூற முடியாது. இதனல், எண்ணெய்க்கான கேள்வி அதிகரித்து, அதன் விளைவாக அதன் விலையும் அதிசரிக்கும். ஒரு பீப்பாய் 100 டொலர் வரையில் இவ்விலை அதிகரிப்பு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந் நிலையில் எமது நாடுஇவ்வுயர் விலையில் எண்ணெயைக் கொள்வனவு செய்ய முடியாதென்பதுடன், தற்போதைவிடக் குறைந்த அளவு எண்ணெயையே நுகரக்கூடியதாகவிருக்கும்.

நாம் எவ்வளவு தூரம் எண்ணெயில் தங்கியிருக்கிறோம்? எண்ணெய்க்குப் பதிலீடாக நாம் நீர் மின்னையோ, மரத்தையோ, காற்றுடிசக்தியையோ, சூரிய வெப்பத்தையோ உபயோகிக்க முடியுமா? திருகோணமலைக் கடற்கரைக்கப்பால் சமுத்திர மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென ஆர்தர் கிளார்க் கூறியுள்ளார். 1995 ம் ஆண்டளவில் இலங்கை ஒரு சிறிய ஆனல் பலம் வாய்ந்த அணு உற்பத்தி நிலையத்தைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கூறுவோரு முள்ளனர்.

இலங்கையில் உபயோகிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கடந்தகால விற்பனை விவரங்கள் சில உண்மைகளை எமக்குக் காட்டும். அட்டவணை 6 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம், அது உள்ளூர் விநியோகத்துக்குப் பொறுப்பாக வந்த பின்னர் நடைபெற்ற உள்ளூர் விற்பனைகளைக் காட்டுகிறது:

அட்டவணை 5

ஐ. அ. வலுவின் உபயோகம் நேரடியான உபயோகம்

	வீட்டு வர்த்தகப் பாவனை	கைத் தொழில்	போக்கு வரத்து	மொத்தம்	மின்சாரம்	மொத்தம்
எண்ணெய் ..	7	6	19	32	3	35
வாயு ..	8	8	1	17	3	20
நிலக்கரி ..		4		4	10	14
நீர்மின் ..		3			3	3
அணு ..					2	2
மொத்தம் ..	15	18	20	53	21	74
மின்சாரம் ..	12	9		21		
மொத்தம் ..	27	27	20	74		

மூலம்: ஐக்கிய அமெரிக்க சுரங்க அலுவலக செய்தி வெளியீடு 14.3.77.

பெற்றோலிய நுகர்வானது, அது உச்சமாகக் காணப்பட்ட 1969 ன் 4 கோடி 40 இலட்சம் கலனிலிருந்து, 1975 ன் விசேஷ 80 இலட்சம் கலனுக்குக் குறைந்தது. 1976 ல் சிறு அதிகரிப்புடன் இது 3 கோடி கலனுயிற்று. மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மென்ரக சாமான் வண்டிகள் என்பனவற்றுக்கே பெற்றோல் உபயோகிக்கப்படுகிறது. 1974 ல் பெற்றோலிய நுகர்வு $\frac{1}{3}$ பங்கால் குறைந்தமையானது 1973 ல் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் பெற்றோல் விலையை அதிகரித்தமையால் உள்ளூரிலும் அதன் விலை உயர்ந்தமையின் நேரடி விளைவே. இந்த 3 கோடி கலன்களும் அப்படியே இருக்குமா, குறையுமா என்பது, மக்கள் எவ்வளவு தூரம் தங்கள் சொந்த வாகனங்களை விடுத்துப் பொது வாகனங்களிற் பயணம் செய்ய முனைகின்றனர் என்பதிலும், மோட்டார் கார்களுக்கு பதிலீட்டு வலுக்களைத் தேடிக் கண்டு பிடிப்பதிலுமே தங்கியுள்ளது.

1976 ல் நுகரப்பட்ட மொத்தப் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுள பெற்றோல, போக்குவரத்து டீசல் என்ற இரு போகுவரத்து வலுக்களும் அரைப்பங்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. லொறி, பஸ், புகையிரதம் என்பனவற்றால் பிரதானமாகப் பாவிக்கப்படும் போக்குவரத்து டீசலின் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளது. 1964ல் 4 கோடி கலனகவிருந்த இப்பாவனை, 1976ல் 6 கோடி 60 இலட்சம்கலனக உயர்ந்துள்ளது. மக்களினதும், பொருட்களினதும் போக்குவரத்தை உள்ளடக்கும் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது. இந் நடவடிக்கைகள் தொடர்ந்து அதிகரிப்பதாயின், எண்ணெய்க்கான தேவையும் அதிகரிக்கவே செய்யும்: ஆனல் பெருந் தெருப் போக்குவரத்திலிருந்து புகையிரதப் போக்குவரவு அல்லது நீர்வழிப் போக்குவரவு முதலியவற்றுக்கு மாறுவதாலோ அல்லது போக்குவரத்துத்துறையின் ஒரு பகுதியை மின்சார மயப்படுத்துவதாலோ இவ்வதிகரிப்பைக் குறைக்கலாம். இவ்விஷயம் பின்னர் ஆராயப்படும்.

அட்டவணை 6

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வருடாந்த உள்ளூர் விற்பனவுகள்

(பத்து இலட்சம் கலன்களில்)

	பெற்றோல்	போக்குவரத்து டீசல்	கனரக டீசல்	உலை எண்ணெய்	மண்ணெண்ணெய்	மொத்தம்
1964	42	40	22	22	50	176
1965	41	43	22	30	51	187
1966	41	47	22	34	57	201
1967	41	53	24	40	61	219
1968	42	56	25	41	65	229
1969	44	60	24	40	69	237
1970	44	66	23	30	76	239
1971	41	65	22	26	75	229
1972	39	69	18	41	78	245
1973	38	68	17	55	76	254
1974	28	63	11	39	60	201
1975	28	64	9	33	59	193
1976	30	66	9	29	58	102

மூலம்: பெற்றோலியக் கூட்டுத்தாபன அறிக்கைகள்

நிலையான இயந்திரங்களை இயக்க உபயோகமாகும் கனரக டீசல் 1964 ன் 2 கோடி 20 இலட்சம் கலனிலிருந்து, 1976ன் 90 இலட்சம் கலனுக்கு வெகுவாகக் குறைந்து விட்டது. யாழ்ப்பாணம் போன்ற பல்வேறு மாகாணப் பகுதிகளிலும் உள்ளூர் மின்சாரம்நீரியல்மின்சாரமயப்படுத்தப்பட்டமை, களனி திஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் செயற்படத் தொடங்கிய பின் கொழும்பில் டீசல் ஜெனரேட்டர்களது பாவனை முற்றாகக் குறைந்து விட்டமை, தோட்டத் தொழிற்சாலைகள் படிப்படியாக மின்சார மயமாக்கப்பட்டு வருதல் என்பவற்றின் பிரதிபலிப்பே இதுவாகும்.

உலை எண்ணெயைப் பொறுத்தளவில் அதன் பாவனை 1964க்கும் 1976 க்கு மிடையே பெருமளவு தளம்பிக் காணப்படுகிறது. 1964 ன் 2 கோடி 20 இலட்சம் கலனிலிருந்து, 1976 ன் 2 கோடி 90 இலட்சம் கலன் வரை ஒரு படிப்படியான அதிகரிப்புப் போன்று காணப்படுகிறது. வரட்சிக் காலங்களில் குறிப்பாக 1973 ல் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் உலை எண்ணெய்ப் பெருமளவில் உபயோகித்தமையால் இடைக்கிடையேயான அதிகரிப்புக்காணப்படுகிறது. மறுபக்கையில், 1974ல் ஏற்பட்ட எண்ணெய் விலை அதிகரிப்பானது தேயிலையையும் மற்றும் ஏனைய விவசாயப் பொருட்களையும் உலர வைப்பதற்கு விறகு போன்ற மரபு வழிப் பொருட்களை நாடத் தூண்டியது.

பிரதானமாக வீட்டுத் தேவைகளுக்குபயோகமாகும் மண்ணெண்ணெய் 1964 ன் 5 கோடி கலனிலிருந்து 1973 ன் 7 கோடி 60 இலட்சம் கலனாக உயர்ந்து பின்னர், 1974 முதல் 1976 வரையான காலப்பகுதியில் 20 % குறைவைக் காட்டி வருகிறது. விறகே இதற்கான முக்கிய பதிலீடாக இருக்கிறது. இது நாட்டின் காட்டு வளத் தேவைக்கு நன்று என்பதும் சமையல் துறையில் மின்சாரம், காஸ் (வாயு) போன்றவற்றை உபயோகிக்க முடியுமா என்பதும் பின்னர் ஆராயப்படும்.

பெற்றோல், போக்குவரத்து டீசல், கனரக டீசல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய் முதலியவற்றை உள்ளடக்கும் இலங்கையின் மொத்த எண்ணெய்ப் பாவனை மேற்படி அட்டவணை காட்டுவது போன்று 1964 ன் 17 கோடி 60 இலட்சம் கலனிலிருந்து 1973 ன் 25 கோடி 40 இலட்சம் கலன் உச்சத்தைஅடைந்து, 1976ல் 19 கோடி 20 இலட்சம் கலனாகக் குறைந்தது. இக் குறைவுக்கு எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் எண்ணெய் விலையை அதிகரித்தமையே காரணம்.

இங்கு பாவிக்கப்பட்ட எண்ணெய் வகைகளும், அவை பாவிக்கப்பட்டதன நோக்கங்களும் இந்நாட்டின் அபிவிருத்தி மாதிரிக்கும், மட்டத்துக்குமே உரிய தனிப்பட்ட ஒன்றாகவுள்ளன. எண்ணெயிலிருந்து மின்சாரத்துக்குச் செல்ல முதல், மிக நவீனமானதும், நன்கு வளர்ச்சியடைந்ததுமான பொருளாதாரத்தைக் கொண்ட ஐக்கிய அமெரிக்காவிலும், அதே போன்று இலங்கையிலும் எண்ணெய் எங்ஙனம்பாவிக்கப்படுகிறதென்பதைத் தெரிந்து கொள்ளுதல் நன்றாகும். அட்டவணை 7, 1976 ம் ஆண்டுக்கான எரிபொருள் வகைப் பிரிவுகளைக் காட்டுகிறது.

இலங்கையில் மின்சாரப் பதிலீடு

இலங்கையில், எண்ணெய்க்கு முக்கிய குறை நிரப்பு வலு மூலமாக நீரியல் மின்சாரமே காணப்படுகிறது. அட்டவணை 1 இதனைக் காட்டும். பாவனையைப் பொறுத்தளவில். எண்ணெய்க்கான மாற்றாக மின்சாரமே திகழ்கிறது. அது எண்ணெயாலோ அல்லது நீர் வீழ்ச்சி மூலமாகவோ உற்பத்தி செய்யப்படலாம்.

எனினும், 1948 முதல், சகல அபிவிருத்தித் திட்டங்களிலும் நீரியல் மின்சாரத்தின் முக்கியத்துவம் விசேடமாக வலியுறுத்தப்பட்டது. இலங்கையின் மின்சார விநியோகத் திட்டங்களுக்கான செலவுகள் வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக உலக வங்கியிடமிருந்து கடனாகப் பெறப்பட்டன. நாட்டின் வலுத் திட்டங்களைப் பொறுத்தளவில் வெளி நாட்டு உதவிகள் முக்கிய அம்சமாக இருந்து வந்துள்ளன. மின்சார வலு ''சிறந்த ஒரு'' முதலீட்டுத் துறையாகக் கணிக்கப்பட்டமையாலேயே நிதித்துறை ஏஜன்சிகள் இதற்கான கடன்களை உடனடியாக உதவி வந்துள்ளன. கடந்த சில பத்தாண்டுகளாக கிராம மின்சார மயமாக்கம், மின்சார வலு விநியோகத் திட்டத்தின் ஓரம்சமாக விளங்கி வந்துள்ளதுடன், அதில் பெருமளவு கவனமும் செலுத்தப்பட்டு வந்துள்ளது. விவசாயத்துறை, கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி என்பனவற்றுக்கு மாத்திர மின்றி, நவீன மயமாக்கத்தின் ஒரு மூலமாகவும் இது விளங்குகிறதென்பதே இதற்கான காரணமாகும். எனினும், திட்டமிட்டதுபோன்று இக்கிராம மின்சாரத் திட்டத்தை அமுல் செய்வதில் சில செயன்முறைப் பிரச்சினைகள் உள்ளன.

அட்டவணை 9, 1964 முதல் 1976 வரை பல்வேறு துறைகளுக்குமான மின்சார விற்பனை பற்றிய விவரங்களைத் தருகிறது.

மொத்தத்தில் கைத்தொழில் நுகர்வு 40 % இலிருந்து 50 % வரை அதிகரித்துள்ளது கவனிக்கத்தக்கது. அத்துடன், 1964க்கும் 1970க்குமிடையே மொத்த விற்பனையானது மூன்றுமடங்காக அதிகரித்துள்ள அதே வேளை,

அட்டவணை 7

1976 ல் ஐ. அமெரிக்காவிலும் இலங்கையிலும் பாவிக்கப்பட்ட எண்ணெய் எரிபொருட்கள்

		ஐ. அமெரிக்கா		இலங்கை	
		10 இலட். கலன்	%	10 இலட். கலன்	%
கேசொலின் (பெற்றோல்)	...	89,635	45.5	30	15.6
டீஸ்டில்லேட் (டீசல்)	...	39,837	20.2	75	39.1
உலை எண்ணெய்	...	34,954	17.7	29	15.1
மண்ணெண்ணெய்	...	12,211	6.2	58	30.2
ஏனையன	...	20,521	10.4		
மொத்தம்	...	197,158	100.	192	100.

மூலம்: அமெரிக்கச் சுரங்கத் திணைக்களம் (அமெரிக்காவுக்கு) அட்டவணை 7 லுள்ள எண்கள், அட்டவணை 8 இல் அவை பாவிக்கப்பட்ட துறைகளைக் காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் சகல கனரக டீசலும், உலை எண்ணெயும் கைத்தொழிலுக்கே பாவிக்கப்பட்டன எனக் கொள்ளப்பட்டன.

அட்டவணை 8

அமெரிக்காவிலும் இலங்கையிலும் 1976 ல் துறைசார் அடிப்படையில் எண்ணெய் பாவிக்கப்பட்ட முறை

		ஐ. அமெரிக்கா		இலங்கை	
		10 இலட். கலன்	%	10 இலட். கலன்	%
வீட்டு, வர்த்தகத்துறை	...	33,012	16.8	58	30.2
கைத்தொழில் ...	...	23,296	11.8	38	19.8
போக்குவரத்து ...	...	120,869	61.3	96	50.0
மின்சார உற்பத்தி	...	19,565	9.9		
ஏனையன ...	...	416	.2		
மொத்தம் ...	...	197,158	100.	192	100.

மூலம்: அமெரிக்கச் சுரங்கத் திணைக்களம் (அமெரிக்காவுக்கு)

அட்டவணை 9

மின்சார விற்பனை 1964 — 76

(கைசுவேட் அளவில்: 1 கைகவேட் = 10 இலட்சம் கிலோவோட்)

			சில்லறை						
			கைத்தொழில்	வர்த்தகம்	வீட்டுத் தேவை	மொத்தம்	உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெரிய தொழில்	ஏனையன	மொத்தம்
1964	...	...	132	58	42	232	75	14	321
1965	...	...	141	63	44	248	84	14	346
1966	...	...	160	67	45	272	95	40	407
1967	...	...	213	72	48	333	111	28	472
1968	...	...	251	78	53	382	122	34	538
1969	...	...	294	76	57	429	148	8	585
1970	...	...	329	87	62	478	164	11	653
1971	...	...	373	93	65	531	191		722
1972	...	...	410	102	72	584	210		794
1973	...	...	466	109	81	656	211		867
1974	...	...	478	117	82	677	215		892
1975	...	...	520	124	86	730	230		960
1976	...	...	514	137	93	744	251		995

மூலம்: அரசாங்க மின்சார வேலைத் திணைக்களம், இலங்கை மின்சார சபை.

கைத்தொழிற் பாவனை 4 மடங்காக அதிகரித்துள்ளது.

உள்ளூராட்சி மீள விற்பனவுகள், சில்லறை விற்பனவுகள், என்பனவற்றுள் மூன்றில் ஒரு பங்கு, கைத்தொழில், வர்த்தக, வீட்டுத் தேவைத் துறைகள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்டன என்ற அடிப்படையிம் (இக் கணக்கீடு முற்றிலும் சரியானதொன்றன்று) அட்டவணை 10 மின்சார வலுவின் முடிவுப் பயனைக் காட்டுகின்றன.

அட்டவணை 13, கைத்தொழில் மின்சாரப் பாவனை அதிகரித்து வருமாற்றைக் காட்டுகிறது: இது கைத்தொழிலின் வளர்ச்சியினதும், முன்னர் டீசல் மூலம் இயங்கி வந்த தேயிலைத் தொழிற்சாலைகள் மின்சார மயமாக்கப்பட்டமையினதும் பிரதிபலிப்பேயாகும்.

கைத்தொழிலுக்கான மின்சாரப் பாவனை, 1964 முதல் 3¾ மடங்காக அதிகரிததுள்ளதை, அட்டவணை 13 காட்டும் அதே வேளை, வர்த்தக, வீட்டுப்பாவனைகள் ஆக 2½ மடங்காலேயே அதிகரித்துள்ளமையையும் அது காட்டுகிறது. எனினும், இவ்வதிகரிப்பு வதங்கள் மேலே குறிப்பிட்ட உள்ளூராட்சி மீள விற்பனவு தொடர்பான சரியான எண்களிலேயே தங்கியுள்ளன. இலங்கையில் வலு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுவதில் உள்ள முக்கிய பிரச்சினை சரியான பிரசுரிக்கப்பட்ட தரவுகள் இல்லாமையே; இது பறறிப் பின்னர் வலியுறுத்தப்படும்.

மின்சார உற்பத்தி பற்றி ஆராய முன்னர், இலங்கையிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் மின்சாரத்தின் முடிவுப்பயன்பாட்டை ஒப்பிட்டுக் காட்டும் அட்டவணை 11, 12 என்பவற்றை நோக்கல் பொருத்தமானதாகும்.

மின்சார வலுப் பாவனை உட்பட, வலுவைப் பொறுத்தளவில், ஐ. அமெரிக்கா, சிக்கனக் கட்டுப்பாடுகளின்றி அதனைச் செலவிட்டு வருவதுடன், சில அறிஞர்கள் இவ்வகையில் அது இனி மேலும் வளர முடியாதளவு உச்ச நிலையை அடைந்து விட்டதெனக் கருதியபோதிலும், போக்குவரத்துத் துறையில் இங்கு மின்சாரம் முக்கியம் பெறவில்லை; இங்கு மிகக் குறைந்தளவே புகையிரதங்கள் மின்சார மயமாக்கப்பட்டுள்ளன. இதே வேளை, மேற்கு ஜெர்மனியில் 80% ஆன

MOWBRAY COLLEGE

அட்டவணை 10

முடிவுப் பாவனைகளுக்கென ஒதுக்கிடு மின்சார விற்பனைகள்

	கைத்தொழில் துறை	வர்த்தக வீட்டுத்துறை: வர்த்தக துறை	வீட்டு துறை	மொத்தம்	மொத்தம்
1964	161	88	72	160	321
1965	173	95	76	171	344
1966	205	112	90	202	407
1967	260	118	94	212	472
1968	303	130	105	235	538
1969	346	130	109	239	585
1970	388	145	120	265	653
1971	436	157	129	286	722
1972	480	172	142	314	794
1973	537	179	151	330	867
1974	549	189	154	343	892
1975	596	201	163	364	960
1976	597	221	177	398	995

புகையிரதங்கள் மின்சார மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் நகரப் புகையிரதப் போக்குவரத்தும், ட்ராம் போக்குவரத்தும் முழுமையாக மின்சாரமயமாக்கப்பட்டுள்ளன.

மின்சார வலு மூலங்கள்

மின்சாரமானது, குழாய்கள், பௌசர்கள், புகையிரதங்கள், கப்பல்கள் போன்றன மூலம் எடுத்துச் செல்லக்கூடிய ஒன்றல்ல; ஆனால், எண்ணெயும், இயற்கை வாயுவும், வெளிச்ச மேற்றவும், வெப்ப மேற்றவும், இயந்திர இயக்கத்துக்கும் நேரடியாகப் பயன்படுத்தக் கூடியவை; நிலக்கரியும் இங்ஙனம் வெப்பத்தையும், இயந்திர இயக்கத்தையும் தரவல்லது: எனினும் நீரியல் வலு அத்துணை தூரம் பன்முகப் பாவனைக்கு உகந்ததல்ல. அமெரிக்கக் கைத்தொழிற் புரட்சிக்குதவிய நீர் இயந்திரங்கள் இப்போது பயன்தரக் கூடியனவாக இல்லை; அத்துடன் அவற்றில் பாரிய தொழில்நுட்பப் பிரச்சினைகளும் உள. எனவே புவியீர்ப்பின் மூலம் குன்றுகளிலிருந்து கடலை நோக்கி ஓடும் தண்ணீரில் உள்ள வலு, கட்டுப்பட்ட ஒன்றாகவே உள்ளது. எனினும் இது எவ்வளவு தூரம் உண்மை?

மிக மலிவாக எடுத்துச் செல்லக் கூடியதாக விருத்தல், உடன் உற்பத்தி செய்யக் கூடியதாக விருத்தல், வெளிச்ச மேற்றல், இயக்கம், வெப்ப மேற்றல் உட்பட பல்வேறு விஷயங்களுக்குப் பயன்படுத்தக் கூடியதாக விருத்தல் போன்ற பல்வேறு நன்மைகள் மின்சார வலுவில் உள்ளதானது மேற்சொன்ன கட்டுப்பாடுகளைப் போக்கி இது சிறந்த ஒரு பன்முக வலுப் பொருளென்பதைக் காட்டுகிறது. வாகனப் போக்குவரத்து அதிகம் இல்லாத பாதைகளில் வாகனங்களை இயக்க முடியாமையே இன்று மின்சாரத்தைப் பொறுத்துள்ள ஒரு முக்கிய முறையாகும்; இதுவும் பாட்டரி உற்பத்தியில் நவீன தொழில்நுட்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நிச்சயம் சாத்தியமாகும்.

இலங்கையின் வலு உற்பத்தி செய்யப் பயன்படும் மூலவளங்கள் பற்றிய விவரங்கள் அட்டவணை 13 ல் தரப்பட்டுள்ளன.

இரு முக்கிய அம்சங்களை இவ்வட்டவணை விளக்குகிறது. நீர் மின்சார உற்பத்தி இன்றேல், 1976 ல் வலு உற்பத்திக்கு இலங்கைக்கு 8½ கோடி கலன் எண்ணெய் தேவைப்பட்டிருக்குமென்பது முதலாவது; பீக்ஸ் இன்றி இது 3 கோடி டொலர் அல்லது 24 கோடி ரூபா செலவை ஏற்படுத்தியிருக்கும். இது 1975 ன் நாட்டின் இறக்குமதிச் செலவினங்களில் 1/20 பங்காகவிருந்தது.

ஆனால், எதிர்பார்க்கப்படுவது போல, சர்வதேச எண்ணெய் விலைகள் தொடர்ந்து வேகமாக அதிகரிக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளும் பட்சத்தில், 1976 ல் உற்பத்தியான நீர்மின்சாரத்தின் பெறுமதி, 2000 ம் ஆண்டில் 1976 ல் இறக்குமதிகளுக்கென இலங்கை செலவிட்ட மொத்தத் தொகைகைகுச் சமனாகவிருக்கும்.

அட்டவணை 11

1972ல் ஐ. அமெரிக்காவிலும் இலங்கையிலும் மின்சாரத்தின் முடிவுப் பாவனை 1972

	ஐ. அமெரிக்கா: கைக வோட்	%	இலங்கை: கைக வோட்	%
வீட்டு, வர்த்தகத்துறைகள் ...	927,602	58.1	314	39.5
கைத்தொழில்	664,898	41.6	480	60.5
போக்குவரத்து	4,534	·3		
மொத்தம்	1,597,034	100.	794	100.

அமெரிக்க மூலம்: சமஷ்டி வலு நிர்வாக அறிக்கைகள்.

அட்டவணை 12

ஐ. அமெரிக்காவிலும் இலங்கையிலும் மின்சாரத்தின் முடிவுப் பயன்பாடு 1974

	ஐ. அமெரிக்கா: கைக வோட்	%	இலங்கை: கைக வோட்	%
வீட்டு வர்த்தகத்துறை ...	1,080,000	63.5	343	38.5
கைத்தொழில்	617,000	36.3	549	61.5
போக்குவரத்து	3,000	.2		
மொத்தம்	1,700,000	100.	892	100.

மூலம்: ''2000 ல் அமெரிக்க வலு'' 1975)

அட்டவணை 13

இலங்கை மின்சார உற்பத்தி 1964 — 76

	வெப்ப மின் உற்பத்தி 10 இலட். கலன் எண்ணெய்	வெப்ப மின் உற்பத்தி கிலோவோட் கலன்	வெப்ப மின் உற்பத்தி கைக வோட்	நீர் மின் களம் கைக வோட்	மொத்தம் கைக வோட்
1964			68	315	383
1965			64	345	409
1966			87	390	477
1967			161	399	560
1968			160	465	626
1969	14.5	11.0	161	540	722
1970	3.0	15.2	45	740	785
1971	1.8	13.1	24	825	849
1972	7.4	13.2	98	846	944
1973	20.5	13.7	281	698	979
1974	1.1	12.8	14	997	1,011
1975	.1	10.1	1	1,078	1,079
1976	1.8	13.8	24	1,109	1,133

மூலம் : அரசாங்க மின்சார வேலைத் திணைக்களம், இலங்கை மின்சார சபை அறிக்கைகள்

ஆனால், 2000 ஆம் வருடத்தில் மின்சாரப் பாவனை தற்போதிலும் பன்மடங்சாக அதிகரிக்கும் என்பதைக் கருத்திற் கொள்ளுகையில் நாட்டில் நீரியில் மின்சார அபிவிருத்தித் திட்டங்களை இயன்றளவு விரைவாகவும் பரந்தளவிலும் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் புலனுகும்.

நீரியல் மின்சாம்

எந்த அளவில் எவ்வளவு விரைவில் நீரியல் மன்சாரம் விருத்தி செய்யப்படலாம்? இலங்கை மன்சார சபையின் தற்போதைய செயற் திட்டம் அட்டவணை 14 இல் காணப்படுகிறது.

1960 ல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் பின்னர். ''பொருளாதார ரீதியில் சாத்தியமானவை'' என ஐ. நா. அபிவிருத்தித் திட்டமும். ஏனைய நிறுவனங்கள் சிலவும் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படை சார்ந்ததாகவே இத் திட்டம் காணப்படுகிறது. இவ்வறிக்கைகளின்படி இலங்கையின் உள்ளார்ந்த நீரியல் வளத்தின்

உற்பத்தித் திறன்	1,500—1,600 மெகவோட்
வருடாந்த வலு . .	6,000—8,000 ஜிட.

அட்டவணை 14

நீரியல் மின்சார அபிவிருத்திக்கான இலங்கை மின்சார சபைத் திட்டம்

	மெகவோட் திறன்	வருடாந்த கைகவோட்	10 இலட். கலனுக்குச் சமன்
1976 உக்குவளையுடன்	328	1,536	123
1979 போவத்தென்னை	40	108	9
	368	1,644	132
1981 கன்யன்	30	144	12
	398	1,788	143
1983 சமனல	120	588	47
	518	2,376	190
1988 கொத்மலை	100	440	35
	618	2,816	225

மூலம் : பொறியியலாளர் நிறுவனம், இலங்கை மின்சார சபை அறிக்கைகள்

இது பற்றிக் குறிப்பிடும் அண்மைய அறிக்கை நீர்ப்பாசன மின் சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சால் 1975 டிச. 31 ல் வெளியிடப்பட்டஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் மகாவலி கங்கை நீர்ப்பாசன நீர்மின் வலு பற்றிய அறிக்கையாகும். ஆனால், இவ்வறிக்கை 1968 ல் ஒரு பீப்பாய் 2 டொலராகவிருக்கையில் தயார் செய்யப்பட்டதாகும். இதன் 2ம் பக்கத்தின் மூலம் எதுவுமின்றி பின்வரும் விவரம் காணப்படுகிறது:

''இலங்கையின் நதிகளின் மொத்த உள்ளார்ந்த நீர்வலு வளம், வருடத்துக்கு 630 கோடி கிலோவோட் என மதிப்பிடப்பட்டுள்ளது''

அததுடன், அதன் 49 ம் பக்கத்தில் ''பின்வரும் மகாவலி நதியின் உள்ளார்ந்த வளம், அடுத்த 20 வருடத்துக்கான முழு நாட்டினதும் கேள்வியை விடவும் அதிகமாகும்''—

மகாவலி உற்பத்தித்திறன்	955 மெகவோட்
வருடாந்த வலு . .	4,720 கைகாவோட்

எனவும் குறிக்சப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட இந்தமகவலியின் உற்பத்தி அளவும் ''மொத்த உள்ளார்ந்த'' வளமும் 1976 ன் உற்பத்தியை விடப்பன்மடங்கு அதிகமென்பது உண்மையே. எனினும், 1995 ல் இம் ''மொத்த உள்ளார்ந்த வள'' த்தை கேள்விமீறிவிடு மென பல எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர்; தொடர்ந்து அதிகரிக்கும் வலுத் தேவைகளைச் சமாளிக்க அணுசக்தி போன்ற நவீன மூலவளங்கள் தேவைப்படுமெனவும் அவர்கள் கருதுகின்றனர். எனவே, ''மொத்த உள்ளார்ந்த வளங்கள்'', ''பொருளாதார ரீதியில் அவை சாத்தியமானவை'' என்றெல்லாம் கூறப்படுவது எவ்வளவு தூரம் சரியென்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

''நிலத்தில் விழும் ஒவ்வொரு துளி நீரும் வீணே கடலைச் சென்றடையாது பயன்படுத்தப்பட வேண்டு''மென பராக்கிரமபாகு கூறினர். ஆனல் கடலை நோக்கிச் செல்லும் ஒவ்வொரு துளி நீரையும் முற்றுகப் பயன்படுத்தக் கூடிய தொழில் நுட்பம் அப்போதும் இருக்கவில்லை; இன்றும் இல்லை. எனவே ''மொத்த

உள்ளார்ந்த வளம்'' என்பதுதிட்டங்களுக்கான ஒரு அளவீடே; தரப்பட்ட ஒரு கால கட்டத்தில் அத்திட்டத்தின் உற்பத்தி வெளியீட்டுடன் ஒப்பிடுகையில் அதன் செலவுகள் குறைவாக விருத்தல் வேண்டும்; அதாவது, பொருளாதார ரீதியில் அது சாத்தியமானதாகதனியே நின்று நிலைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்

இச்சாத்திய நிலைமைகளுக்குத் தடைகளோ கட்டுப்பாடுகளோ இருக்கும் பட்சத்தில், நீர்மின் சக்தித் திட்டங்களை அமைப்பதில் பிரச்சினைகள் ஏற்படும். ஏனெனில், ஒன்றில் மாற்று அல்லது பதலீட்டு வலுக்களை விட இதன் உற்பத்திசெலவு அதிகமாக விருக்கும்; அல்லது அதன் விலை அதிகமாகவிருக்கும் பட்சத்தில் அத்திட்டத்தினை மேற்கொள்ளாதிருத்தல் கூடிய பொருத்தமானதாக விருக்கும்.

இத்தகைய சாத்திய அளவீடுகளை சரியாக அறிந்து கொள்ள அதனை உருவாக்கத் தேவையான பல்வேறு தொழில் நுட்பப் பரிமாணங்கள் பற்றிய விவரம், குறித்த திட்டம் எத்தனை வருடங்களுக்குப் பலன் தரும், அது வருடாந்தம் எவ்வளவு வலுவை உற்பத்தி செய்யவுள்ளதென்ற விவரங்கள் என்பன தேவை.

எண்ணெய் விலைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் நிலையில், (கையிருப்பு முடிநது செல்வது இதற்கு முக்கிய காரணம்) இலங்கையின் நீர் மின்சாரத்துக்கான உள்ளார்ந்த வளம் சுமார் 3,000 மெகவோட்டாக இருக்கு மென 1974 ல் சிலர் மதிப்பிட்டனர்.

சமனலவெலத் திட்டம், 1960 ல் வரையப்பட்டாலும், இன்று 1977 லும் வேலைசள் தொடங்கப்படவில்லை. பல்வேறு ஆய்வுகள் நீர் மின்சாரத் திட்டங்களின் தொடக்கத் திகதி பற்றி வேறுபட்ட முற்கூறல்களைத் தருகின்றன. அட்டவணை 15ஐப் பார்க்க.

மின்சார உற்பத்திற்கான ஏனைய முதன்மையான மூலவளங்கள்

மின்சார வலுவை உற்பத்தி செய்யக்கூடிய ஏனைய மூலவளங்களாவன:—

* நிலக்கரி
* அணுச் சக்தி
* ஐதரசன்
* வலுப் பயிர்கள்
* சமுத்திர வெப்ப வலு
* சூரிய வெப்பம், புவி வெப்பம், காற்று, கடலலைகள் என்பன

சிறந்த ஒரு மின்சார நிலைய எரிபொருள் என்ற வகையில் நிலக்கரி அதன் சல்பூரிக் அசுத்தப் பிரச்சினை இருந்தபோதும் — அமெரிக்க, ஐரோப்பிய, இந்திய திட்டங்களில் அதன் பழைய இடத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. ஆனல், அளவில அது பெருந்தொகையான ஒரு பொருளாயிருப்பதும், ஏற்றிறக்குமதிச் செலவுகளும் இலங்கைக்குப் பொருத்தமற்ற ஒன்ருக அதனை ஆக்கி விடுகின்றன.

அணுச் சக்தி பற்றி உலகம் கடந்த சில காலமாக அறிந்து வந்துள்ளது. அணு எரி உலை, அணுவைப் பிளந்து பெருக்கல் (இதில் பாரம்பரிய நவீன முறைகள் என இரு முறைகள் உள) என்ற 3 முறைகளில் அணுச் சக்தியை உற்பத்தி செய்யலாம். அணுஎரிஉலை முறையால் ஏராளமான அளவு வலுவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக விருப்பினும், இத் துறையிலான தொழில் நுட்ப அபிவிருத்திப் பற்ருக்குறை இதனை உடனடியாக உற்பத்தி செய்து கொள்வதில் பிரச்சினைகளைத்தோற்றுவிக்கின்றன. அணுவைப்பிளந்து பெருக்கல் முறைக்க்கும் நிறைய ஆராய்ச்சிகள் தேவை; சுற்றுப் புறச் சூழற் பாதுகாப்பு நிலைமைகளே இதற்குக் காரணமாகும். பாரம்பரிய அணுவைப் பிளந்து பெருக்கல் முறையைப் பொறுத்தளவில், அது தற்போது உலகில் கைவிடப்பட்டுவரும் ஒன்ருகக் காணப்படுகிறது. அத்துடன், இத் தொழில் நுட்பங்கள் யாவும் சிறிய அளவில் உற்பத்தி செய்தற்குப் பயன்படா. (இன்றைய நிலையில் ஆகக் குறைந்த அளவுஉற்பத்தித்திறன் சுமார் 600 மெகவோட் ஆகும்.)

ஐதரசன் வலு பற்றி நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்துள்ளது. நீரிலிருந்து வலுவைப் பிரித்தெடுக்க முதலில் வலு தேவை என்பதுதான் இதிலுள்ள பிரச்சினையாகும். சூழலடிப்படையில் பாதுகாப்பான ஒன்ருன இது, இலகுவாக எடுத்துச் செல்லக் கூடிய ஒன்றுமாகும். எண்ணெய் முடிந்தவுடன், விமானங்களும், ஏனைய வாகனங்களும் இதன் உதவியுடன் இயங்கலாம்.

மரங்கள் நீண்ட காலமாக வலுவை வழங்கி வந்துள்ளன. பின்னர் நிலக்கரி, எண்ணெய் என்பன அவற்றின் உயர் பயன்பாடு காரணமாக மரங்களின் உபயோகத்தைக் குறைத்துவிட்டன; அத்துடன் மீளவளமாக்கல் வேகத்தை விடக் கூடுதலாக மக்கள் மரங்களை வெட்டி அழித்தமையும் இதற்குக் காரணமாயிற்று. எனினும் ஓரளவுமின்சார உற்பத்திக்கு இன்னும், மரங்கள் பயன்படுத்தப்படவில்லை; இது தொடர்பான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஆகாயத் தாமரை (Water Hyacinth) பெருமளவு சூரிய வெப்பத்தை நுகர்வதால், அதனை ஒரு மின்சார உற்பத்தி மூலவளமாகப் பாவிப்பது பற்றி ஆராயலாம். சமுத்திர வெப்ப அலகுகள் பற்றிய கருத்தைஆர்தர் கிளார்க்முன்வைத்துள்ளார். திருகோணமலைக்குஅப்பால் சமுத்திர நீரின வெவ்வேறு மட்டத்தில் ஏற்படும் வெப்ப வேறுபாட்டை மின்சார உற்பத்திக்குப் பாவிக்கலாமென்பது இவரது கருத்து. எனினும் இது தொடர்பான தொழில் நுட்பங்கள், உலகின் வேறிடங்களில் இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன.

புவிசார் வெப்ப வலுவின் உற்பத்திக்கு, பாறைகளுள்ளும், புவியின் அடிப்பாகத்திலுள்ள திரவப் பொருட்களிலும் காணப்படும் வெப்பத்தைப் பெற்றுக்கொள்ள

அட்டவணை 15

நீரியல் மின்சாரத் திட்டங்களின் அமைப்பு பற்றிய முற் கூறல்கள்

	மமேஸ் வரன் மார்ச் 1970	இ.மி.ச. 1970	இ.மி.ச. எஞ்சிய வலு 1974	பொறியியலாளர் நிறுவனம் 1977
உக்குவலை	1973	1973	1975	1975
போவத்தென்னை ...		1975	1977	1979
கென்யன்			1978	1981
சமனல	1976	1977	1980	1983
கொத்மலை	1980		1983	

வேண்டும். பொருத்தமான இடங்களில் இது முக்கிய இடத்தைப் பெற்றுக்கொள்ள இடமுண்டு. கடலலைகளிலிருந்து வலுவைப் பெற்றுக் கொள்ளும் நிலைமைகளும் இத்தகையவே. எனினும், இலங்கையைப் பொறுத்தளவில் இவற்றுக்கான சாத்தியங்கள் மிகக் குறைவே. ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில், சூரிய வெப்ப வலு மூலமாக சமையல், வீடுகளுக்குச் சூடேற்றல், குளிரூட்டல் நடவடிக்கைகள் எதிர் காலத்தில் முக்கியம் பெறும் அறிகுறிகள் காணப்பட்டாலும், மின்சார உற்பத்திக்கு சூரிய வலுவை உபயோகித்தல் தற்போதைக்கு சாத்தியமற்றதென்றே கொள்ள வேண்டும்.

காற்றுச் சக்தி, சேதன வாயு உட்பட ஏனைய தொழில் நுட்பங்கள் மின்சார உற்பத்திக்குப் பயன்படாத போதும், உள்ளூர் வலுத் தேவைகளுக்கு உபயோகமாகலாம்.

இது தொடர்பான கடந்த 25 வருடகால விவரங்கள், இன்னும் பிரசுரிக்கப்படாத அண்மைய ஆய்வுக் கட்டுரையொன்றிற் காணப்படுகின்றன. வர்த்தக வலுவை மின்சார அலகாக மாற்றி இக் கட்டுரை தனது விளக்கத்தைத் தருகிறது. இவற்றுட் சில வருடங்கள் பற்றிய விவரங்களைஅட்டவணை 17 காட்டுகிறது.

பவை முடிவுறுதவை எனக் கொண்டாலும், மரத்தை அங்ஙனம்கொள்ள முடியாது. காட்டு வளம் அழிக்கப்படுவதால் வரும் அபாயம் பற்றி வன பரிபாலனத் திணைக்கள ஆணையாளர், பொறுப்பான அரசியல் வாதிகள், சூழற் பாதுகாப்பு நிறுவனங்கள் போன்ற பலரும் சுட்டிக் காட்டி வருவதே இதன் காரணமாகும். நாட்டின்

அட்டவணை 17

இலங்கையி வலு நுகர்ச்சி 1950 — 75

	10 இலட்சம் கிலோவோட்				10 இலட்சம் கலன்			
	எண்ணெய்	நிலக்கரி	நீரியல்	மொத்தம்	எண்ணெய்	நிலக்கரி	நீரியல்	மொத்தம்
1950	618	549	46	1,213	55	48	4	107
1960	1,605	480	258	2,343	142	42	23	207
1965	1,860	256	310	2,426	164	23	27	214
1970	2,679	47	625	3,351	237	4	55	296
1973	2,890	19	628	3,537	255	2	55	312
1974	2,294	19	880	3,193	202	2	78	282
1975	2,193	19	966	3,178	194	2	85	281

Source *"Trenas in Energy Consumption in Sri Lanka* 1950 - 1975*": Energy Policy Planning Paper* 2*: Sankar and Fernando: May* 1977*, unpublished draft.*

Conversion: 3 mwh = 1 tonne oil = 265 gals., therefore 1 gal. = 11.32 kwh.

இலங்கையில் வர்த்தக வலி உபயோகம்

துறைசார் அடிப்படையான நுகர்வை அறிந்துகொள்ள முன்னர்,, குறித்த ஒரு வருடத்தில் வர்த்தக வலுப் பாவனை பற்றி அறிந்து கொள்ளல் நன்று. 1974 ல் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் இது தொடர்பான ஓரளவு விளக்கம் தரும் விரிவுரை ஒன்று நிகழ்த்தப்பட்டது. அட்டவணை 16 இதனைக் காட்டுகிறது.

போக்குவரத்து, கைத்தொழில் வீட்டு வர்த்தகத்துறை ஆகிய மூன்று முடிவுப் பயன்பாட்டுத் துறைகளும் தலாசுமார் ⅓ பங்கு வர்த்தக வலுவைப் பாவிக்கின்றன என்பதை அட்டவணை 18. மேலோட்டமாகக் காட்டுகிறது,

எனினும், சூரிய, காற்று, மர (விறகு) வலு மூலவளங்களை இது கணக்கிலெடுக்கவில்லை. சூரிய வெப்பம், காற்று என்பன இயற்கையாகப் பேரளவில் கிடைப்

அட்டவணை 16

1973ல் இலங்கையின் வர்த்தக வலுப்பாவனை

(10 இலட்சம் கலன் எண்ணெய்க்குச் சமனுக)

இருந்து	போக்குவரத்து ஆட்கள்	சாமான்கள்	மொத்தம்	கைத் தொழில்	வீட்டுத் தேவை	மின் சார உற்பத்தி	மொத்தம்
பெற்றோல் ...	40	5	45				45
போக்குவரத்து டீசல்	25	40	65				65
கனரக டீசல் ...	5	5	10	5		5	20
உலை எண்ணெய்				30		10	40
மண்ணெண்ணெய்				5	75		80
மொத்த எண்ணெய்	70	50	120	40	75	15	250
மின்சாரம் ...				65	30	15	80
மொத்தம் ...	70	50	120	105	105	—	330

மூலம்: ''தேசிய வலுக் கொள்கைக் கான ஓர் அடிப்படை'' — ஜே. தியன்தாஸ் (ஆய்வுக் கட்டுரை)

விவசாய, காலநிலை, மற்றும் மக்கள் வாழ்க்கைத் தர நிலைமைகள் என்பனவற்றில், இக் காட்டு வளங்களின் அழிவு தாக்கங்களை ஏற்படுத்தலாமென்ற அச்சமே இதற்குக்காரணம்.

தேயிலைத் தோட்டங்களில் தேயிலையைப் பதன் செய்வதற்கும், விறகுத் தேவைக்குமாகப் பாரிய அளவில் மரங்களைத் தறித்தலும், தங்கள் சமையலறைத் தேவைகட்காக கிராமவாசிகள் காடுகளைக் கண்டபடி அழிப்பதும் இதிலடங்கும்.

விறகைப் பொறுத்தளவில் நாம் இந்திய நிலைமைகளைக் கவனத்திற் கொள்ளலும் நன்று.

இந்தியாவின் உயர்தலா வர்த்தக வலு அதன் கனரகக் கைத்தொழிலின் விளைவென்பதையும், காலநிலை காரணமாக இலங்கையின் கிராமிய வலுத் தேவை சிறிது குறைவு என்பதையும், இந்தியாவில் சாணம், மரக்சறிக் கழிவுகள் என்பன செய்யும் வேலைகளை இங்கு விறகு செய்கிறதென்பதையும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இலங்கைக்கான ஒரு சாத்திய விவரணமொன்றைத் (அட்டவணை 19) தயார் செய்யலாம்.

மதிப்பீடு செய்யப்பட்ட 40 இலட்சம் தொன் விறகில், தென்

அட்டவணை 18

இலங்கை வர்த்தக வலு 1977

(10 இலட்சம் கலனுக்கும் சமனாக)

	போக்குவரத்து						
	ஆட்கள்	பொருட்கள்	மொத்தம்	கைத் தொழில்	வீட்டு வர்த்தக துறை	மின் சார உற்பத்தி	மொத்தம்
பெற்றோல் ...	27	3	30				30
போக்குவரத்து டீசல்	31	29	60	6			66
கனரக டீசல் ...				9			9
உலை எண்ணெய் ...	1		1	26		2	29
மண்ணெண்ணெய் ...				6	52		58
மொத்த எண்ணெய்	59	32	91	47	52	2	192
நிலக்கரி		1	1				1
மொத்த புகையுயிர் தடம்	59	33	92	47	52	2	193
நீரியல்						89	89
மொத்த உள்ளீடு ...			92	47	52	91	282
மின்சாரம் ...				55		91	
மொத்தம்			92	102	88	—	282

னம் பன்னாடை, வெட்டப்பட்ட இலை குழை முதலியன 12½ தொன் எண்ணெய்க்குப் பிரதியீடாக விளங்குகின்றன. இது ஒரு பீப்பாய் 12 டொலர் வீதம் 11½ கோடி டொலரை அல்லது சுமார் 150 கோடிரூபா செலவை ஏற்படுத்த வல்லது.

இலங்கையின் காலநிலை மண்வள நிலைமைகளில், விறகுகளைத் தொடர்ந்து பாவிப்பதை ஊக்கப்படுத்துவது நல்லதா அல்லது முடியுமா என்பது ஆராய்ச்சிக்குரியது; ஆனால், நீர்மின்சாரத் திட்டங்களும், நீர்த் தேக்கப் பகுதிகளில் மரங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதை மறந்துவிடக் கூடாது. இப்பகுதிகளில் காட்டு வளத்தை அழிப்பதானது, மின் வலுவைக் குறைப்பதுடன், அப்பகுதியின் மண் வளத்தையும் பதிக்கும்.

வலுவின் முடிவுப் பாவனை

கைத்தொழிலுக்கான மொத்த மின்சார விற்பனையில் 2 % ஐயும், உலை எண்ணெய் விற்பனையில் 3 % ஐயும் நுகர்கின்றதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கைத்தொழில் அமைச்சோ அல்லது இது தொடர்பான ஒரு ஆராய்ச்சியாளரோ, இங்குள்ள 20 பெரிய தொழிற்சாலைகளின் வலு நுகர்வு விவரங்களைச் சேர்த்துப் பார்ப்பின், அது கைத்தொழில் வலுவின் அரைப்பங்கை அடக்கும் எனக் கூறலாம். அத்துடன் வலுப் பாவனை வளர்ச்சி பற்றி மாத்திரமன்றி, எண்ணெயிலிருந்து மின்சாரத்துக்கும், விறகுக்கும் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் காட்டக் கூடியதாக அது அமையும்.

இத்தகைய தரவுகளின்றி மதிப்பீடுகள் செய்துகொள்ளல் கடினம். முக்கிய நிறுவனங்கள் இத்தகைய தரவுகளை வெளியிடாதிருத்தலும், அல்லது வெளியிடுவதைத் தாமதித்தலும் வருந்தத்தக்கது.

''தேவையான இடங்களில் கணக்குக் கூற்றுக்கள் யாவற்றிலும், அவை சார்பான அளவுகள் — அவசியமாயின் அலகுச் சராசரிகள் கூட — குறிக்கப்பிடல் வேண்டும்.'' இது உள்ளகக் கணக்குத்தகவல்கள், பிரசுரிக்கப்பட்ட கணக்கு வழக்குகள் உட்பட சகல கணக்குக் கூற்றுக்களுக்கும் பொருந்தும்'' என பட்டயக கணக்கறிஞர் நிறுவகம் 6.1.75 இல் விடுத்த ஓர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் இலங்கை மின்சார சபை, இ.போ.ச., புகையிரதப் பகுதி, டயர் கூட்டுத் தாபனம் என்பன — ஒரு வேளை தாமதித்தாயினும் தமது நடவடிக்கைகள் குறித்து சில தரவுகளை வெளியிடுகின்றன. எனினும், இவை தமது சொந்த உற்பத்திச் செய் முறையின் போது பாவிக்கும் வலு அளவை இத் தரவுகள் காட்டுவதாக இல்லை.

முடிவுப் பாவனை: வர்த்தக வீட்டுத் துறை

இத் துறையின் நுகர்வாளர்கள் பெருந்தொகையினராக விருப்பதாலும் நாடெங்கும் பரந்து காணப்படுவதாலும் பயனுள்ள புள்ளிவிவரத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளல் கடினமாகும்.

இந்த ஆராய்ச்சி பிரதானமாக அடிப்படை உண்மைகளை, அவை இருந்துள்ளவாறும் இப்பொழுது உள்ளவாறும், அத்துடன், சற்றே குறைந்த அளவுக்கு, அவை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் அல்லது இருக்கலாம் என்பதையும் எடுத்துக் காட்டி உறுதிப்படுத்துவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உண்மைகளின் நியாயமான பிரத்தியட்ச அமைப்பின் அடிப்படையில் மட்டுமே எந்தக் கொள்கையையும் சாதிக்க முடியும் அல்லது ஒரு கொள்கைக்குரிய அவசியத்தைக் கூட உணர முடியும் என்பதே இதன் கருத்தாகும்.

உண்மைகளின் பிரத்தியட்ச அமைப்பு போதாததாயுள்ளதென்பதில் சந்தேகமில்லை. இதன் பிரதான காரணம் எவ்விதமான தரவுகளையும் பெறுவது கடினமாயுள்ளது. அதிலும் தற்காலம் வரையிலான தரவுகளைப் பெறுவது அதை விடக் கடினமாயுள்ளது. எனினும், இலங்கையில் என்ன செய்யப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஒருவர் சில முடிவுகளைச் செய்ய முடியும்.

செய்யப்பட வேண்டிய தெளிவான விஷயங்கள் சுருக்கமாகப் பின்வருமாறு:—

1. ஒரு வலுக் கொள்கையை உருவாக்கல்.
2. பெற்றோலியம் வலுவின் உபயோகத்தைத் தடுத்தல்.
3. மின்மயமாக்கவல்ல ஒவ்வொன்றையும் மின்மயமாக்கல்.
4. நீர்வீழ்ச்சி - மின்சார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்.

அட்டவணை 19

இலங்கை மொத்த வலு 1969

	தலா கலன்	%	10 இல. கலன்	10 இல. தொன்
விறகு ...	26	52	312	3.8
விவசாய மீதி	2	4	24	.4
வர்த்தகம் சாராத ...	28	56	336	4.2
வர்த்தகம் சார்ந்தவை ...	22	44	264	
மொத்தம் ...	50	100	600	

5. வலு உபயோகத் தோட்டங்களையும் பண்ணைகளையும் உண்டாக்குவது.

6. எந்த அணு வலு உபயோகப் பொறுப்பையும் ஓரிரு தசாப்தங்களுக்கு ஒத்திவைத்தல்.

7. வழு முதலீடுகளைப் பற்றி முடிவு செய்வதற்குரிய வதி முறைகளை மீண்டும் உருவாக்குதல்.

ஒரு வலு கொள்கைக்கான அவசியத்தைப் பாதுகாப்புடன் முன்னுரைக்கத்தக்க மூன்று காரணிகளின் அடிப்படையில் உறுதியாகச் சொல்ல முடியும்:—

1. எண்ணெயின் வழங்கல் குறைவதுடன் அதன் விலையும் அதிகரிக்கும்.

2. மரங்களைக் கட்டுப் படுத்தாவிட்டால் மரங்களும் குறையும்.

3. வர்த்தக ரீதியிலான வலுவுக்குரிய தேவை அதிகரித்துக் கொண்டே போகும்.

இந்நாடு வலுக் கொள்கை எனக் குறிப்பிடத்தக்க எந்தக் கொள்கையையும், எந்தச் வலு அமைச்சையும், எந்தச் வலுத் திணைக்களத்தையும், எந்தச்வலு பல்கலைக் கழக பீடத்தையும் கொண்டிருக்கவில்லை என்பது, இத்தனை வருடங்களிலும் எந்த நெருக்கடியும் ஏற்படவல்லை என்பதையும் ஆதலால் ஒரு சவிஸ்தாரமான அல்லது ஒரு முகப்படுத்தப்பட்ட தேசியக் கொள்கையை உருவாக்குவதற்கு எந்தக் கட்டாயக் காரணமுமில்லை யென்பதையும் பிரதிபலித்துக் காட்டுகின்றது. இது வரை காலமும், மின் வலுவை உற்பத்தி செய்து விற்பதும் எண்ணெயை இறக்குமதி செய்து சுத்தஞ் செய்து விற்பதும் எப்போதுமே இரு வேறு அமைச்சுக்களின் கீழிருந்து வந்துள்ளன. மின்வலு ஒன்றில் பொறியியல் — நிர்மாணத்துறை நடவடிக்கைகளுடனே அல்லது நீர்ப்பாசனத் துறைப் பக்கமாகவோ கிடந்துள்ளது. இது சமுதாயத்தில் மின்சக்தியின் வேலைக் கடமையை விட மின்சக்தி எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறதென்பதையே பிரதிபலிக்கின்றது. இதேபோல எண்ணெய் வர்த்தகத் துறையுடனும் பின்னர் கைத்தொழில் துறையோடும் இருந்தது. இதுவும் எண்ணெயின் வேலைக் கடமையை விட அது எவ்வாறு பெறப்பட்டதென்பதையே பிரதிபலிக்கின்றது. விறகுப் பிரச்சினை ஆராய்வுக்குரிய ஒரு விஷயமாகவே இருக்கவில்லை.

எனவே, தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உண்மைகளையும் முற்கணிப்புகளையும் சேகரிக்கவும், உலக அபிவிருத்திகளை விழிப்புடன் கண்காணிக்கவும், மாற்றுக் கொள்கைகளை உருவாக்கவும் ஓர் அமைச்சை அல்லது திணைக்களத்தை ஸ்தாபிப்பதன் அவசியம் தெளிவு. ஒரு வேளை திறமையான இந்திய உதவியுடன் திட்டமிடல் அமைச்சில் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட வலுப் பிரிவு ஒரு செயற்பாட்டு அமைச்சின் அல்லது ஒரு வலு திணைக்களத்தின் கருவூலமாகலாம்.

இந்த ஆராய்ச்சிப் பிரிவின் ஏனைய பகுதிகள் ஒரு தேசிய வலுக் கொள்கையில் அடங்கியிருக்கக்கூடிய அம்சங்களை எடுத்துக் காட்ட முயல்கின்றன. உலகெங்கும் ஏற்பட்ட வலு நெருக்கடி பெற்றோலியத்தினால் தூண்டப்பட்டதால், பெற்றோலியத்தைத் தடை செய்வது, இலங்கையின் சக்திக் கொள்கையில் ஒரு தெளிவான அம்சமாக இருக்க வேண்டும். இத்தகைய தடை இரு பாகங்களைக் கொண்டிருக்கலாம்:

1. முதலாவதாக, வலுவை உபயோகிக்கும் நடவடிக்கைகளை அடக்குவதன் மூலமோ அல்லது அந்த நடவடிக்கைகளில் சக்தியை மிகச் சிக்கனமாக உபயோகிப்பதன் மூலமோ சக்தியின் உபயோகத்தை அடக்குதல்.

2. இரண்டாவதாக, அதே நடவடிக்கைகளில் பெற்றோலியத்துக்குப் பதிலாக மற்றும் சக்தி மூலங்களை உபயோகித்தல்.

இவ்விரு காரணிகளில் கவனஞ் செலுத்துவதற்காக, 1976 ஆம் வருட பெற்றோல் உபயோகப் புள்ளி விவரங்களை ஒருவர் திருப்பிக் காட்டலாம்.

வலுவை உபயோகிக்கும் நடவடிக்கைகளை அடக்குவது அல்லது குறைப்பது என்பது மோட்டார் போக்குவரத்துக்கு மட்டுமே பொருந்த முடியும். இது 1976 ஆம் ஆண்டில் 27 மில்லியன் கலன் பெற்றோலை உபயோகித்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது; சமீபத்திய மோட்டார் கார் இறக்குமதிகளைக் கவனிக்குமிடத்து, இது பெற்றோல் உபயோகத்தை அதிகரிக்கும் போக்கு மீண்டும் தொடங்கும். ஒன்றில் அந்தப் பயணமே அவசியமற்றதென்ற காரணத்தினாலோ அல்லது தேசிய ரீதியில் தேவையான வேகத்தையோ அல்லது சௌகரியத்தையோ இழக்காமல் அப் பயணத்தைப் பஸ்ஸிலோ அல்லது புகை வண்டியிலோ மிகச் சிக்கனமாகச் செய்திருக்க முடியுமென்ற காரணத்தினாலோ, மோட்டார் போக்குவரத்தில் அரைவாசி ஆடம்பர சுகபோகம் என்றோ அல்லது முக்கியமல்லாதது என்றோ அல்லது தேவையற்ற வீண் விரயம் என்றோ தீர்மானிக்க முடியுமாயின், அப்பொழுது 12 அல்லது 13 மில்லியன் கலன் எண்ணெய் உபயோகிக்கப்படுவதைத் தடுத்து விட முடியும். இத்தகைய தடை ஒழுங்கு விதிகளாலோ அல்லது விலை நிர்ணயத்தாலோ ஏற்படுத்தப்படலாம்.

ஒழுங்கு விதி செய்வதாயின், தனியார் வாகனங்கள் நகர நிலையங்களுக்குள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். (இதன் பயனாக, இடத்துக்கிடம் காலால் நடந்து செல்லல் — பஸ்ஸில் செல்லல் — சூழல் ஆகியவற்றிற்கு அனுகூலங்கள் ஏறபடும்) அல்லது பொதுக் காணிகள் தனியார் காணிகள் முதலியவற்றில் வாகனங்களை விட்டுவைப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் இன்று அநேக நாடுகளிலுள்ள நியமக் கட்டுப்பாட்டு முறையின் பாகமாக அமையும்.

விலை நிர்ணயத்தின் மூலம் தடை செய்வதாயின், ஜனாதிபதி கார்ட்டர் இப்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள வகையில் பெற்றோல் மீது வரிசளை விதிப்பது — ஆனால் எங்களுடைய குறைந்த செல்வ நிலைக்கேற்ப மிகக் கடுமையான வரிகளை விதிப்பது — உலக எண்ணெய் விலை அதிகரிப்புக்களை எதிர்பார்ப்பதாக மட்டுமே இருக்கும். ஒரு வேளை, எங்களுடைய எண்ணெய் இறக்குமதிகளில் பத்தில் ஒரு பங்குவரை சேமிப்பதற்குப் பெற்றோல் விலையை எட்டு மடங்கு அதிகரிக்க வேண்டியிருக்கும.

எண்ணெய் உபயோகத்தின் திறமையை அதிகரிப்பதனால் இறுதிப் பயன்கள் ஆகிய முழு உருவெளியிலும் விஸ்தரிப்பு காண முடியும். லொறிகள் பராமரிப்புப் பொறியியல் முறை முறைகளா

லும் பாரஞ் சுமக்கும் ஆற்றலை இப்பொழுதுவிட நல்ல முறையில் பயன்படுத்துவதனாலும் தங்களுடைய வலுச் சிக்கனத்தை அபிவிருத்தி செய்ய முடியும். இது வீதிகளில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு போகும் பொது வாகனங்களை ஏகபோகமாகப் பயன்படுத்துவதும், தனியாருக்கும் (தோட்டம் போன்ற) ஸ்தாபனங்களுக்கும் சொந்தமான லொறிகளின் தலையீட்டிலிருந்து பொது வாகனங்களைப் பாதுகாப்பதுமாகலாம். சமையற் கனலடுப்புகளை (குக்கர்கள்) இப்பொழுதுவிட நல்ல முறையில் வடிவமைத்தல், சிறந்த இல்லப் பராமரிப்பு, எரிபொருளிலிருந்து சிறந்த பயனைப் பெறும் விதம் பற்றி நல்லறிவு புகட்டல் ஆகியவற்றின் மூலம் மண்ணெண்ணெய் உபயோகத்தை அபிவிருத்தி செய்ய முடியும். ஆனால் இங்கும் விலை அதிகரிப்புகள் திறமையான இறுதிப் பயன்களைப் பெறுவதில் தங்கள் சொந்தக் கட்டுப்பாடுகளைச் செலுத்தும்.

பெற்றோலியத்துக்குப் பதிலாக மற்றும் சக்தி மூலங்களைக் காண்பதாயின், வர்த்தக ரீதியிலில்லாத சக்தியின் உபயோகத்தை ஆகக் கூடிய அளவு அதிகரிப்பதுடன் அதன் விநியோகத்தையும் ஆகக்கூடிய அளவு அதிகரிக்க வேண்டும்; நூதன சக்தி மூலங்கள் எனப்படும் (சூரிய வலு, காற்றுச் வலு, சேதன வாயு முதலியன) வலுகளைப் பயன்படுத்த வேண்டும்; மின்மயமாக்க வேண்டும். அம்பாந்தோட்டைக் கருகில் உள்ள ஒரு கிராமத்தில் ஐ. நா. சூழல் திட்டஸ்தாபனம் தொடங்கியுள்ள முச் சக்தித் திட்டம் கவனமாக உற்று நோக்க வேண்டிய ஒரு பரிசோதனையாகும். ஏனென்றால், தேசியப் பொருளாதாரத்திலிருந்து அதிக அளவில் தொழில்நுட்ப வலு இழக்காமல், கிராம வாழ்க்கையின் தரத்தை அபிவிருத்தி செய்யும் அறிவிக்கப்பட்ட இலட்சியத்துடன் புதுப்பிக்கத்தக்க மூல வளங்களைப் பயன்படுத்துவதாக அத்திட்டம் கூறுகிறது. எனினும், இவ்வகையான வலு உண்மையில் எண்ணெயின் தற்போதைய உபயோகத்துக்குப் பதிலாக மாட்டாது; ஆனால், எண்ணெய் - உபயோகத்தை அதிகரிக்கும் தேவையைக் குறைக்குமென்பது திண்ணம்.

தற்போது உபயோகிக்கப்படும் எரிபொருள்களுக்கு உண்மையான மாற்றுகளைக் காண்பதாயின், சூடாக்குவதற்கு முறைப்படி விறகைப் பயன்படுத்துதல் இடத்துக்கிடம் நகரத்தக்க இயந்திரங்கள் நிலையாயுள்ள இயந்திரங்கள் ஆகிய இரண்டிலுமுள்ள பொறிமுறைப் பணிகளை மின்மயமாக்குதல் ஆகியவற்றின் மூலம் மட்டுமே காண முடியும். இதன் பயனாகத் தற்போது உபயோகிக்கப்படும் எண்ணெயின் அளவில் சாத்தியமான சேமிப்பு (மில்லியன் கலன் கணக்கில்):—

மின் மயமாக்கல்	—	20
விறகு எரித்தல்	—	20

பின்வருவனவற்றில் எண்ணெய்க்குப் பதிலாக மின்சாரத்தை உபயோகிக்க முடியும்:—

போக்குவரத்து
கைத்தொழில்
இல்ல விளக்கேற்றல்

வலு, அனல் மின்சாரத் திட்டத்திலிருந்தன்றி நீர் வீழ்ச்சி — மின்சாரத் திட்டத்திலிருந்து வரும் வரை, சேமிப்பு அநேகமாகப் பூரணமாயிருக்கும். வலு அனல் மினசாரத் திட்டத்திலிருந்து வந்தால் கூட, ஓரளவு சேமிப்பிருக்கும். ஏனென்றால், எண்ணெய்ப் பதிலாக மின்சாரத்தை உபயோகிக்கும் மாற்றத்தை ஓரிடப்படுத்துவதை விட மத்தியிலிருந்து செயல்படுத்துவது மிகப் பயனுறுதி வாய்ந்ததாகும் — குறிப்பாகப் பொறிமுறை இயக்கத்தில் விட இடத்துக்கிடம் நகரத்தக்க இயந்திரங்களில் இம்மாற்றத்தை நடைமுறைப் படுத்துவது அதிக பயனுறுதியுள்ளதாகும்.

தேசிய வலுக் கொள்கையின் ஓர் அங்கமாகச் செய்ய வேண்டிய நான்காவது தெளிவான காரியம் என்னவென்றால், நீர்வீழ்ச்சி-மின்சாரத் திட்டத்தின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதாகும். இதற்கு முற்றாகப் புதிய அணுகு முறைகளுடன் கூடிய திடசங்கற்பம் அவசியமாகும்:—

பயனளிக்கத்தக்க இடங்களை மதிப்பிடுவது.

பயனளிப்புத் தகமை அளவிடுவது.

பயனுள்ள பரிமாணமும் அளவும்.

முடிவுசெய்யும் நடைமுறைகள்

தக்க நிர்மாணத் தொழில் நுட்ப முறைகள்.

ஒப்பந்தங்களுககு விடுவது.

இந் நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்பு 1,600 மெ.வா. வரை மின் உற்பத்தி செய்வதற்குத் தற்போது இனங் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சகல இடங்களையும், (ஜனாதிபதி கார்ட்டரின் சிந்தனைக்கோலை உபயோகித்து) 3 மெ.வா. விலிருந்து 5 மெ.வா. வரை மின் உற்பத்தி செய்வதற்குரிய ஏராளமான திட்டங்களையும் சேவைககுப் பயன்படுத்தத் தொடங்குவதும், சிறிய நதிகளிலும் உப நதிகளிலும் பெருந்தொகையான சிறிய நீர்வீழ்ச்சி திட்டங்களுடன் தயாராயிருப்பதுமே புதிய அணுகு முறைகளின் குறிக்கோள்களாக இருக்க வேண்டும். நிச்சயமாக இவ் விஷயங்களில், சர்வதேச கடன் வழங்கும்

உலக வலுப் போக்கு

மொத்த உலக வலு நுகர்ச்சி 1973 இல் 250.4 குவாட்றில்லியனிலிருந்து 1990 இல் 406.1 குவாட்றில்லியனாக அதிகரிழகும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க வருடாந்த அதிகரிப்பு விகிதம் 2.9 சதவீதமாகும். அணு வலு மிகக்கூடிய வருடாந்த விகிதத்தைக் காட்டுகிறது. (22.2 சதவீதம்), அடுத்தபடியாக இயற்கை வாயு (வருடாந்த அதிகரிப்பு விகிதம் 2.3 சதவீதம்), பெட்ரோலியம் (2.1 சதவீதம்), மின்சக்தி (1.7 சதவீதம்), கரி (1.6 சதவீதம்). 1960 இலிருந்து 1973 வரை குவாட்றில்லியனில் அளக்கப்பட்ட வலுவின் உலக நுகர்ச்சி 5.1 சதவீத வருடாந்த விகிதத்தில் அதிகரித்துள்ளது. இதே கால எல்லையில் இயற்கை வாயுவும் பெட்ரோலியமும் இணைந்த பங்கு 1960 ல் 48 சதவீதத்திலிருந்து 1973 இல் 66 சதவீதத்துக்கு அதிகரித்துள்ளது. கரியின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

கரி

உலகக் கரி உற்பத்தியில் 59 சதவீதத்தை 1974 இல் சீன - சோவியத் நாடுகள உற்பத்தி செய்தன. அதே சமயம் ஐக்கிய அமெரிக்கா 19 சதவீதத்தை உறபத்தி செய்தது. எண்ணெயினதும் இயற்கை வாயுவினதும் போட்டியைப் பொறுத்து கரி உற்பத்தியின் அதிகரிப்பு வேறுபடுகின்றது. 1974 இல் உலகக் கரி இருப்பு மிதி வளம் 669 பில்லியன் ஆகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடநத ஆண்டு கரி உற்பத்தி 2.47 பில்லியன் தொன்களாகும். மொத்த இருப்பு மிகு வளத்தில் இது 10 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. பெறக்கூடிய மொத்த உலகக் கரி இருப்பு மிகு வளத்தில் 46 சதவீதம் சோசலிஸ நாடுகளிலும் 32 சதவீதம் ஐக்கிய அமெரிக்காவிலும் இடம் பெற்றுள்ளன.

எண்ணெய்

உலக மசகு எண்ணெய் உற்பத்தி 1947-75 கால எல்லையுள் 6.9 சதவீத வருடாந்த விகிதத்திலும் 1960-1975 கால எல்லையுள் 6.5 சதவீத வருடாந்த விகிதத்திலும் அதிகரித்துள்ளது. 1975 இல் உலக மசகு எண்ணெய் உற்பத்தியில் மத்திய

கிழக்கு நாடுகள் 38 சதவீதத்தையும் சோஷலிஸ நாடுகள் 22 சதவீதத்தையும் உற்பத்தி செய்தன. உலக மசகு எண்ணெய் இருப்பு மிக வளத்தின் 59 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளில் இருப்பதால் மசகு எண்ணெயைப் பொறுத்தவரையில் பிரதான இடத்தை மத்திய கிழக்கு நாடுகள் எதிர்காலத்தில் வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இயற்கை வாயு

1947 - 74 கால எல்லையுள் உலக இயற்கை வாயு உற்பத்தி 8.7 சதவீத வருடாந்த விகிதத்தால் அதிகரித்துள்ளது. 1947 இல் உலக இயற்கை வாயு உற்பத்தியில் ஐக்கிய அமெரிக்காவின் பங்கு 97 சதவீதமாக இருந்தது. 1974 அதன உற்பத்தி 46 சதவீதமாக இருந்தது. 1973 இல் மேற்கு நாடுகளின் பங்கு ஏறத்தாழ 25 சதவீதமாக இருக்க சீன - சோவியத் நாடுகளின் பங்கு 1,5 சதவீதமாக இருந்தது. மதிப்பிடப்பட்ட உலக இயற்கை வாயுவின் இருப்பு மிகுவளத்தில் 34 சதவீதம் சீன - சோவியத் நாடுகளிலும் சிறப்பாக யு.எஸ்.எஸ்.ஆர் இலும் 28 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளிலும் 11 சதவீதம் ஐ.அ. இலும் இடம் பெற்றிருக்கின்றன.

யுரேனியம்

சோஷலிஸ நாடுகளல்லாதவற்றின் உலக யுரேனிய இருப்பு மிகுவளத்தைப் பொறுத்த வரையில் 29 சதவீதம் ஐ.அ. விலும் 25 சதவீதம் அவுஸ்திரேலியாவிலும் 18 சதவீதம் தென் ஆபிரிக்காவிலும் 13 சதவீதம் கனடாவிலும் இடம் பெற்றுள்ளது.

நீர் மின்சாரம்

உலகம் அதன் மொத்த நீர்மின் கொள்ளளவில் 13.6 சதவீதத்தையே அபிவிருத்தி செய்துள்ளது. மின்வலு உற்பத்தி ஆற்றலுள் 13.3 சதவீதத்தையே அபிவிருத்தி செய்துள்ளது. (யு.எஸ்.எஸ்.ஆர். தவிர) ஐரோப்பா சக்திக் கொள்ளளவையும் உற்பத்திக் கொள்ளளவையும் விரிவாக அபிவிருத்தி செய்துள்ளது. இது இந்தப் பிராந்தியத்திலுள்ளதன் 50 சதவீதமாகும்.

ஸ்தாபனங்களால் விதிக்கப்படும் உளுத்துப்போன அளவு கோல்களைத் திருப்திப்படுத்துவதைவிட இந்நாட்டின் எதிர்கால சந்ததிகளின் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வே சகல திட்டமிடுதலினதும் இலட்சியமாயிருக்க வேண்டும்.

ஒரு வலுக் கொள்கையின் பாகமாகச் செய்ய வேண்டிய ஐந்தாவது தெளிவான காரியம் என்னவெனில், தாவரங்களில் நிகழும் ஒளிச்சேர்க்கை முறை வாயிலாக சூரிய சக்தியின் உபயோகத்தை வளர்ப்பதாகும். மரங்களும் செடிகளும் சூரிய சக்தியைக் கிரகித்து, 6 மாதங்களிலிருந்து (சக்திப் பயிர்கள்) 15 வருடங்கள் வரை (யூகலிப்டஸ் மரங்கள்) உள்ள கால அளவுகளில் ஆகக்கூடிய சிறந்த எரிவுக்குத் தயாராயிருக்கின்றன. நிலக்கரியிலும் எண்ணெயிலும் கற்படிவுகள் ஏற்படும் வேகத்தைவிட இது அதிவேகமாக நடைபெறுகின்றது. சக்தி பெறும் அறிவிக்கப்பட்ட நோக்கத்துக்காகப் பயிர்களையும் மரங்களையும் முறைப்படி நடுதல் இன்னும் விநோதமாகவே இருக்கிறது. ஆனாலும், இதற்கு முறையாகத் திட்டமிட்டால், அநேக உப உற்பத்திப் பொருள்கள் கிடைக்கும். உயர்ந்த மலைப்பாங்கான பிரதேசங்களில் மரங்களை நட்டுத் தோட்டங்களை உண்டாக்கினால், மரங்கள் தங்களுடைய ஆயுட் காலத்தில் நீர்ச் சேமிப்புக்கும் மண் வளப் பெருக்கத்துக்கும் மண் அரிப்புத் தடுப்புக்கும் உதவுவதுடன, அவற்றை எரிக்கும் போது சக்தியையும் அவற்றை வெட்டும்போது எண்ணெய் எடுப்பதற்கும் உதவும். சம பூமிப் பகுதிகளில் கூட மரங்களை நட்டால் ஒவ்வொரு மரத்தின் ஆயுட் காலத்தின் போதும் முழுத் தோட்ட அல்லது நகர்ப்புறச் சூழலைச் செழுமையாக்குவதுடன், விறகு வெட்டியின் கோடரிக்கு இரையாவதற்கு முன்பு உணவுப் பொருள்களை வழங்கி ஒரு புதிய கன்று வளரவும் இடமளிக்கின்றது.

வலுக் கொள்கையின் ஒரு பாகமாகச் செய்ய வேண்டிய ஆறாவது காரியம் என்னவென்றால், உண்மையில் இல்லாத ஒன்றைச் செய்வதாகும். அஃதாவது, ஓரிரு தசாப்தங்களுக்கு எந்த அணுசக்திப் பொறுப்பையும் மேற்கொள்ளும் நடவடிக்கையை ஒத்தி வைப்பதாகும். அணுசக்தி, உருவெளி, அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிகின்றது:—

வழக்கமான அணுக்கரு பிளத்தல் உலைகள்.
பிளக்கத்தக்க பொருள்களைத் துரித கதியில் அதிக அளவில் சிருஷ்டிககும் (புளூட்டோனியம்) உலைகள்.
அணுக்கரு சேர்க்கை.

அணுக்கரு சேர்க்கை முறையைப் பொறுத்தவரை, இது குறைந்தது இன்னொரு 10 இலிருந்து 20 வருட காலத்துக்குப் பரீட்சார்த்த சக்தி உற்பத்தியை எட்டுவது சாத்தியமல்ல எனவே அதில் நாம் சிரத்தை கொள்ளத் தேவையில்லை. ஆயினும், வேற்றிடங்களில் ஆராய்ச்சி எவ்வாறு நடைபெற்று வருகிறதென்பதைக் கவனமாக உற்று நோக்குவது அவசியமாகும்.

பிளக்கத்தக்க பொருள்களைத் துரிதகதியில் அதிக அளவில் சிருஷ்டிக்கும் உலை, உரேனிய மூலவளம் தீர்ந்து போகும் விளைவுகளிலிருந்து உலகைக் காக்கும் வல்லமை படைத்ததெனக் கருதப்பட்டது. இந்த ஆறுதல் தோன்றுவதற்குக் காரணம், இவ்வுலை, தான் உபயோகப்பதைவிட அதிக எரிபொருளை உண்டாக்குவதாகும், எனினும், பாதுகாப்பையும் தொழில்நுட்ப விடலையும் பொறுத்த அநேக பிரச்சினைகள் இனித்தான் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. மேலும், இவ்வுலை சமாதானமல்லாத நோக்கங்களுக்கு உபயோகிக்க புளூட்டோனியத்தை வழங்கும் ஆற்றல் வாய்ந்ததாகும். இக் காரணத்தினால்தான் ஜனாதிபதி கார்ட்டர் பின்வருமாறு கூறுகிறார்: (தேசிய சக்தித் திட்டம் ஏப்ரல் 1977 பக்கம் 102):—

> ''பிளக்கத்தக்க பொருள்களை அதிக அளவில் சிருஷ்டிக்கும் உலை பற்றிய தொழில் நுட்பத் திறன்களை அநேக நாடுகள் அபிவிருத்தி செய்து வருகின்றன. இத் தொழில் நுட்ப முறைகள் இந் நூற்றாண்டு முடிவதற்குள் வர்த்தக வாய்ப்பைப் பெற்றுவிட முடியும். எனினும், ஒரு புளூட்டோனியம் பொருளாதாரத்திலிருந்து இவ்வுலை பற்றிய தொழில் நுட்ப முறைகள் பல்கிப் பெருகி விஸ்தரிக்கும் ஆபத்து இருந்து வருவதனாலும், வலு மாற்றுகள் கிடைக்கக் கூடியனவாயிருப்பதனாலும், புளூட்டோனியம் உலைத் தொழில் நுட்ப முறைகள் மேலும் அபிவிருத்தி செய்யப்படுவதை ஒத்திவைப்பது அறிவுடைமையாகும்.''

இதனால் எங்களுடைய சாத்தியமான உபயோகத்துக்கு வழக்கமான அணுக்கரு பிளத்தல் உலைகள் இருககின்றன. இந்நாட்டிலுள்ள இவற்றின் ஆதரவாளர்கள் வாதிப்பதென்னவென்றால், நீர்வீழ்ச்சி தரவல்ல வலு வாய்ப்புக்கள் வரையறுககப்பட்டுள்ளன; (இது மேலே எதிர்க்கப்பட்ட ஒரு வாதம்); இவ்வரையறை 1990 வருடங்களில் மின்சகதி அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தி. வரும் எனவே 1995 ஆம் ஆண்டளவில் ஓர் அணு உலையை ஸ்தாபிப்பதெனில் இப்பொழுதே அது சம்பந்தமான நடவடிக்கைகளை

COLLEGE

ஆரம்பிப்பது அவசியமாகும் என்பதாகும். இதனால் பரிசிலனை, தொழில் நுட்பப் பயிற்சி, இடத் தெரிவு, ஒப்பந்தத்துக்கு விடுவது, நிர்மாணம், அத்திவார வேலை முதலியவற்றிற்கு 18 வருட அவகாசம் கிடைக்கிறது. நீர்வீழ்ச்சி - மின்சார சக்தி வளம் உண்மையில் அவ்வாறு வரையறுக்கப்பட்டதாயில்லை யென்ற வாதம் ஒரு புறமிருக்க, எங்கள் கருத்துப்படி வழக்கமான அணுக்கரு பிளத்தல் உலைகளுக்கு உள்ள பிரதான ஆட்சேபனைகள் பின்வருமாறு:—

1. பிளக்கத்தக்க பொருள்களை அதிக அளவில் சிருஷ்டிக்கும் அணு உலை பற்றிய தொழில் நுட்ப முறைகள் ஒருபுறமிருக்க, உலகின் உரேனியம் மூலவளங்களும் வரையறுக்கப்பட்டனவாகவே உள்ளன.

2. காலம் செல்லச் செல்ல, இது உரேனியத்தின் விலைகளில் பிரதிபலிக்குமென்பது திண்ணம்.

3. தொழில் நுட்பமுறை சிக்கலானதாக மட்டும் இருக்கவில்லை. ஆனால் தொடர்ந்து நீண்டு கொண்டே போவதாயுள்ளது. ஆதலால், வளமாக்குவதன் மூலம் உரேனியச் சுரங்கம் தோண்டுதல் தரப்படுத்தல் அணுக்கரு பிளத்தல் கழிவுப் பொருள்களை ஒழித்தல் ஆகிய சங்கிலித் தொடரின் அநேக முனைகளில் அந்நிய உதவியைச் சார்ந்து நிற்கும் நிலையை நாம் தவிர்க்க முடியாது.

ஜிம்மிகாட்டரின் வலுபற்றிய திட்டம்

1977 ஏப்ரில் 29 அன்று வெள்ளை மாளிகையில் வெளியிடப்பட்ட "தேசிய வலுபற்றிய திட்டத்" திலிருந்து எடுக்கப்பட்டது.

எதிர்காலம்

பாதுகாப்பற்ற இறக்குமதிகளிலும் அதிகரித்துக் கொண்டே செல்லும் பெருஞ் செலவு பிடிக்கும் வழக்கமான இடங்களிலிருந்து பெறப்படும் வலு நீர பபீடுகளிலும் தங்கி இருத்தலைப் பார்க்கிலும் எமது நாட்டை செல்வம் கொழிக்கச் செய்த சூழ்ச்சித் திறனையும் பயனுறுதியையும் நாம் மீண்டும் பெறுதல் வேண்டும். எமது தேவைகளை சிறு அளவினதானதும் படைப்புத் திறனுள்ளதுமான வழிவகைகளைக் கண்டுபிடித்தல் வேண்டும். நாம் வெற்றி பெற்றால் எமது மட்டுமன்றி எமது பிள்ளைகளினதும் பேரப்பிள்ளைகளினதும் தொழில்களையும் சூழலையும் அடிப்படையான அமெரிக்க வாழ்க்கைத் தரத்தையும் பேணிப் பாதுக்காக்க முடியும்.

புதிய வலுத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படும் காலத்தைப் பொறுத்த வரையில் 2000 ஆண்டை எய்த இன்னும் சொற்ப காலமே உள்ளது.

உள்ளூர்மூளவளங்களைக்குறைக்காத வகையில் வலு பெற முடியுமாதலால் இன்னும் பல ஆண்டுகளுக்கு எண்ணெயைஇறக்குமதிசெய்ய அமெரிக்கா தயாராயிருத்தல் வேண்டும்.

இறக்குமதியை நீக்குவதனால் மிகப் பெரிய பொருளாதார நன்மையைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்படும். இறக்குமதிகள்அமெரிக்காவின் சொந்த நெருக்கடிக் குள்ளாகி உள்ள எண்ணெய்க் கையிருப்பை வெறுமையாக்கியும் விடும். மேலும், உள்நாட்டு உற்பத்தியைப் பிரதியீடு செய்வதனாலும் உடனடியாகப் பாரிய எல்லா வலு மூல வளங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான தேவையை ஆற்றுவதனாலும் சூழலின் தன்மையைப் பேண இறக்குமதிகள் ஏதுவாகஇருக்கும்.

உலகின் ஏனைய பகுதி

எண்ணெய் ஏற்றுமதியாளர் உட்பட எல்லா நாடுகளும் என்றோ ஒரு நாள் எண்ணெயும் வளியும் அல்லாத ஏனைய மூலவளங்களிலிருந்து தத்தமக்குரிய வலுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டி இருக்கும். எனவே எல்லா நாடுகளும், வெவ்வேறுவிதமாகப்பாதிக்கப்பட்டாலும் கூட, எதிர்வரும் வலுப்புடைப்பெயர்வில்பங்குகொள்ள வேண்டிவரும்.

கடந்தகால வரம்பு மீறிய ஊதாரித் தன்மை

இன்று சுற்றுச் சார்பினின்று பிரித்து வைக்கப்பட்ட வறிய கட்டடங்களிலிருந்து பாரமானதும் சக்திவாய்ந்தவையுமான மோட்டார் வாகனங்கள் வரை எல்லா முதலீட்டுப் பொருள்களின் மொத்தக் கையிருப்பு ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடிய வலுவிற்கு இணங்கவே உருவாக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ எல்லாப்பொருளாதார, தொழில்நுட்ப அபிவிருத்திகளுக்கும் மலிவான வலு கிடைக்கும் என உறுதி கூறப்பட்டது. உலக வலுவின் 30 சதவீதத்துக்கும் அதிகமான பகுதியை ஐக்கிய அமெரிக்க நுகருகிறது. பெருமளவு வலுவை வீணாக்கும் நாடாக ஐக்கிய அமெரிக்கா இருப்பதனாலும் உலக எண்ணெய்க்கான அதன் தேவையை அதிகரித்துக் கொண்டே போகும் நாடாக ஐக்கிய அமெரிக்கா இருப்பதனாலும் உலகத் தேவையின் வளர்ச்சியைக் குறைப்பதற்கு ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டும்நாடாகஇருத்தற்கு ஐக்கிய அமெரிக்காவுக்கு முடியாது.

மூலவள வரம்பு

எண்ணெய்க்கான உலகத் தேவை அதிகரிக்கும் ஆண்டு விகிதம் 3 சதவீதத்தால் அதிகரிக்கும் என்று வைத்துக் கொண்டாலும் இந்த வளர்ச்சி விகிதத்துக்கு இணங்க உற்பத்தி அதிகரிக்கும் (அதிகரிக்காது) என எதிர்பார்த்தாலும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இன்றைய உலகின் பெறக்கூடிய எண்ணெய் மூலவளங்கள் 2020 க்கு முன்னர் முற்றும் முடிவடைந்துவிடும். ஊகிக்கப்படும் வளர்ச்சி விகிதம் 5 சதவீதம் என்று கொண்டால் மூலவளங்கள் 2010 ஆகும் பொழுது முற்றாக முடிவடைந்துவிடும்.

அலஸ்காவின் எண்ணெய் ஐக்கிய அமெரிக்காவின் உற்பத்தியைச் சில ஆண்டுகளுக்கு அதிகரிக்கும்.

இறுதியாக உலக எண்ணெய் மூல வளங்களில் பௌதீக, பொருளாதாரக் கட்டுப்பாடுகள் ஏற்படும் ஏனைய நாடுகளில் எண்ணெய்க்கான தேவை அதிகரிப்பினால் இக் கட்டுப்பாடுகள் துரிதமடையும் எல்லா எண்ணெய் ஏற்றுமதி நாடுகளும் அவற்றின் கொள்ளளவு வரம்புகளை 1980 இல் அடையும்.

ஆண்டொன்றுக்கு 2000 கோடி பீப்பாய எண்ணெயை உலகம் இன்று நுகருகிறது. அந்த நுகர்ச்சி விகிதத்தைப் பேணிக் காப்பதற்கும் மூலவளங்களை அதே நிலையில் வைத்துக் கொள்வதற்கும் மூன்றாண்டுக் கொருமுறை மற்றொரு குவைத்தை அல்லது இரானை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மற்றொரு டெக்ஸாஸை அல்லது அலஸ்காவை உலகம் கண்டுபிடிக்க வேண்டி வரும். பெருமளவிலான கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்டாலும் பெருமளவில் எண்ணெய்ப் பெருக்கு குறைவாகவே இருக்கும். உண்மையிலேயே உலக எண்ணெய் நுகர்ச்சியைப் பொறுத்த வரையில் எதிர்கால கண்டுபிடிப்புக்கள் சிறிதளவினதாய் அல்லது மத்திய அளவினதாய் இருக்கும் என்றும் அவை எல்லைப் புறப் பகுதிகளிலே ஏற்படும் என்றும் அவற்றைப் பெருஞ் செலவிலே பெற முடியும் என்றும் அண்மைக்கால அனுபவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. எண்ணெய் நுகர்ச்சியின் தொடர்ந்து நிலவும் உயர்மட்டவிகிதத்தை எவ்விதத்திலும் பேண முடியாது என்பது தெளிவாகின்றது.

விலை அதிகரிப்புகள்

எண்ணெய் உற்பத்தியின் கட்டுப்பாட்டையும் எண்ணெய் விலைகள் உச்ச கட்டத்தை அடைவதையும் உலகம் எதிர்நோக்கும் சமயத்தில் இத்திட்டம் ஐக்கியஅமெரிக்காவை இந்நிலைமையை எதிர்நோக்கத் தயார் படுத்தும்.

குறுகியகாலத்துக்குமேல்எண்ணெய் இறக்குமதியில் தங்கியிருப்பது ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் சடுதியானதும்பெருமளவிலானதுமான விலை அதிகரிப்பினால வடுப்படுத்தப்படும்.

உலக எண்ணெய் கேள்வியில் பெருமளவு தாக்கம் ஏற்பட்டால் எதிர்பாராத விதத்தில் விலைஅதிகரிக்கும்.

வெளிநாட்டு எண்ணெய் விலையின் உண்மை நிலையையும் எதிர்நோக்க வேண்டி இருக்கும்.

உலக எண்ணெய் உற்பத்தி சம நிலையை அடையும் பொழுது எண்ணெய் இறக்குமதி நாடுகள் அவற்றின் தேவையைக் கட்டுப்படுத்தத் தவறினால் விலைகள் உச்ச கட்டத்தை அடையலாம்; நெருக்கடியான பற்றாக்குறை ஏற்படலாம்,

4. சகல அணு வலு உலைகளும் சர்வதேச பரிசோதனைக்கு உட்பட்டவை.
5. சதி நாச நடவடிக்கைகளைப் பற்றிய அச்சம் — நீர்வீழ்ச்சி — மின்சாரத் திட்டங்கள் சதி நாசச் செயல்களுக்கு உட்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட அளவில் இந்த விளைவுகள் இருக்கும் என்ற அச்சம்.
6. தற்செயலான விபத்துக்களைப் பற்றிய அச்சம் — அதே போன்று பேரழிவுக்கு ஏதுவான விளைவுகள் ஏற்படும் என்ற அச்சம். (இன்று வரை அணு உலைப் பாதுகாப்பு சம்பந்தமான நடவடிக்கைகளின் சிறப்பு நிரூபணமாகி அதற்கான ஆவணங்களிருந்த போதிலும், இந்த அச்சம் உண்மையானது)
7. கழிவுப் பொருள்களை ஒழிக்கும் பிரச்சினை — உலகெங்கும் செயல்பட்டு வரும் நூற்றுச் சொச்ச அணுவலு இயந்திர நிலையங்கள் சம்பந்தமாக இப் பிரச்சினை இன்னும் நிரந்தரமாகத் தீர்க்கப்படவில்லை.
8. அணுவலு நிலையமொன்றின் ஆகக் குறைந்த அலகு 600 மெ.வா. என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. எங்களுடைய வலைக்கம்பி அமைப்புக்கு இது அளவு மீறிப் பெரிதாயிருக்கிறது - பெரிதாயிருக்கும்.
9. முற் செலவு உட்படச் செலவுகள் தினந்தோறும் உயர்ந்து கொண்டே போகின்றன.

(இப் பகுதியின் ஆரம்பத்தில் விவரிக்கப்பட்ட) ஒரு தேசிய வலுக் கொள்கையின் ஏழாவது பாகம் மற்றப் பாகங்களை விடத் தெளிவற்றதாயுள்ளது — ஆனால் ஒரு வேளை மிக முக்கியமானதாய் விளங்கக்கூடும். அத்துடன், சகல கொள்கை நிர்ணயத்துக்கும் பொருந்தும் மேலதிக அம்சமொன்றையும் கொண்டுள்ளது. இப் பாகமே வலு முதலீடுகளைப் பற்றி முடிவு செய்வதற்குரிய விதிமுறைகளை மீண்டும் உருவாக்கும். அஃதாவது எதிர்காலத்தை நோக்கி எமது மனோபாவத்தை மீண்டும் உருவாக்கும் என்பதாம். மனிதன் நாளைய தினத்தில், அடுத்த வருடத்தில், தனது சொந்த முதுமையில் மட்டுமன்றி, இனி வரவிருக்கும் குறைந்தது ஓரிரு சந்ததிகளிலாவது நெஞ்சறியச் சிரத்தை கொள்ளும் ஒரு பிராணி என்பது நிரூபணமான ஒரு மூல சூத்திரம். சகல ஞாபகஸ்தம்பங்களும் மனிதனின் இந்த வல்லமையை எடுத்துக்காட்டும் அத்தாட்சிகளாகும். ஞாபகச் சின்மை அமைக்க முடிவு செய்தவரின் ஆயுட் காலத்தை விட நீண்ட காலம் நீடிப்பதற்சாக அமைக்கப்பட்ட ஞாபகச் சின்னங்களுக்கு இலங்கையில் குறைவில்லை. இத்தகைய ஞாபகச் சின்னங்களில் முற்றாக முருகியல் கலாசார மதிப்புக் கொண்டவையும் மிகுந்த பொருளாதார மதிப்பு உள்ளவையும் அடங்கும். பிற்கூறியவற்றில் குளங்களும் நீர்ப்பாசனத்துக்ரிய கால்வாய்களும் அடங்கும்.

எனினும், 'நவீன' கருத்திட்ட மதிப்பீட்டு முறைகளில் ஓர் இருபது அல்லது முப்பது வருட ஆயுட் காலத்துக்கு அப்பால், எதிர்காலம் சூனியமாகத் தோற்றும்படி ஆக்கப்படுகிறது. இது ஒருவேளை தனியார் துறை முயற்சிகளுக்குப் பொருத்தமுடையதாக இருக்கலாம். ஏனெனில், முதலீடு செய்வதற்கான ஒரு நிபந்தனையாக, முன்னறியத்தக்க கால் அளவுக்குள்ளே முதலீட்டின் ஒரு பகுதி 'மீள வேண்டும்' என நாட்டங் கொள்வதுடன், இந்த மீளுகை பண உருவத்தில் அல்லது பணத்தின் பெறுமதியில் நிகழ வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். கழிவு முறைக் காசு ஓட்டம், கழிவு வகிதங்கள், முதல் வருட இலாப விகிதம், இலாபத்தின் உள் விகிதம் முதலியவற்றிற்கும், விரிந்த தோற்றமுடைய சமூகக் கிரய - பயன் ஆராய்ச்சிப் பரிசீலனைகளுக்குக் கூட, இந்த மீள்-கொடுப்பனவுக் கோட்பாடுதான் பொறுப்பாகும். பொது நிதிகள் குறைவாயிருப்பதனால், நல்ல இலாபம் கிடைக்குமென்று நம்பிக்கைக்கான வாய்ப்பு கண்ணுக்குத் தெரிந்தால் மட்டுமே முதலீடு செய்ய வேண்டுமென்று இக் கோட்பாடுகள் கூறுகின்றன.

இக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, (இனித்தான் ஆரம்பிக்கப்படவிருக்கும் திட்டங்களிலிருந்து) கிடைக்கக்கூடிய நீர் வீழ்ச்சிக்கு - மின்சாரத்துக்கு கிலோவாட் ஒன்றுக்கு 16 சதம் செலவாகுமென்றும், இதில் 12 சதம் அளவில் அந்நிய பணச் செலவென்றும் கூறும் எஞ்சினியர்களும் இருக்கிறார்கள். ஆனால், ஒரு வேளை 30இலிருந்து 40 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு உபயோகிக்கப்படும் உறுதியான மின்வலுவை மட்டும் கணக்கெடுக்கும் அடிப்படையிலேயே இச் செலவுகளாகுமென்பதை அவர்கள் எங்களுக்குச் சொல்லத் தவறிவிடுகிறார்கள், கவனமாக ஆராய்ந்து பார்க்கும் போது, பிரஸ்தாப வரையறுக்கப்பட்டகால அளவில் கிடைக்கும் சகல துணை வலுவையும், அது தீர்ந்த பின்னர் கிடைக்கும் சகல வலுவும் அநேகமாக இலவசமாகக் கிடைக்குமென்பதை இந்தக் கணக்கீடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ரெயில்வேக்கள், ரெயில்வே மின்மயமாக்கல் திட்டங்கள் (மெய்யாக நெடுஞ்சாலைகளும்) போன்ற கனத்த உள்ளமைப்புகள் அதிக பணச் செலவை ஏற்படுத்திக் குறைவான வருவாயையே அளிக்குமென இதே சூத்திரம் தோன்றச் செய்கின்றது. ஏனென்றால், எதிர்கால நன்மைகளை இவை கணக்கிலெடுத்துக் கொள்ளாது கழித்து வருகின்றன. நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரை, எதிர்காலத்தில் உபயோகிப்போரினால் மிச்சமாக்கப்படும் ஆள் நேரத்துக்கு (சாத்தியப்பாடு பற்றிய ஆராய்ச்சிப் பரிசீலனைகளில்) மதிப்புக்களைச் சாட்டுவதன் மூலமும்; நிறைவுக்குப் பிற்பட்ட காலம் சம்பந்தமாக எவ்வகையான கணக்கீட்டையும் முற்றாகப் புறக்கணிப்பதன் மூலமும் இது வெல்லப்படுகிறது.

முடிவாக, ஒருவர் இந்த ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டத்துக்குத் திரும்பவும் சென்று, ஆரம்பத்திலே, அமெரிக்காவிலுள்ள வலு பற்றிய கண்ணோட்டத்துக்கு ஏன் இவ்வளவு அழுத்தமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்று கேட்கலாம். இதற்குரிய பதில் என்னவென்றால், வலுவைப் பிரமாண்டமான அளவில் உற்பத்தி செய்து உபயோகித்துவரும் அந்த நாடு முழு உலகினதும் வலுச் சந்தையிலே வகித்துவரும் நிலையால், அங்கு எடுக்கப்படும் அநேகமாக ஒவ்வொரு நடவடிக்கையினாலும் நாம் நஷ்டமடைய வேண்டியுள்ளது என்பதாகும். அண்மையில் அலாஸ்கா எண்ணெய்க் குழாய்ப் பாதையில் ஏற்பட்ட வெடி விபத்துக்கூட, 1977 டிசம்பரில் நடைபெறவிருக்கும் ஒபெக் (பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனம்) எண்ணெய் மந்திரிகளின் மகாநாட்டின் மீது தனது விளைவுகளை ஏற்படுத்துமென்பது திண்ணம். அதன் விளைவுகள் இங்கும் நிச்சயமாக உணரப்படும்.

வலுவும் போக்குவரத்தும்

— ஜ. தியன்டாஸ்

பட்டயக்கணக் கறிஞரான ஜே. தியன்டாஸ், ''போக்குவரத்து,'' ''வலு'' ''சூழல்'' முதலியன தொடர்பான விஷயங்களில் நீண்டகாலமாக ஆய்வுகள் நடத்திவந்துள்ளார். இவை தொடர்பாக பல ஆய்வு அறிக்கைகளையும் அவர் சமர்ப்பித்துள்ளார். இங்கே பொதுப் போக்குவரத்துத் துறைக்கான வலுத் தேவைகட்கு முதன்மை அளிக்கவேண்டியதன் அவசியம் பற்றி அவர் ஆராய்கிறார்.

ஏறத்தாழ எல்லா இடங்களிலும் நகர இடவாய்ப்பும் பதிக்கப்பட்ட புகைவண்டிப் பாதையும் குறைவாகப் பெறப்படும் வளங்களாகும். ஒபெக்நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகளில் வலு சாதாரணமாகக் குறைவாகும். உலகளாவிய முறையில் டார்க்கும் பொழுது 30-60 ஆண்டுகளில் எண்ணெய் அற்றுப் போய்விடும் என்று எண்ணப்படுகின்றது. உண்மையிலேயே இலங்கையில் இலகுவில் முடியாதது எண்ணெயாகும். ஐக்கிய அமெரிக்காவிலும் அதே நிலைமை தான். இது எவ்வாறு அமைந்துள்ளதெனின் சில தலைவர்கள் மறைமுகமாக ஒபெக்விலை அதிகரிப்பை வரவேற்றுள்ளனர்.

வலு இவ்வாறு செயல்படுகிறது. வீதி வழியாக ஒரு தொன் பொருளைக் கொண்டு செல்லும் வலுவைக் கொண்டு புகைவண்டி மூலம் அல்லது நீர் மார்க்கமாக நான்கு மடங்குப் பொருள்களைக் கொண்டு செல்லலாம்.

பிரயாணிகளைப் பொறுத்த வரையில் இலங்கையில் நிலவும் விகிதாசாரம் ஏறத்தாழ மோட்டார் வண்டியில் செல்பவனுக்கு பஸ் வண்டியிலோ, புகைவண்டியிலோ செல்பவனுக்குத் தேவைப்படும் வலுவைப் போன்று பத்து மடங்கு தேவைப்படும்.

வலுவுக்கு மற்றொரு பரிமாணமும் உண்டு எண்ணெயை நேரடியாக உபயோகிப்பதை விட மின்சாரத்தை உபயோகிப்பது பயனுடையதாயிருக்கும் நீரினால் அல்லது அணுவினால் பெறப்படும் மின்சாரத்துக்கு எண்ணெயோ கரியோ தேவையில்லை. சுற்றாடலும் அசுத்தமடையாது. இரைச்சலும் இருக்காது. போக்குவரத்துக்கு மின்வலுவை எவ்வாறு பயன்படுத்தலாம்? புகைவண்டியையும் டிராம் வண்டியையும் டிரோலி பஸ்களையும் பிரயாணிகளைக் கொண்டு செல்வதற்காகவும் புகைவண்டியையும், கால்வாய்களையும் பண்டங்களை எடுத்துச் செல்வதற்காகவும் பயன்படுத்தலாம். இந்தப் பரிமாணத்தில் வீதி வழியாக லொறி வண்டிகளில் பொருள்கள் எடுத்துச் செல்வதும் மோட்டார் வண்டிகளில் பிரயாணிகளை கொண்டு செல்லப்படுவதும் இடம் பெறவில்லை. புதிய விதமான பட்டறி கலங்களும் எரிபொருள் கலங்களும் பற்றிய ஆர்வம் அற்றுப் போயிருப்பதனால் இவை இங்கு முக்கிய இடம் பெறா.

எனவே வலுவைச் சேமிப்பதற்கு சரியான போக்குவரத்து சாதன முறைமையும் வலுவன் முறைமையும் அவசியமாகும்.

1975 ம் ஆண்டின் நவம்பர் மாத ''பொருளியல் நோக்கு'' இதழில் போக்குவரத்து தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட இக்கருத்து வலு பற்றிய நிலையைத் தெளிவாக விளக்கி நிற்கிறது.

முடிவுப் பயன்பாட்டுப் போக்குவரத்து

1976 ல் இலங்கையின் மொத்த உள்ளூர் எண்ணெய் விற்பனவில் (கலன் கணக்கில்) அரைப்பங்கை போக்குவரத்துக்கான எரிபொருட்களான பெட்ரோலும், போக்குவரத்து டீசலும் பெற்றிருந்தன என்பது கவனிக்கத்தக்கது.

மக்கள், கார்கள் மூலமான தங்களது சொந்தப் பயணங்களுக்கென 2 கோடி 70 இலட்சம் கலன் பெற்றோலைச் செலவிட்டுள்ளனர் என்பது புலனாகிறது. கலனுக்கு 25 மைல் ஓட்டம் என்ற வீதத்தில் கணக்கிட்டால், 67 கோடி வாகன மைல்களை இவை ஓடி முடித்திருக்கும். இவ்வகையில், ஓடும் நிலையிலுள்ள 90,000 வாகனங்களுள் ஒவ்வொன்றும் சராசரி வருடம் 7,500 மைல் தூரத்தை (மாதம் 625 மைல்) ஓடி முடித்திருக்கும்.

இ.போ.ச. ஓரளவு பயனுள்ளதும் சுருக்க விளக்கமானதுமான புள்ளிவிவரத் தரவுகளை வெளியிடுவதால், பஸ் போக்குவரத்துக்கு உத்தேச விவரங்களைக் கணிக்க வேண்டியதில்லை. நுகரப்பட்ட உண்மையான எரிபொருள் கலன் அளவைத் தவிர ஏனைய விவரங்களை இது தருகிறது; எனினும் மேற்படி கலன் அளவைப் பெற்றுக் கொள்ளல் சிரமமல்ல. அறிக்கைகளில் 1964 முதல் 1976 க்கு மிடையேயான இ.போ.ச. முக்கிய போக்குவரத்து விவரக் குறிகாட்டிகள் தரப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பயணங்களைப் போலன்றி, பேரளவுப் போக்குவரத்திற் காணப்படக் கூடிய திறற் குறைவு, முக்கிய நேரங்களிலும் குறித்த சில பாதைகளிலும் பஸ்களில் ஏற்படும் ஜனநெரிச்சலும் அதிக கூட்டமும், பஸ் போக்குவரவு பற்றி சார்பு விகிதாசாரத்துக்கு காரணமாய் அமைகின்றன. 1976 ன் வலுக் குறிகாட்டியின்படி கலனுக்கான பிரயாணிகள் மைல் 367 ஆகவும் பிரயாணிகள் மைலுக்கான பிரித்தானிய வெப்ப அலகு 452 ஆகவும் இருந்தன.

புகையிரதப் போக்குவரத்தைப் பொறுத்தளவில் இப் புள்ளி விவரங்களைப் பெற்றுக்கொள்ளல், பிரயாணிகள் புகையிரத வண்டிகள், சாமான் வண்டிகள் என்பனவற்றுக்குச் செலவாகும் எரிபொருள் புள்ளி விவரங்கள் வெவ்வேறாக வெளியிடப்படாதபடியால், சிரமமாகவுள்ளது.

பஸ்களைப் பொறுத்தவில், பேரளவுப் போக்குவரத்தில் நிகழக்கூடிய இயற்கையான வலுச் சிக்கனம், கலனுக்கு உயர்வான ஒரு பிரயாணிகள் மைலைக் காட்டுகிறது.

புகையிரத வலுப் பாவனையைப் பொறுத்தளவில் கிடைக்கும் ஆகப் பிந்திய வருடப் புள்ளிவிவரம் 1974 இனதாகும். இதன்படி கலனுக்கான ஆள் மைல் 216. தலா ஆள் மைலுக்கான பிரித்தானிய வெப்ப அலகு 768.

தனியார் கார்களை இங்ஙனம் மின்சாரமயப்படுத்த முடியாது; பாட்டரியால் இயங்கும் கார்களைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றுக்கான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலும், சூழற் பிரச்சினைகள் இல்லாத ஒன்றைக் கண்டுபிடிப்பதிலும் தடைகள் இன்னும் நிலவுகின்றன.

முன்னர் முடிவு செய்யப்பட்டதுபோல், பின்வரும் வழிமுறைகளுள் சிலவற்றையாவது கொள்கையின் அடிப்படையில் இலங்கைப் போக்குவரத்து முறைமை அமையலாம் என ஆலோசனை கூறப்படுகிறது. இவற்றை விட்டு மேற்படி முக்கிய காரணம் இல்லாத விடத்து மாத்திரமே இவற்றைப் பின்பற்றலாம்.

(அ) உடல்விருத்திச் செய்யும் போக்குவரத்து நடவடிக்கையை கூடிய அளவு குறைப்பதற்கான இடத்தைக் கண்டுபிடித்தல்.

(ஆ) முடியுமான இடங்களில் மாறாக வலுவையும் மனித வலுவையும் மின் வலுவையும் இதே முறையில் வலுவாசப் பயன்படுத்தல்.

(இ) முடியுமான சந்தர்ப்பங்களில் வீதிக்குப் பதிலாக கால்வாய்களையும் புகைவண்டிகளையும் பயன்படுத்தல்.

(ஈ) வீதியிலோ தனிப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாகப் பொதுவாகனங்களைப் பயன்படுத்தல்.

(உ) நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணத்தை கிராமப்புறடர்தைகளுக்காக ஒதுக்குதல் தனிப்பட்ட மோட்டார் வண்டிகளுக்காகத் தெருக்களை அகலமாக்குவதற்கும் பாலங்கள் அமைப்பதற்குப் பதிலாக பாரமான வாகனங்களுக்காகத் தேவைப்படும் வீதிகளுக்காக அடித்தளத்தைச் சீர்படுத்துதல்.

வியாபாரப் பொருள்கள்

தேயிலை

விலைகளின் வீழ்ச்சி

1977 ஏப்ரில் விலைகளுடன் ஒப்பிடுகையில் மே மாதத்துக்கான விலைகள் பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளன. எனினும் இவ் விலைகள் நன்மை விளைப்பன என்றே வியாபார வட்டாரங்கள் கருதுகின்றன. ஏனெனில் ஏப்ரிலுக்கான சராசரி விலை கொழும்பு ஏல விற்பனையில் பெறப்பட்ட மிகக் கூடிய விலை என்பதனுலேயாம். 1977 மே மாதத்துக்கான மொத்து விற்பனைச் சராரி கடந்த ஆண்டின்அதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் பெருமளவு முன்னேற்றத்தையே குறிப்பிடுகின்றது. மொத்த விற்பனைச் சராசரி கடந்த ஆண்டு மே மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூபா 8.47 ஆக இருந்து இந்த ஆண்டு மே மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூபா 17.57 ஆக உயர்ந்துள்ளது. இது 107 சதவீத உயர்வாகும். 1977 ஜனவரி - மே கால கட்டத்துக்கான கிலோ ஒன்றின் மொத்த சராசரி விற்பனை விலை ரூபா 18.16 ஆக உச்ச கட்டத்தை அடைந்தது. கடந்த ஆண்டு இது ரூபா 17.77 ஆகவே இருந்தது. இது 147 சதவீத அதிகரிப்பாகும். (கீழேயுள்ள அட்டவணையைப் பார்க்க). ஏனைய பானங்களின் குறிப்பாகக் கோப்பியின் விலையும் குறைந்துள்ளது. இந்த தேயிலைச் சந்தையின் மந்தமான போக்கு கொழும்பில் மாத்திரம் அல்லாது உலக ஏல விற்பனை நிலையங்களிலும் நிலவியது.

மொத்தத் தேயிலை லிற்பனை சராசரி
ஜனவரி — மே **1975 — 77**

		1975	1976	1977
உயர் வளர்	—	7.57	8.23	19.43
மத்திய வளர்	..	7.01	7.04	17.17
தாழ் வளர்	..	7.97	8.05	17.72
மொத்தம்	..	7.49	7.77	18.16

மே மாதத்துக்கான மொத்த விற்பனை ஏறத்தாழ 32 கோடியே 10 இலட்சம் ரூபாவாகும். கடந்த ஆண்டு இதே காலத்தில் பெறப்பட்டது 11 கோடியே 60 இலட்சம் ரூபாவாகும். இது ஏறத்தாழ 167 சதவீத அதிகரிப்பாகும்.

பிரபலம் வாய்ந்த ஒரு தரகரின் கருத்துக்கிணங்க இந்தத் தொகை கூட்டு மொத்த விற்பனவின் 1/5 பகுதியாகும். கடந்த ஆண்டு முழுவதிற்குமான மொத்த விற்பனவு 167 கோடியே 30 இலட்சம் ரூபாவாகும். இதிலிருந்து புலப்படுவது யாதெனின் தேசிய பொருளாதாரத்தில் தேயிலைக் கைத்தொழில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதாகும்.

உற்பத்தி

மே முடிவடைந்ததும் தேயிலை உற்பத்தித் தொகை பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளில் 1977 இல் 5 கோடி கிலோகிராமால் அதிகரித்துள்ளது. இலங்கையின் உற்பத்தி இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 90 இலட்சம் கிலோகிராமால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இதே காலகட்டத்தில் கென்யாவின் உற்பத்தி 1 கோடியே 70 இலட்சம் கிலோகிராமால் அதிகரித்துள்ளது. தென் இந்தியாவின் உற்பத்தி ஏறத்தாழ 1 கோடியே 20 இலட்சம கிலோகிராமால் அதிகரித்துள்ளது. விவரங்களைக் கீழே காண்க.

பிரதான உற்பத்தி நாடுகளின் உற்பத்தி
(பத்து இலட்சம் கிலோகிராம்களில்)

நாடுகள்		காதங்கள்	1976	1977	கொத்தம்	1976	1977
இலங்கை	..	மே	26.4	23.2	மே வரையில்	86.2	95.2
வ. இந்தியா	..	மே	39.7	42.2	மே வரையில்	65.6	74.1
தெ. இந்தியா	..	மே	*18.2	16.9	மே வரையில்	*44.0	55.9
கென்யா	..	மே	4.3	7.2	மே வரையில்	20.0	37.0
மாலாவி	..	மே	2.0	2.6	மே வரையில்	18.9	21.8
உகண்டா	..	ஏப்ரில்	*1.4	1.3	ஏப்ரில் வரையில்	*4.7	4.7
தன்ஸேனியா	..	மே	1.0	1.3	மே வரையில்	6.4	6.9
இந்தோனேசியா	..	ஏப்ரில்	*5.0	5.3	ஏப்ரில் வரையில்	*20.7	19.8
பங்களாதேஷ்	..	மே	*3.2	3.2	மே வரையில்	*6.1	6.6
						*272.6	*322.0

* மதிப்பிடப்பட்டுள்ளது

வாசனைத் திரவியங்களும் அத்தியாவசிய எண்ணெய்களும்

வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதி மூலம்கடந்த ஆண்டு மேலதிகமாக 4 கோடியே 33 இலட்சம் ரூபா வருவாய் பெறப்பட்டுள்ளது. 1975 இல் பெறப்பட்ட வருவாயை விட இது 165 சதவீதம் அதிகமாகும். 1976 இல் வாசனத் திரவியங்களிலிருந்து பெறப்பட்ட அத்தியாவசிய எண்ணெய்களினுல் மேலதிகமாக 35 இலட்சம் ரூபா பெறப்பட்டது. 1975 ஒடு ஒப்பிடுகையில் இது 150 சதவீதம் அதிகமாகும். வாசனைத் திரவியங்களுள் கறுவா ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட வருவாய் வெகுவாய் அதிகரித்துள்ளது. இதனுல் 1976இல் 7 கோடியே 34 இலட்சம் ரூபா பெறப்பட்டது. 1975இல்பெறப்பட்ட தொகை ரூபா 4 கோடியே 50 இலட்சமாகும். இக் கால கட்டத்தில் கறுவாக் கட்டையிலிருந்து பெறப்பட்ட வருவாய் ஏறத்தாழ இருமடங்காயது. எனினும் அதன் கப்பல் செலவற்ற விலையில் குறிப்பிடத்தக்க விலை அதிகரிக்கவில்லை. உலகின் கறுவா ஏற்றுமதி நாடுகளுள் முதலிடத்தை வகிக்கும் நிலைமை இலங்கைக்குத் தொடர்ந்து இருந்தது. 1975 ஆம்

1972—76 இல் கறுவாப்பட்டைகளினதும் சிராய்களினதும் ஏற்றுமதிகள்

ஆண்டு					அளவு (கி.கி.)	பெறுமானம்	ஒரு கி.கி. த.செ.த. விலை
கறுவாப் பட்டை:						ரூபா	ரூபா
1972	..	..	..	..	4,142,465	26,937,799	6.50
1973	..	..	..	..	4,436,106	31,136,966	7.02
1974	..	..	..	..	5,037,663	50,932,847	10.11
1975	..	..	..	..	3,346,280	38,924,751	11.62
1976	..	..	..	..	5,291,764	68,510,718	12,95
கறுவாய்ச் சிராய்:							
1972	..	..	..	..	1,089,518	3,438,074	3.15
1973	..	..	..	..	2,083,527	6,740,590	3.23
1974	..	..	..	..	2,630,724	8,544,234	3.25
1975	..	..	..		464,744	1,066,643	2.29
1976	..		..	..	510,183	1,424,718	2.79

ஆண்டை விட 75 சதவீத அதிகரிப்பு இவ்வாண்டில் ஏற்பட்டது. இலங்கையிலிருந்து பரம்பரை பரம்பரையாக கறுவாவை இறக்குமதி செய்த மெச்சிகோவும் ஐக்கிய அமெரிக்காவும் பெருமளவு கொள்வனவு செய்தது. 1976இல் 36,000 ஏக்கரில் கறுவா பயிரிடப்பட்டது. அதன் பயனாக 247,069 கி.கி. கறுவாப் பட்டைகளும், 795,901 கி.கி. கறுவாச் சிறு பட்டைகளும் 247,609 கி. கி. கறுவா இறகுகளும் 510,183 கி. கி. கறுவாச் சிராய்களும், 907 கி.கி. கறுவா மரப் பூக்களும் 1976 இல் ஏற்றுமதி செய்யப்பட்டன. கடந்த ஐந்து ஆண்டுகளில் கறுவாப் பட்டைகளினதும் கறுவாச்சிராய்களினதும்ஏற்றுமதி நிலைமை வருமாறு. முன்னையஅட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

ஏலக்காய்

இலங்கையின் வாசனைத் திரவிய ஏற்றுமதிகளுள் இரண்டாம் இடத்தை வகிக்கும் ஏலக்காய் அது பயிரிடப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி காரணமாக 1976 இல் அவ்வளவாக சோபிக்கவில்லை. 1976இல் 161,630 கி.கி. களே ஏற்றுமதி செய்யபபட்டன. 1975 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 333,000 கி. கி. ஆகும். இது 52 சதவீத வீழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறது. எனினும் ஏற்றுமதி விலைகள் 100 சதவீதத்தால் அதிகரித்தமையினால் மொத்த ஏற்றுமதி வருமானம் அவ்வளவாகக் குறையவில்லை. 1976 இல் கிலோ ஒன்றுக்கான சராசரி ஏற்றுமதி விலை ரூபா 38 இலிருந்து 77.40 ஆக நிலவியதால் ஏற்பட்ட விலை அதிகரிப்பினால் ஏற்பட்ட நன்மையை உற்பத்தி வீழ்ச்சியினால் நாடு பயனடையவில்லை. பின்வரும் அட்டவணை காட்டுவது போல் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்றுமதிக்காகக் கிடைத்த தொகை கூடியும் குறைந்தும் வந்துள்ளது.

1872 — 76 இல் ஏலக்காய் ஏற்றுமதிகள்

ஆண்டு	அளவு (கி.கி.)	பெறுமானம் ரூபா	கி.கி. எண்ணெய் த.கச.த. விலை ரூபா
1972	214,743	5,747,809	26.76
1973	186,091	8,451,457	45.41
1974	147,379	6,467,238	43.88
1975	333,775	12,727,855	38.13
1976	161,630	12,194,085	75.44

கராம்பு

வாசனைத் திரவியங்களில் கிராம்பு இரண்டாவது முக்கிய ஏற்றுமதிப் பண்டமாக 1976 இல் விளங்கியது. 1975 இல் 45 இலட்சம் ரூபாவான கிராம்பு ஏற்றுமதி வருமானம் 1976 இல் 1 கோடியே 75 இலட்சமாக அதிகரித்தது. நிலையான விலை ஏற்றம் இடம் பெறுவிட்டாலும் 1976 இல் ஏற்றுமதிக்காகக் குறிப்பிடத்தக்க அளவினால் அதிகரித்த தொகை கிராம்பு பெறப்பட்டது. 1975 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட 105,572 கி. கி. உடன் ஒப்பிடுகையில் 1976 இல் ஏற்றுமதி 375,112 கி. கி. ஆக இருந்தது. இது 205 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. சராசரி ஏற்றுமதி விலை கி. கி. ஒன்றுக்கு 1975 இல் ரூபா 40.76 ஆக இருந்து 1976 இல் ரூபா 46.44 ஆக அதிகரித்தது. இது 14 சதவீத அதிகரிப்பாகும். 1976 இல் இறுதிப் பகுதியை அடையும் பொழுது விலை அதிகரித்துக் கொண்டே இருந்தது. அதன் எதிர்காலம் சிறந்ததாக இருந்தது. கிராம்புக்கான சருவதேசவிலை டொன் ஒன்றுக்கு £3400 (பவுணுக) இருந்து 1976 இல் £5000 (பவுணுக) அதிகரித்தது. 1977 இல் அதன் எதிர்காலம் இலங்கையை பொறுத்த வரையில் மிகவும் திருப்திகரமாக இருந்தது. புதிய இறக்குமதியாளரின் பேருக்கமே இதற்குக் காரணமாகும். 1976ஐப் பார்க்கிலும் 1977 இல் இலங்கையின் கிராம்பு உற்பத்திஅதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது பயிரிடப்படும் 2000 ஏக்கரிலிருந்து கிராம்பு பயிரிடப்படும் பரப்பும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சாதிக்காயும் சாதிபத்திரியும்

1975 இல் சாதிக்காயினதும் சாதிபத்திரியினதும் ஏற்றுமதியும் அதிகரித்தது. 1975 இல் சாதிக்காயின் ஏற்றுமதி 131,729 கி.கி. ஆக இருந்து 1976 இல் 295,601 ஆக அதிகரித்தது. இது 124சதவீத அதிகரிப்பாகும். எனினும் 1976 இல் ஏற்றுமதி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. 1970 இல் கி.கி. ஒன்று ரூபா 9.70 ஆக இருந்த சராசரி விலை ரூபா 9.30 ஆக குறைந்துள்ளது. ஏற்றுமதித் தொகையின் அதிகரிப்பினாலேயே கூடுதலான ஏற்றுமதி வருமானம் பெறப்பட்டுள்ளது. 1975 இல் ஏற்றுமதி வருமானம் ரூபா 1,278,133 ஆக இருந்தது. 1976 இல் ரூபா 2,750,051 ஆக அதிகரித்துள்ளது.

கோப்பியின் சடுதியான வீழ்ச்சி

இந்த ஆண்டு பெப்ரவரி 11 ஆந் திகதியிலிருந்து மிகக் குறைந்தமட்டத்துக்கு கோப்பிப் பெறுமானம் லண்டன் சந்தையில் மே மாதக் கடைசி வாரத்தில் வீழ்ச்சி உறறது. ஜூன் மாத முதல் வாரத்திலும் இவ்விலை வீழ்ச்சி தொடர்ந்து இருந்தது. பதனிடப்பட்ட மிதம்ஞ்சிய கோப்பிக் கையிருப்பை விற்று விடுவதற்காக ஓர் இருத்தலுக்கான மொத்த விலையை 20 சதத்தால் லண்டனில் உள்ள முக்கிய கொள்வனவாளர் குறைத்துள்ளனர். மேயிலும் அதன் முதற் பகுதியிலும் இறக்குமதி செய்யப்பட்ட பச்சைக் கோப்பிக் கொட்டை வீழ்ச்சியினாலும் இவ் விலைக் குறைப்பு ஏற்பட்டது. தொடர்ந்து ஏற்பட்ட விலை வீழ்ச்சியினால் லண்டன் சந்தையில் ஜூன் 18 ஆந் திகதி உடன் முடிவடைந்த வாரத்தில் கோப்பி விலையில் 500 (பவுண்) அழிக்கப்பட்டது இந்த ஆண்டிலே மிகக் குறைந்த விலையே இவற்றுககுக கிடைத்தன. இந்த விலை வீழ்ச்சிக்குரிய குறிப்பிட்ட காரணங்கள் இல்லாத போதிலும் ''கரடி போல் நடந்து கொள்கிற'' பல்வேறு காரணங்களால் இந்நிலை ஏற்பட்டுள்ளது என வர்த்தக வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. தொடர்ச்சியான கேள்வி இன்மையும், நுகர்வுவெட்டும், கோப்பி பிரதியீடுகளும் பனி அச்சம் நீங்கி பிரேஸிலில் சூடான சுவாத்திய நிலை நிலவுவதும், அண்மைக்கால உற்பத்தியில் 14 சதவீதம் அதிகரிக்கும் என ஐ. அமெரிக்காவின் முன் அறிவிப்பும் இந் நிலையை உருவாக்கி உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

1976 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட சாதிபத்திரியின் அளவு 295,61 கி.கி. ஆகும். இதனுல் ரூபா 2,70,051 வருமானம் பெறப்பட்டது. க. செ. அ. சராசரி விலை இந்த அடிப்படையில் கி.கி. ஒன்று ரூபா 20.35 ஆக இருந்தது. 1975 இன் புள்ளி விவரங்களோடு இதனை ஒப்பிட முடியாது ஏனெனில் 1977 இன் இலங்கை சுங்கப் பகுதியின் அறிக்கையில் பாரதூரமான பிழைகள் ஏற்பட்டுள்ளன. இவ்வறிக்கைக்கு இணங்க 1,415,732 கி.கி. கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூபா 1,200,864 ரூபா வருமானமே பெறப்பட்டுள்ளது. இதிலிருந்து கி.கி. ஒன்றுக்கான ஏற்றுமதி விலை ரூபா 0.84 எனப் பெறப்படுகின்றது. தொகை அதிகமாகப் பதியப்பட்டிருப்பது தெளிவாகின்றது. 1976 க்கான புள்ளிவிவரமும் இத்தொகை மேலதிகப் பதிவையே காட்டுகின்றது என வர்த்தக வட்டாரங்கள் கூறுகின்றன. சாதிக்காய் பயிரிடப்பட்டுள்ள மொத்தப் பரப்பு 2,500 ஏக்கர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மிளகு

மிளகு ஏற்றுமதியில் பெறப்பட்ட வருவாய் சிறிதளவிலே அதிகரித்துள்ளது. எனினும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு குறைந்துள்ளது. 1975 இல் ரூபா 1,192,470 ஆக இருந்த வருமானம் 1976 இல் ரூபா 1,753,396 ஆக அதிகரித்துள்ளது (ஐரோப்பாவிலும் நிவ் யோர்க்கிலும் உள்ள வியாபாரப் பொருள் சந்தைகளில்) இந்த ஆண்டில் சருவதேச விலைகள் சீரடைந்ததெனினும் இலங்கையின் ஏற்றுமதிகள் (அ) உள்ளூர் நுகர்ச்சி அதிகரிப்பின் காரணமாகவும் (ஆ) மொத்த விளைச்சல் குறைந்தமை காரணமாகவும் வரையறுக்கப்பட்டன. 1975 இல் 96,119 கி.கி. ஆக இருந்த ஏற்றுமதி 1976 இல் 89,742 கி.கி. ஆக 12 சத வீதத்தால் குறைந்துள்ளது. 1975 மட்டத்திற்குக் கீழாக 1976 இல் ஒரு கி.கி. உக்கான சராசரி ஏற்றுமதி விலை 42 சத வீதமாகக் குறைந்தது. (1975 இல் ரூபா 35.48 ஆக இருந்த சராசரி ஏற்றுமதி விலை 1976 இல் ரூபா 20.68 ஆக இருந்தது. 1976 இல் இலங்கையிலிருந்து ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, நெதர்லாந்து, ஜப்பான், ஐக்கிய அமெரிக்க ஆகிய நாடுகளுக்கு மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. மிளகு பயிரிடப்பட்டுள்ள மொத்தப் பரப்பு 16,000 ஏக்கர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இஞ்சியும் ஏனைய வாசனைந் திரவியங்களும்

1976 இல் இஞ்சி ஏற்றுமதியினுல் பெறப்பட்ட வருமானம் 100 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1975 இல் ரூபா 442,189 ஆக இருந்த ஏற்றுமதிவருமானம் 1976 இல் ரூபா 913,438 ஆக உயர்ந்துள்ளது. ஏனைய வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதியினுல் பெறப்பட்ட வருமானம் 1975 இல் ரூபா 98,678 ஆக இருந்தது. 1976 இல் அவற்றினுல் பெறப்பட்ட வருமானம் ரூபா 3,149 ஆகும்.

அத்தியாவசிய எண்ணெய்கள்

அத்தியாவசிய எண்ணெய்களினுல் பெறப்பட்ட வருமானம் 1976 இல் 1 கோடியே 50 இலட்சம் ரூபாவாக உயர்ந்தது. 1975 இல் பெறப்பட்ட வருமானம் 68 இலட்சம் ரூபாவாகும். கறுவா இலையின் ஏற்றுமதியில் அதிக அளவு வருமானம் சம்பாதிக்கப்பட்டது. 110,863 கி.கி. ஏற்றுமதி செய்யப்பட்டு ரூபா 4,474,228 பெறப்பட்டது. 1975 இல் பெறப்பட்ட வருமானம் ரூபா 1,578,495 ஆகும். சிட்ரொநெல்லா தைலம் மற்றெரு முக்கியமான எண்ணெய் ஆகும். 1976 இல் ரூபா 3,543,227 பெறுமதியான 227,220 கி.கி. ஏற்றுமதி செய்யப்பட்டன. 1975 இல்

(26 ஆம் பக்கம் பார்க்க)

	1975 பெறுமானம் ரூபா	1976 பெறுமானம் ரூபா
வாசனைத் திரவியங்கள்:		
மிளகு	1,192,470	1,753,396
கறுவாப்பட்டைகள்	38,924,751	65,510,718
கறுவாத் துண்டுகள்	3,685,374	5,334,365
கறுவா சிரகுகள்	642,143	1,051,306
கறுவாச் சிராய்	1,066,643	1,424,718
கறுவா மரப்பூ முதலியன	733,636	10,411
ஏலக்காய்-முழு அளவு		134,554
ஏலக்காய்-தண்டு அல்லாதவை	4,300,346	17,419,799
ஏலக்காய்த் தண்டுகள்	455,347	844,094
சாதிக்காய்	1,278,133	2,7500,51
சாதிபத்திரி	1,200,864	644,043
கிராம்பு	12,727,855	12,194,085
இஞ்சி	442,189	913,428
ஏனையவை	98,670	3,149
	66,748,421	109,988,117
அத்தியாவசிய எண்ணெய்கள்:		
புல் எண்ணெய்	2,022,826	3,543,227
கறுவாப்பட்டை எண்ணெய்	157,697	579,918
கறுவா இலை எண்ணெய்	1,578,495	4,474,228
கறுவா எண்ணெய்	30,707	538,294
ஏலக்காய் எண்ணெய்	113	
மிளகு எண்ணெய்	8,408	114,3563
சாதிக்காய் எண்ணெய்	421,085	733,507
இஞ்சி எண்ணெய்	51,561	259,531
புல் எண்ணெய்	18,876	225,240
ஏனைய அத்தியாவசிய எண்ணெய்கள்	2,472,180	38,349
	6,761,948	10,506,653
ஏனைய சிறு உற்பத்திகள்:		
எள்	22,971,188	24,358,246
கடுகு	1,138,800	1,221,354
ஆமணக்கு	14,679	
ஏனைய எண்ணெய் விதைகள்	580,079	372,497
இஞ்சி எண்ணெய்		3,645
வெள்ளை பப்பெய்ன்	2,849,222	1,977,153
ஊதா பப்பெய்ன்	281,248	288,756
	27,835,216	28,221,651

மக்கள் வங்கியின் 200 துவ கிளை

ஒரு இழையம் வளர்கிறது. அது பிரிந்து பலவாகப் பெருகுகிறது. இது போன்றே 1961 ல் நிறுவப்பட்ட மக்கள் வங்கி கடந்த 15 ஆண்டுகாலமாக வளர்ச்சியுற்று தற்போது நாட்டின் நிதி அமைப்பின் ஈடு இணையற்ற ஓர் இடத்தை வகிக்கிறது. 16.8.71ல் இவ்வங்கி தனது 100 வது கிளையைத் திறந்தது. 1977 மே மாதத்தின் முதற் பகுதியில் 200 வது கிளை திறக்கப்பட்டது. இதன் திறப்போடு, மக்கள் வங்கி, வளர்ச்சி விகிதத்தையும், கிளை வலைப் பின்னலையும், வைப்புகள் இடப்பெயர்வையும் பொறுத்தளவில் இலங்கையின் ஆகப் பெரிய வர்த்தக வங்கியாக உயர்ந்து விட்டது. 1961ல் மக்கள் வங்கி நிறுவப்பட்டபோது, பெரிய பாரம்பரியமும் நிபுணத்துவ ஆற்றலும் உள்ள பிரபல அந்நிய வங்கிகளோடு இவ்வங்கி போட்டியிட்டு நின்று பிடிக்கமுடியுமா என சந்தேகங்கள் கிளப்பப்பட்டன. மக்கள் வங்கி ஒரு வறிய மனிதனின் வங்கியாகும். இது விவசாயிகளையும் சிறிய வர்த்தகர்களையும் கைவினைஞர்களையும் ஊக்குவிக்க ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும். கடந்த 15 வருட காலத்தில் திறக்கப்பட்ட கிளைகளின் மாதிரி ஆய்வு, திறக்கப்பட்ட அநேகமான கிளைகள் கிராமப் பிராந்தியங்களிலும் உப நகரப் பிராந்தியங்களிலும் திறக்கப்பட்டுள்ளன என்பதை காட்டுகிறது. இவ்வங்கிக்கு வழங்கப்பட்ட முதற் பிரதான கடமைகளில் ஒன்று உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதாகும். இக் கடன்களின் திருப்பிச் செலுத்தலில் 75 சதவீதம் வரை மத்திய வங்கியினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட போதிலும், இத் திட்டத்தின் இயக்கம் அதன் கூட்டுத் தொகுப்பியல்பு, முதலீடு செய்யப்பட்ட பணத்தின் தொகை, பண மாற்றங்கள்' அவை சம்பந்தமான மோசமான நிர்வாக அலுவல்கள் போன்றவை காரணமாக பெரிய ஒரு சுமையாக இருந்துள்ளது. இவ்வங்கியின் பிரதான குறிக்கோள்களில் ஒன்று விவசாயத்துறையை ஊக்குவிப்பதாகும். இத்தகைய திட்டமே மக்கள் வங்கியினால் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியிருந்தது. எனவே நெல் விளைச்சல் பிராந்தியங்களில் அதன் கிளைகளை செறிவாய் நிறுவுவதன் தேவை இன்றியமையாததாயிற்று. அத்தோடு முதல் காரியமாக மக்கள் வங்கி கூட்டுறவுச் சங்கங்களை மேற் பார்வையிட வேண்டியதுமாயிற்று. கிராமிய வங்கித்துறைகளைத் தொடர்ந்து கிராமியக் கடனின் விஸ்தரிப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்த போது 1971ல் கூட்டுறவியக்கத்தின் சீரமைப்பும், சகல கூட்டுறவு வங்கிகளினதும் சுவீகாரமும், மக்கள் வங்கியை இத்துறையின் கடன்கொடு தலைமை வங்கியாகச் செய்தன. இச் சந்தர்ப்பத்தில், ஒரு தேர்தற் றொகுதியில் ஆகக் குறைந்தது ஒரு கிளையையாவது இவ்வங்கி திறப்பதற்குத் தூண்டிய கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒரு நெருங்கிய ஒத்துழைப்பும் சேர்ப்பிணைப்பொன்றும் அவசியமாய் இருந்தது. கூட்டுறவுச் சீரமைப்பு, ஒவ்வொரு தேர்தற் றொகுதியிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றை மட்டுமே ஏற்படுத்துவதாயிற்று. முதல் 100 மக்கள் வங்கிக் கிளைகளும் 10 வருட கால கட்டத்தில் நிறுவப்பட்டன. கிளைகளின் அமைப்பாரம்ப காலங்களில் பயிற்சிபெற்ற ஆளணிகள் இன்றியும், கிராமப்புறங்களில் பொருத்தமான கட்டிட வசதிகள் இன்றியும் இவ்வங்கி கஷ்டத்திற்குள்ளானதோடு பிரசித்தி பெற்ற அந்நிய வங்கிகளுடனும் குறிப்பாக இலங்கை வங்கியுடனும் போட்டியிட்டு இயங்க வேண்டியதாயிற்று. சில கிளைகள் இலங்கை வங்கிக் கிளைகள் ஏற்கனவே இருந்த சில இடங்களில் நிறுவப்பட்ட போதிலும் இரண்டு கிளைகளினதும் சேவைகளில் முட்டல் மோதல்கள் ஏற்படாத அளவுக்கு அவற்றின் சேவைகள் வேறுபட்டிருந்தன.

ஒரு தசாப்தத்திற்குப் பின் 100 கிளைகளினதும் இயக்கத்தால் அடைந்த அனுபவத்தோடு இவ்வங்கி அதன் கிளைத் திறப்பு விகிதத்தை வேகப்படுத்தக் கூடியதாயிற்று. நகை அடவு பிடிகாரர் சட்டத்தின் கீழ் நகை அடவு பிடித்தலை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் படைத்த வர்த்தக வங்கியாக மக்கள் வங்கி ஒன்று மட்டுமே இயங்குவதாயிற்று. எனவே இது, அநேகமாக, பல தொகுதி மக்களுக்கு பாரிய நிவாரணம் அளித்த ஒரு விசேடித்த கைங்கரியமாகும். பிரத்தியேகமாக நகை அடவு பிடித்தலை மேற்கொள்ளும் 3 புதிய கிளைகள் இப்போது திறக்கப்பட்டுள்ளன. இக்கிளைகளில் இரண்டு பொரல்லையிலும் மருதானையிலும் திறக்கப்பட்டுள்ளதோடு மூன்றாவது கிளை அநேகமாக இந்திய வம்சாவளியினரான நகை வியாபாரிகளின் கோட்டையாக இயங்கும் புறக்கோட்டையில் உள்ள செட்டியார் தெருவில் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கி மேற்கொண்டுள்ள மற்றொரு விசேஷத்த கடமை பல்கலைக் கழக மாணவர்களுக்கு கடன் வழங்குவதாகும். இவ்வலுவலுக்கும் கடதாசி எழுத்து வேலைகள் கூடுதலாக இருந்ததால் கட்டுபெத்தை, யாழ்ப்பாண வளாகங்களைத் தவிர அநேகமான ஏனைய வளாகங்களில் கிளைகள் திறக்கப்பட்டன. கிளைகள் திறக்கப்படாத மற்ற வளாகங்களிலும் கிளைகள் திறக்கப்படுவதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாவலி ஆறு வட மத்திய மாகாணத்திற்குத் திசை திருப்பப்பட்டதோடு தண்ணீரில்லாத வெற்று நிலமாகக் கிடந்த பல பரப்பு நிலங்கள் விவசாயத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டதோடு மக்கள் வங்கி தனது மாமூலான கடமையான கிளைகள் திறப்பினை இவ்விடங்களில் எல்லாம் செய்வதாயிற்று. இதன் படி இவ்விடங்களில் பல கிளைகள் திறக்கப்பட்டன. மிகவும் தூரமான உட்பிரதேசங்களான கல்நேவ, எப்பாவலை, தம்புள்ளை, நௌல, கலன்பிந்துனுவாவ, நொச்சியாகம, கணேகமுவ, கெபித்தகொல்லவ போன்ற இடங்களிலே இக்கிளைகள் திறக்கப்பட்டன.

கல்நேவவில் மக்கள் வங்கி ஒப்பீடில்லாத வங்கியபிவிருத்திப் பரிசோதனையொன்றை மேற்கொண்டது. வங்கி வாடிக்கையாளர்களின் சக்திகளை உறிஞ்சி பலரது உயிர்களைப் போக்கிவந்த மலேரியா நோயைக் கட்டுப்படுத்துதற்கு அவர்களுக்கு குயினைன் மாத்திரைகள் வழங்கியதே அப்பரிசோதனையாகும். அதன் அடுத்த நடவடிக்கை விவசாயிகளுக்கு எருமைகள், உரம், கிருமி நாசினி

(26 பக்கம் பார்க்க)

வங்கி விகிதம் உயர்த்தப்பட்டது

இலங்கை மத்திய வங்கி அதன் வட்டி வீதக்தை 1977 ஜனவரியில் 6½ சதவீதத்திலிருந்து 8½ சதவீதத்திற்கு உயர்த்திற்று. 6½% வட்டிவீதம் ஏறத்தாழ ஏழு வருடங்களுக்கு நடைமுறையில் இருந்துள்ளது. இது 1970 ஜனவரியில் நிலை நிறுத்தப்பட்டதாகும். இதற்கு முதல் இருந்த வட்டி வீதமோ 5½% ஆகும்.

குறிப்பிடத்தக்க நீண்ட காலத்திறகு இலங்கை ஒரு குறைந்த வட்டி வீதத்தை ஆதரித்து வந்துள்ளது. 1950 லிருந்து 1959 வரை வங்கி வட்டி வ்தம் 2½% ஆக இருந்துள்ளது. அதே நேரத்தில் சேமிப்பு வைப்பிற்கான வட்டி வீதம் 2% ஆகும். முன்செலுத்து பணத்திற்கான வட்டி வீதமோ வெனில் 3% க்கும் 8% க்கும் இடையில் இருந்து வந்துள்ளது. 1960 க்கும் 1968 க்கும் இடையிலான கால கட்டத்துல் வர்த்தக வங்கிகளின் சேமிப்பு வட்டி வீதம் 4½% ஆக இருந்துள்ளது. 1972 ல் தேசிய சேமிப்பு வங்கி நிறுவப்பட்டு சேமிப்பு வட்டி வீதம் 7.2% ஆகவும் நிலையான வைப்புகள் வீதம் 7.5% ஆசவும் உயர்த்தப்பட்டதோடுதான் சேமிப்பு வைப்புகளில் ஒரு பாரிய அதிகரிப்புக் காணப்பட்டது. அதே நேரத்தில் அரசாங்க பிணை வைப்புகள் மீதான வட்டி 9% ஆக உயர்த்தபபடலாயிற்று.

சேமிப்புகள் தொடர்பாகவும் முன்செலுத்து பணம் தொடர்பாகவும் அதிகபட்ச விகிதங்களை மத்திய வங்கி நிர்ணயிக்க நாணயச் சட்டம் அனுமதிக்கின்றது. எனினும் இக் கட்டமைப்புக்குள் இயங்குகையில் வர்த்தக வங்கிகள் 1971 முதல் 1974 வரையில் நடந்தது போல் தாராளமான கடன் வசதிகளைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன. ஆனால் இது 1974 மே 24ல் கடன் உச்சவரம்பொன்றை நடைமுறைப் படுத்துதற்கு இட்டுச் செய்வதாயிற்று.

மத்திய வங்கி பலவிதமான குறிச்சோள்களை அடைவதற்காக வங்கி விகிதத்தை உயர்த்துகிறது. முதலாவதாக ஒரு உயர்ந்த வங்கி வீதம் அதிக வட்டி ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலம் தனியார் சேமிப்புகளை வர்த்தக வங்கிகள் இடப் பெயர்வு செய்வதற்கு உந்துதல் அளிக்கின்றது. பதுக்கி வைத்த பணத்தை இது வெளிக்கொணருகிறது. வட்டி வீதம் உயர்ந்ததாயிருக்கையில் மத்திய வங்கி வட்டாரங்களிலிருந்து கடன் பெறுவது வர்த்தக வங்கியின் வளவாய்களில் ஒரு ஆயக் கட்டாக அமையும். எனவே, இது வளவாய் டகிர்வில் ஒரு தடையாக இயங்குகிறது. வட்டி வீதங்கள் உயர்வாய் இருக்கும் முதலீட்டாளர்கள் தமது மூலதனத்தை வெகு கவனமாக உடயோகிப்பதோடு தமது உத்தேச முதலீடுகளின் இலாபங்கள் மீதான செலவைக் கணக்கிட்டு ஆராய்வதில், தமது சக்தியை டயன்படுத்தவும் உதவும். ஒரு உயர்ந்த வங்கி விகிதத்திற்குப் டாதகமான தாககங்களும் உண்டு. ஏனெனில், இது அபிவிருத்தி வழிப்பட்ட திட்டங்களில் மூலதன உபயோகத்தை ஊக்குவிப்பதில்லை. இத்தகைய கட்டங்களில் அதிக வட்டி வீதத்தின் தாக்கங்கள் வரி விடுதலைகள், இறக்குமதித் தடைகள், கட்டுப்பாடுகள், அந்நிய செலாவணி உரிமைப் பத்திரங்கள், மாற்றப்படக் கூடிய ரூபாக் கணக்குகள் ஆகியவற்றிலுள்ள ந மைகள் ஏன் சில வேளைகளில் அவ்வட்டி வீதத்தின் மீதே ஒரு உபமான்யம் ஏற்படுத்துவது போன்ற வேறு சலுகைகளால் இணக்கம் பெறுகின்றன. விசேட வர்த்தகம் போன்றவேறு விடயங்களுக்கு கடன் கொடுப்பதிலும் பார்க்க விவசாயம், கைததொழில் போன்றவற்றிற்கான கடன்களைப் பொறுத்தமட்டில் மத்திய வங்கி அறவிடும் வீதம் சாதாரணமாகக் குறைவானதாகும்.

வங்கி வீதத்திலான அதிகரிப்பு அரசாங்கம் பெறும் கடன்களிலும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அரசாங்கம், பெரிய அளவுக்கு, அரசாங்க பிணைப் பத்திரங்களின் மூலம் கடன் பெறுவதில் தங்கியுள்ளது. வங்கி வீதம் அதிகரிக்கப்படும்போது அரசாங்க பிணைப் பத்திரங்களின் வட்டி வீதமும் எப்படியோ அதைத் தொடருகிறது. இது அரசாங்கத்திற்குப் பெரும் நஷ்டமாகும். கடந்த காலங்களில் அரசாங்கம் தனது கடனுக்கு அதிகளவுக்கு இலங்கையின் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கூட்டு முதலீட்டு நிதி, சேமலாப நிதி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் நிதிகளிலேயே தங்கியிருந்துள்ளது. இவை ஒன்று சேர்ந்து வரவு - செலவு மதிப்பீட்டு பற்றுக் குறைகளை ஈடு செய்வதற்குத் தேவையான ரூபாக் கடன் கையிருப்பை உள்ளடக்கி உள்ளன. தற்சமயம் அரசாங்க பிணைப் பத்திரத்திற்கு வழங்கப்படும் வட்டி வீதம் 9% மாகும்.

வர்த்தக வங்கிகள் தமது வட்டி வீதங்களை உயர்த்துமாயின் வங்கி விகிதங்கள் மேலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம். எனவே வங்கிகள் வங்கிவீத உயர்வுகளை தமக்குள் ஆகர்ஷித்துக் கொண்டு உள்நாட்டு ரீதியாக இடம் பெயர்க்கப்பட்ட சேமிப்புகள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றில் தங்கியிருந்துள்ளன. இது வங்கிகளின் இலாபத்தினை கட்டுப்படுத்துவதால் வங்கிகள் போதிய அளவிற்கில்லாத பிணைப்பத்திரங்கள் மீது அதிக துணிச்சல் தேவையான கடன்களை மேற்கொள்வதில் கவனமாய் உள்ளன. இத்தகைய கடன்கள் அபிவிருத்தி நோக்கங்களுக்காக இருந்தாலும் கூட அவற்றின் இலாப எல்லைகளை குறைத்து விடுமோ என்ற அச்சத்தில் இவை இப்படி நடந்து கொள்கின்றன. கூட்டுறவு வங்கிகளுக்கு தலைமை வங்கிப்படுத்து நிறுவனமாக திகழும் மக்கள் வங்கி, வங்கி விகித அதிகரிப்பினால் பாதிக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றாக திகழ்கிறது. இதனால் பாதிக்கப்படும் மககள் வங்கியின் ஒரு துறை கூட்டுறவு இயக்கத்துக்கு கடன் கொடுக்கும் துறையாகும். தற்போது கூட்டுறவுத் துறைக்கான இதன் முன்பணம் மொத்த முன்பணங்களினதும் 29.55 சதவீதமாக உள்ளது. இவ் ங்கி கூட்டுறவுத் துறைக்கு வருடம் ஒன்று 8 சத வட்டி வீதத்தில் கடன் வழங்குகிறது. வங்கி விகிதம் 8½ சதவீதமாக அதிகரிக்கப்பட்டதோடு இவ் வங்கிவேறு வழிகளிலிருந்து சேர்ந்த வருமானங்களைக் கொண்டு கூட்டுறவுத் துறைக்கு கடன் வழங்குதற்கு உபமானியப்படுத்தி வருகின்றது. இது மட்டுமன்றி கூட்டுறவுத்துறைக்கு அவற்றின் வங்கியுடனான நடவடிக்கைகளே இணைப்பாக்குதற்கு விசேட உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலமும் சேவையாற்றி வருகின்றது. தவணை முறையான பரிசோதனைகள், கிராம வங்கிகள் போன்றவற்றின் மேற் பார்வைகள் போன்ற வேறு கைங்கரியங்களையும் இவ்வங்கி மேற்கொள்கிறது.

(26ஆம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

உரையாடலின் முடிவு

வடக்கு - தெற்கு உறையாடல் என் அமைக்கப்பட்ட மாநாடு முக்கிய கருத்து வேற்றுமைகளைத் தீர்க்காமலே ஜூன் 3 ஆந் திகதி பாரிசில் முடிவடைந்தது. சருவதேசப் பொருளாதார முறைமையைச் சீர்படுத்தும் நோக்கத்துடன் பாரிசில் உலகின் செல்வந்த நாடுகளினதும் வறிய நாடுகளினதும் 27 பிரதிநிதிகளின் ''உரையாடல்'' 1976 பெப்ரவரியில் ஆரம்பித்தது. மாநாட்டில் பங்குபற்றியவர்கள் ஒருமைப்பாடு காணமுடியாமல் போனமை வருத்தத்துக்குரிய விஷயம் என்று விருந்து ஓம்பிய ஜனாதிபதி வலெரி கிஸ்காட் டெஸ்டாங்க் 18 மாத காலமாக நடைபெற்ற மாநாட்டை முடித்து வைத்தார். செல்வந்த நாடுகளின் புனித எண்ணங்களைப் பற்றி ஒன்பது நாடுகளைக் கொண்ட ஐரோஇபிய பொதுச் சந்தையின் தலைவர் இவ்வாறு சுருக்கமாகக் கூறினார். ''உலகச் சமுதாயத்திலே நிலவும்மிகப்பாரிய வேறுபாட்டை எம்மால் இனி மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது''. (பாரிஸ் மாநாட்டை நடத்தும் யோசனையைக் கொண்டிருந்த) பிரெஞ்சு ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் ஆறுதல் அறிகுறிகள் இருக்கின்றன. அம் மாநாடு 1973—74 காலகட்டத்தின் எதிர்ப்பு அபாயத்துக்காக உரையாடலை பிரதியீடு செய்த முற்போக்கு நடவடிக்கையை மேற்கொள்ள'' மேற்கத்திய கைத்தொழில் நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் ஒரு வாய்ப்பை அளித்துள்ளது.

மாநாட்டைப் பூரண தோல்வியிலிருந்து காப்பாற்ற மேற்கு நாடுகள் அளித்த உதவி வியாபார நிதிச் சலுகைகள் பற்றி வளர்முக நாடுகள் திருப்தி அடையவில்லை. இறுதியாக மேற்கு ஜெர்மனி அதன் தீர்ப்பை அகற்றியதன் பின்னர்வியாபாரப் பொருள்களின் விலைகளை நிலைபெறச் செய்வதற்கான ஒரு பொதுநிதிக்கான திட்டங்களைக் கொண்ட ஓர் இடைக்கால உடன்பாட்டை மாநாடு ஏற்றதன் மூலம் மேற்கத்திய நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையே தோன்ற இருந்த சிக்கலான பிரச்சினை தவிர்க்கப்பட்டது. நிதியை நிறுவதற்காக ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை விடக் கூடுதலாக உடன்பாடு எதையும் செய்யவில்லை எனத் தோன்றுகின்றது.

வளர்முக நாடுகளுக்கான மேற்கத்திய உதவியின் எதிர்கால அளவு பற்றியகருத்து வேறுபாடுகளை நிவிர்த்தி செயயவும் ஓர் உடன்பாடு மேற்கொள்ளப்பட்டது. எல்லாக் கைத்தொழில் நாடுகளும் ஐக்கிய நாடுகளின் அரசாங்க உதவிக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 0.7 சதவீதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வளர்முக நாடுகள் கோரியுள்ளது. மீண்டும் பொதுவாக இது அங்கீகரிக்கப்பட்டது. இந்த குறிக்கோளை அடைய இயலாத ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் நன்மைக்காக ஒரு தவிர்ப்பு ஷரத்தும் எழுதப்பட்டது. சருவதேச பொருளாதாரி முறைமையில் அமைப்பு மாற்றங்களுக்கான பெரும்பான்மை யோசனைகளும் உடனடியான பிரச்சினைகளுக்கான அவசர நடவடிக்கைகளுக்கான சில யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை வளர் முகநாடுகளிலிருந்து பங்குபற்றுவோர் தமது வருத்தத்தைத் தெரிவித்தனர். ஒரு புதிய சருவதேசப் பொருளாதார ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கான பரவலான சமமான திட்டத்துக்கான குறிக்கோள்களை விடக் குறைவாகவே மாநாட்டின் முடிவுகள் இருந்தன என ''19 இன் குழு'' கருதியது.

உலகின் மிக வறிய நாடுகளின் பெரும்பான்மையான முக்கிய தேவைகளுக்கு உதவுமுகமாக 100 கோடி டொலர்களைக் கொண்ட விசேட நடவடிக்கைத் திட்டத்தை மாநாட்டில்'' எட்டின்குழுவான'' கைத்தொழில் நாடுகள் சமர்ப்பித்தன. இந்த யோசனையால் ''19 இன குழுவான'' வளர்முக நாடுகள் பெரிதும் கவரப்படவில்லை உலகின் செல்வந்த நாடுகளினதும் வறிய நாடுகளினதும் ஒரு புதிய பொருளாதார உடன்பாட்டின் நிறைவேற்றப்படாத ஏனைய தேவைகளைப் பொறுத்த வரையில் ஒரு சலுகையாகவே தோன்றியது.

மாநாட்டு முடிவில் ''உரையாடல்'' உண்மையாகவே முடிவுற்றது போல தோன்றினும் உலகக் கருத்தரங்குகளில் தொடர்ந்து நடைபெறும் என்பது தெளிவாகி உள்ளது. 1977 நொவம்பரில் நடைபெறும் அங்டாட் மாநாட்டுக்கும் இவ் உரையாடல் செல்லும்.

வியாபாரப் . . . .

(23 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இதனால் பெறப்பட்ட வருமானம் ரூபா 2,022,826 ஆகும். 1976 இல் ஏலக்காய் எண்ணெய், இஞ்சி எண்ணெய், சாதிக்காய் எண்ணெய் ஆகியவற்றின் ஏற்றுமதி மூலம் அதிக வருமானம் பெறப்பட்டது. 1976. இல் 523 கிலோ ஏலக்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூபா 538,296 பெறப்பட்டது. 1975 இல் பெறப்பட்ட வருமானம் ரூபா 30,375 ஆகும். 1976 இல் 538 கிலோ இஞ்சி எண்ணெய் ஏற்றுமதி மூலம் ரூபா 259,531 பெறப்பட்டது. 1975 இல் பெறப்பட்ட வருமானம் ரூபா 50,561 ஆகும். 1976 இல் 70,964 கிலோ சாதிக்காய் எண்ணெய் ஏற்றுமதி மூலம் ரூபா 733,507 பெறப்பட்டது. 1975 இல் பெறப்பட்ட வருமானம் ரூபா 420,081 ஆகும்.

ஜனவரி	1977	1976
கறுவா	£ 470	£ 350
இஞ்சி	£ 820	£ 500
மிளகு	$ 2450	$ 885
மஞ்சல்	$ 490	$ 270

வங்கியும் . . . .

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவற்றை உள்ளடக்கிய தேவையான உபகரணங்களை வழங்குவதாயிருந்தது. அத்தோடு இவ்வங்கி விவசாயிகளின் வீடுகளுக்கு ஒரு உத்தியோகத்தர் குழுவினை அனுப்பி கடன் பெறுவதற்கான நானாவித படிவங்களை நிரப்புவதில் உள்ள தொல்லைகளை விளக்கி வந்துள்ளது. இதன் காரணமாக இவ் வங்கிக்கு ''வெறுங்கால் வங்கியாளன்'' என்ற ஒரு காரணப் பெயர் சூட்டப் படுவதாயிற்று. மக்கள் வங்கியின் 200 வது கிளை, தெருவோர மரக்கறி, மீன் வியாபாரிகளுக்கு நாளாந்தம் கடன் வழங்குவதிலிருந்து கூட்டுறவு வங்கிப்படுத்தல், சர்வதேச வங்கிப்படுத்தல் ஆகியன வரையிலான பல்வேறு நடவடிக்கைப் பிராந்தியங்களைத் தழுவும், புதிய முன் மாதிரி அபிவிருத்தி வங்கிப் படுத்தலில் இராட்சத முன்னெழுச்சியைக் கொண்டதாயுள்ளது.

வங்கி விகிதம் . . . .

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைப்புகள் மீதான வர்த்தக வங்கிகளின் வட்டி வீதங்கள் இப்பொழுது 5½ சதவீதமாக உள்ளன. 1975 ல் நிலவியதிலும் பார்க்க இது 1 சதவீதம் அதிகமானதாகும். மக்கள் வங்கி பெரிய தொகை வைப்புகளை இடம் பெயர்க்க உதவும் திட்டமான முதலீட்டு சேமிப்பு சணக்கின் மீது இம் மக்கள் வங்கி 7.2 சதவீதம் வட்டி வழங்குகிறது. ரூபா 10 லட்சத்திற்கு அதிகமான வைப்புகள் மீது இவை 8½ சதவீதம் வட்டி வீதங்கள் வழங்கிய சந்தர்ப்பங்களுமுண்டு. கடன் விகிதங்கள் மீது வங்கி விகிதம் ஈடு செய் அதிகரிப்பை கொண்டுவருமாயின், குடிசைக் கைத்தொழில்கள், பெரிய அளவுகளிலும் நடுத்தர அளவுகளிலும் உள்ள கைத்தொழில்கள், வீடு அமைப்புகள் போன்ற பல பொருளாதார அபிவிருத்தி பிராந்தியங்கள் கஷ்டமுற வேண்டி ஏற்படும். ஏனெனில் உபமானியம் வழங்கப்பட்டால் அன்றி மூலதனப் பயன்பாட்டிற்கு உயர்ந்த வட்டி விகிதங்கள் குந்தகம் விளைவிக்கும் என்பதாம் எனினும் ஒரு விரும்பத்தக்க விளைவு என்னவெனில் நுகர்ச்சிக்கான கடன்கள் வங்கியினால் கட்டுப்படுத்தப்பட்டு அது பணவீக்கத் தன்மைகளை தடுப்பதற்கு உதவும் என்பதாம்.

சிறப்புக் கட்டுரை

தேசியத் திட்டமிடலின் முழு உள நோக்கும் நடுத்தர காலத் திட்டத்துக்கான அபிவிருத்தி உபாயங்களும்

ஓர் அடிப்படை வரைச் சட்டம்

— எர்ல் சி. டி சில்வா

MOWBRAY COLLEGE
KANDY.

திட்ட, பொருளாதார அமைச்சின், அபிவிருத்தித் திட்ட அலகு, தேசியத் திட்டம் (விவசாயம்) பிரிவின் துணைப் டணிப்பாளர், கலாநிதி எர்ல் சி. டி சில்வா, தேசியத் திட்டமிடலின் முழு உளநோக்கும் அபிவிருத்தி உபாயங்களும் என்ற தலைப்பில் விரிவான ஓர் அறிக்கையை தயார் செய்துள்ளார். இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இக் கட்டுரையில் உயர் மட்டத்திலான முதலீடுக்கும் அபிவிருத்திக்கும் உற்பத்திக்கும் இன்றியமையான பல விவரங்கள் ஆராய்யப்பட்டுள்ளன.

தேசியத் திட்டமிடலின் நோக்கம், நாட்டின் மனித, பொருள் மூல வளங்களை முழு நாட்டினதும் சிறப்பான நன்மை கருதிப் பயன்படுத்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். இதுதான் அதன் மேலோட்டமான இலக்கு எனக் கொள்ளலாம். எனவே, ஒரு தேசியத் திட்டமானது, அரசியல் நிர்வாகம், பொதுத்துறை, தனியார்துறை என்பன, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தங்களது இலக்குகளையும் அடையவென, தங்களது பொருளாதார நடவடிக்கைகளையும் ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொள்ளக் கூடிய ஒரு வேலைத் திட்டத்தை வழங்குகிறது.

மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்போ, தலா வருமானத்தில் ஏற்படும் உயர்ச்சியோ, இந்நாட்டின் பெரும்பான்மையினரான வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமெனக் கூற முடியாது; அதே போன்று, மான்யங்கள் மூலமும் உற்பத்திக் காரணிகளான நிலம் போன்றன மூலம் வருமானத்தை மறு பங்கீடு செய்வதன் மூலமோ மக்களது வாழ்க்கைத் தர நிலைமைகளை நிச்சயம் அதிகரிக்கலாம் எனக் கூறமுடியாது. சகல அத்தியாவசிய நுகர் தேவைப் பொருள்களினதும் உற்பத்தியும் மேற்கூறியவற்றுடன் சேர்ந்து வேகமாக வளர்ந்தாலன்றி இதனை எய்தவே முடியாது. வறுமையும் அதனடித் தோன்றிய துன்பங்கள், மக்களின் மெய் வருமானத்தில் வீழ்ச்சி, தொடர்ந்து உயர்ந்து சென்ற விலைகள், அத்தியாவசியப் பொருட்கள் மிக அரிதாகவே பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்தமை முதலிய பல துன்பங்களைக் கடந்த சில வருடங்களாகப் மக்களுட் பெரும்பான்மையானோர் அனுபவிக்க வேண்டியிருந்தது. இக்காலை புதிய ஒரு பணக்கார வர்க்கமும், ஒரு அதிகாரிகள் வர்க்கமும் உருவாகின; இதே வேளை, வறிய மக்கள் மேலும் வறியோராக மாறினர். எனவே, சமூக நீதி என்பது யதார்த்தமாக விடுக்க வேண்டின், குறிப்பாக உற்பத்தித் துறைகளிலும், பொதுவாக பொருளாதாரத்திலும் விரைவான அபிவிருத்தி ஏற்படல் அத்தியாவசியமாகவுள்ளது.

வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்குமுகமாக அண்மைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் கீழ், பெருந்தொகையான படித்த வேலையற்றோர் வெள்ளைச் சட்டைத் தொழில்களிலும், உற்பத்திசாராத் தொழில்களிலும் அமர்த்தப்பட்டனர். இவர்களது நன்மைக்காக மட்டுமன்றி, இத்தகைய உதவியடிப்படையான தொழில் வழங்கல் பொருளாதாரத்தில் மேலும் சுமைகளை ஏற்படுத்துமென்பதற்காகவும்; தொழில் துறையில் எதிர்காலத்தில் மேலும் பாதிப்பைக் கொண்டுவருமென்பதற்காகவும் நன்மை தரக்கூடிய தொழில் துறைகளில் இவர்கள் அமர்த்தப்பட வேண்டியது அவசியமாகும். விவசாயம், கைத்தொழில், கடற்றொழில் போன்ற உற்பத்தித் துறைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டால்தான் பொருளாதாரம் மேலும் பலருக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடியதாக மாறும். இதனால் தான் உற்பத்தித் துறையில் விரைவான விருத்தி ஏற்பட வேண்டுமென்பது இன்றைய நிலையில் தேசியத் திட்டமிடலின் அதிமுக்கிய ஓர் அம்சமாகக் காணப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக நாட்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுத் திட்டக் கொள்கைகளும், நிதித்துறை நிர்வாகமும் முன்னெப்போதையும் விட மிகவும் பாரதூரமான ஒரு நிதி நெருக்கடியில் நாட்டை வீழ்த்தியுள்ளன. பொதுப் படுகடன்களும், வெளிநாட்டுக் கடன்களும் அளவு கணக்கின்றி அதிகரித்து விட்டன; இதனால், முதலீட்டுச் செலவினங்களும், ஏன் நடைமுறைச் செலவினங்களில் ஒரு பகுதி கூட உள்ளூர், வெளிநாட்டுக் கடன்களிலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பேரளவில் நோக்குவதாயின் இன்று காணப்படும் மிகக் குறைந்த சேமிப்பு - முதலீட்டு விகிதங்களுக்கும் (இது 12% க்கும் குறைவாகவே இருந்துள்ளது) அதனைத் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சியிலேற்பட்டுள்ள தேக்கத்துக்கும் இதுவே காரணமாகும். அத்துடன் அத்தியாவசியத் தேவைகள் பற்றாக்குறையாகக் காணப்படுவதற்கும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கும் கூட இதுவே காரணமாகும். முதலீடுகள் போதாமற் காணப்பட்டாலும், அரிதாகக் கிடைத்த உள்நாட்டு வெளிநாட்டு மூலவளங்களை உடனடியாக நன்மை தரக் கூடிய உற்பத்தித் துறைகளில் மேலும் சிறப்பாகப் பயன்படுத்தியிருப்பின், மக்கள் அனுபவித்த துன்பங்கள் ஓரளவுக்காவது குறைந்திருக்கும். அத்துடன், ஊழல்கள், முறையற்ற நிர்வாகம் ஆகியவற்றின் மூலமான வீண் விரயங்கள் பெருமளவிற் குறைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இதற்கு மாறாக உற்பத்திப்பயன் தரா ''மதிப்பு மிகு'' திட்டங்களிலேயே பணம் முதலீடு செய்யப்பட்டது.

பொதுத்துறையைப் பொறுத்தளவில், சோஷலிஸம் என்ற பெயரில் உற்பத்தித் திறன்மிக்க வளங்களை அரசாங்கம் பெருமளவில் கையேற்றமையும், அரிதாகக் கிடைக்கும் உள்நாட்டு வெளிநாட்டு மூலவளங்களை உற்பத்தி

நடவடிக்கைகளிலோ, மக்களுக்குப் பயன்தரக்கூடிய அத்தியாவசியப் பொருளுற்பத்தியிலோ ஈடுபடுத்தாது, பொதுத் துறையைப் பெருமளவு விஸ்தரிக்கப் பயன்படுத்தியமையுமே கடந்த சில வருடங்களில் முக்கிய கொள்கைகளாகவிருந்தன.

பொருளாதார வளர்ச்சி குன்றியமை, உற்பத்தியிலும் உற்பத்தித் திறனிலும் வீழ்ச்சி ஏற்பட்டமை, இறக்குமதி வரவு செலவுகளில் ஏற்பட்ட பெரும் பாதிப்பு, மெய் வருமான மட்டத்திலேற்பட்ட வீழ்ச்சி, வேலையில்லாதோர் எண்ணிக்கை உயர்ந்தமை, கீழுழைப்பு நிலை பயங்கரமாகப் பரவியமை, பலர் சோம்பேறிகளாகி காலத்தை வீணே கடத்தியமை, அரிதாகக் கிடைக்கும் மூலவளங்கள் பொதுத்துறையில் வீண் விரயம் செய்யப்பட்டமை, தனியார் துறையைச் சார்ந்த பெரும் உற்பத்தித் துறைகள் பலமிழந்தமை என்பனவற்றுக்கெல்லாம் இதுவே காரணமாகும். எனவே, பெருந் தொகையான மக்கள் உற்பத்தித் தொழில்களிலிருந்து மாற்றப்பட்டதுடன், இயற்கையாகக் கிடைக்கும் ஊழியர் பங்களிப்பும் கிடைக்காது போயிற்று.

அடுத்த திட்டக் காலத்தில், நாட்டின் பெருமளவு மனிதவளம் முதல், நிலம் முதலிய சகல உற்பத்தி மூலவளங்களையும் உயர் பயனைத் தரவல்ல வகையில் உபயோகிக்க வேண்டியது இன்றைய நிலையில் அத்தியாவசியமாகவுள்ளது. பொதுத்துறையில், இவை இன்று முறையாகப் பயன்படுத்தப்படாது வீணே காணப்படுகின்றன. இதனைச் சாதிக்கும் வரை பொருளாதாரத்தில் மீட்சியைக் காண முடியாது.

பொதுத் துறையைப் புனரமைப்புச் செய்து புத்துயிரளித்தலே இதற்கு ஒரே தீர்வாகும். முறையற்ற வரவு செலவுத்திட்ட, நிதிக் கொள்கைகள் காரணமாக, பதுக்கல்காரர்களதும் கள்ளச் சந்தைக்காரர்களதும் செல்வாக்கில் ''எவரும் தலையிடாத தனி விலைக் கொள்கை'' யொன்று நிலவி வந்தது. உற்பத்தியாளர்களதும் நுகர்வாளர்களதும் செலவில் ஏற்படுத்தப்பட்ட விலைக்கட்டுப்பாட்டுச் சட்டங்கள் அரசாங்க மானிய அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட விலைகள், உத்தரவாத விலைத்திட்டம் முதலியன அமுலில் இருந்த போதிலும் இக் கள்ளச் சந்தைக்காரர்களது செல்வாக்கு உயர்ந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் மொத்த ஜனத்தொகையில் 80 % ஆனேர் தங்களது வாழ்க்கைக்கான மூலாதாரத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ விவசாயத்துறையிலிருந்தே பெறுகிருர்களாதலால் தேசிய இலக்குகளை எய்தவும், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கும், அதிகரிக்கும் தொழிலாளர் படைக்கு வேலை வாய்ப்பளிக்கவும் அடிப்படையாக இன்னும் விவசாயத் துறையே விளங்குகிறது.

எந்தத் துறை சார் அபிவிருத்தியானுலும், அது ஏனைய துறைகளுடன் ஒருங்கிணைந்திருப்பதுடன் சமநிலை வளர்ச்சி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன், ஏனைய துறைகளின் உதவியும் அதற்குக் கிடைக்க வேண்டும். விவசாயம் கைத்தொழிற் துறையிலிருந்து உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது; அதே போன்று கைத்தொழில்களும் பெருமளவு விவசாய உற்பத்திகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. விருத்தி பெற்று வரும் ஒரு விவசாயத் துறைக்கு, விருத்தியுறும் போக்குவரத்து, ஏற்றுமதி இறக்குமதி, வங்கித் தொழில், களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல், கிராம நகரத் தொடர்புகள், விவசாயிகளுக்கான வசதிகள் முதலியவற்றின் ஆதாரம் தேவை. அடுத்த திட்டக் காலத்தில், நெருங்கி ஒருங்கிணைக்கப்பட்டதும், சமநிலைப்படுத்தப்பட்டதுமான அபிவிருத்தி அமுல் செய்யப்படல் வேண்டும்.

அபிவிருத்தி மார்க்கங்கள் :

தேசியத் திட்ட இலக்குகளை அடைவதற்கான அபிவிருத்தி மார்க்கங்கள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன; இங்கே கூறப்படும் மார்க்கங்கள் அல்லது வழிவகைகள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதல்ல; அல்லது அவைதான் ஒரே தீர்வு என்பதுமல்ல. ஆனுல், தேவையான இலக்குகளை எய்துவதற்கு இவை சாத்தியமான மார்க்கங்களாகத் திகழ்கின்றன.

சமூக நீதி என்பதன் நோக்கம் உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையினைக் குறைத்தல், பற்றுக் குறையினைத் தீர்த்து வைக்கும் வகையில் பொருட்களின் நிரம்பலையும், விநியோகத்தையும் (பங்கீட்டையும்) விஸ்தரித்தல், இதே வேளை வசதிகள் குறைந்த இந்நாட்டின் 80 % வறிய மக்களின் மெய் வருமானத்தைக் கூட்டி அவர்களது கொள்வனவுச் சக்தியை அதிகரித்தல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. இவற்றுள் ஓரம்சம் இல்லையேல் ஏனைய அம்சங்கள் கருத்தற்ற ஒன்ருகி விடுகின்றன. ஏனெனில், பொருட்களோ சேவைகளோ இல்லாவிட்டால் உயர் வருமானத்தால் எவ்வித பிரயோசனமும் இல்லை; இந்நிலை பண வீக்கத்துக்கும் விரக்திக்குமே இட்டுச் செல்லும். விலைகள் உயர்ந்து காணப்பட்டு, பொருட்களைக் கொள்வனவு செய்ய மக்களிடம் பணமின்றேல் பொருட் பற்றுக்குறையைப் போக்க நடவடிக்கைகள் எடுப்பதாலும் எதுவித பிரயோசனமும் இல்லை. இந்த இலக்குகளை எய்தும் வழியிலேயே மக்களது துன்பங்கள், போஷாக்கின்மை என்பனவற்றுக்கும், வேலையில்லாத திண்டாட்டத்துக்குமான தீர்வுகள் அடங்கியுள்ளன. தவிர, நாட்டின் பெருவளமான மனித வளத்தையும், நிலம், முதல் முதலிய ஏனைய வளங்களையும் பயன் தரவல்ல வகையில் உபயோகிக்கவும் இவ்வழிமுறையே உதவும். இந் நடவடிக்கைகளின் மொத்த இயக்கமானது, பொருளாதாரம் எதிர்பார்க்கப்பட்ட வீதத்தில் வளரவும், அதன் மூலம் திட்ட முடிவுக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் உத்தேச ஆகக் குறைந்த மாதா அடிப்படை வேதனமான 400 ரூபாவைப் பெற்றுக் கொள்ளவும் வழிவகை செய்யும்.

இந்தஇலக்குகளை எய்தக்கூடிய வழிவகைகள் சில சுருக்கமாக இங்கே ஆராயப்படுகின்றன.

மக்களையும், மூலவளங்களான நிலம், முதல் முதலியவற்றையும் பேரளவில் ஈடுபடுத்தல் என்னும் பொதுக் கொள்கை ஓர் அடிப்படை இலக்கு. ஒவ்வொரு வேதன உழைப்பாளியும் அவர் நுகர்வதற்கும் அதிகமாக உற்பத்தி செய்தல் வேண்டும்; அதாவது, ஒவ்வொரு திட்டமும், முயற்சியும் இலாபம் தரக் கூடியதாயும் மேலதிக உற்பத்தியைத் தரக் கூடியதாயும் இருத்தல் வேண்டும். இது எப்போது அடையப்படுகிறதோ அன்றே இலங்கை தன்னிறைவுப் பாதையில் காலடி எடுத்து வைக்குமென்பதுடன்,

அதன் சமூகப், பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பாதையிலும் வெற்றிநடைபோடும். இம் மேலதிக உற்பத்திகள், தேசிய வருமானத்தின் 18 % க்கும் அதிகமான பகுதியை சேமிப்பு, முதலீட்டுத் தொகைகளாக அளிக்கும். பொருளாதாரம் 50 % க்கு மேல் மெய் ரீதியில் உறுதியாகத் தொடர்ந்து வளர இது உதவும்.

சமூக வாழ்க்கையில், குறிப்பாக அபிவிருத்தி, உற்பத்தித் துறைகளில் மக்கள் பெருந்தொகையில் வெற்றிகரமாக ஈடுபடுவதைப் பொறுத்தளவில், மக்கள், அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே முதல் தேவையாகும். அத்தியாவசியப் பொருட் பற்றுக்குறையை நீக்கல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் முதலியன மூலம் மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குவதன் மூலமாகவன்றி, இந் நம்பிக்கையை ஏற்படுத்த வேறு வழிகள் இல்லை. இந் நம்பிக்கையைப் பெற்ற பின்னர் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய அடுத்த நடவடிக்கை, மக்களை அபிவிருத்தி உற்பத்தித் துறைகளில் ஒழுங்குபடுத்தவே அரசாங்கம் செய்ய வேண்டிய அடுத்த நடவடிக்கையாகும். கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவன்றி, ஜனநாயக சோஷலிஸ நாடொன்றில், இதனைச் சாதிக்க வேறு பொருத்தமான மார்க்கங்கள் இல்லையென்றே கூறவேண்டும்.

நாட்டின் முதல், நிலம் போன்ற மூலவளங்களில் பெரும் பங்கையும், ஸ்தாபிக்கப்பட்ட உற்பத்தித் திறனில் கூடிய பகுதியையம் பொதுத் துறையே கொண்டிருப்பதால், மேலதிக உற்பத்தியைத் தர வழிசெய்யுமுகமாக, இத்துறையின் கொள்கைகள், அமைப்பு, நிர்வாகம் என்பன முற்றுகச் சீரமைக்கப்பட வேண்டும். எந்த ஒரு அரசாங்கத்தினதும் ஒரு பெரும் பணியாக இது உள்ளது.

அத்துடன், தனியார் துறைக்கான கொள்கைகள், மற்றும் இறக்குமதி, வங்கித்துறை, போக்குவரத்து, வலு, சேவைகள் முதலிய மூலவள ஒதுக்கீடு ஆகியவற்றையும் பொதுத் துறையே கட்டுப்படுத்துகிறது. விவசாயம், கைத்தொழில், நிர்மாணம், வர்த்தகம் ஆகிய எந்தத் துறையாக விருப்பினும் தனியார் துறையே இன்னும் ஆகப் பெரிய உற்பத்திச் சக்தியாகத் திகழ்கிறது. சமுதாய வாழ்க்கையிற் முழுப் பங்கு கொண்டு, நாட்டின் அபிவிருத்தி உற்பத்தித் துறைகளில் தனியார் துறை அதன் பங்கை செலுத்த வேண்டுமென்பதே அரசாங்கத்தின் கொள்கையாயின் பொதுத் துறையானது தனியார் துறைக்கெதிராகப் பாரபட்சம் காட்டவோ, அதனைத் தடை செய்யவோ, பலவீனப்படுத்தவோ கூடாது. அபிவிருத்தி, உற்பத்தி என்பன நிச்சயிக்கப்பட்ட வளர்ச்சி விகிதங்களை அடைய வேண்டின், அது நன்கு திட்டமிடப்பட வேண்டுமென்பதுடன், அத்துடன் ஏனைய துறைகளுடன் தொடர்பபடுத்தப்பட்டு, சமநிலைப் படுத்தப்படவும் வேண்டும். நாட்டு மக்களுள் 80 % இனர் விவசாயத்தில் தங்கியிருக்கின்றனர் என்ற வகையில் விவசாயத் துறை முககிய இடத்தைப் பெற்றுக்கொள்ளும் அதே வேளை, அது ஏனைய சகலதுறைகளின் ஒத்தாசையின்றி தனித்து அபிவிருத்தியடைய முடியாது; அத்தகைய ஒரு முயற்சி அபிவிருத்தியை நிச்சயம் பாதிக்கும். கைத்தொழில், போக்குவரத்து, நிர்மாணம், ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தகம், சந்தைப்படுத்தல், வங்கித் தொழில், சமூக வசதிகள் முதலிய ஏனைய துறைகளுக்கும் அவற்றுக்குரிய உதவியும் ஊக்கமும் வழங்கப்பட வேண்டும். முழுப் பொருளாதார அமைப்பும் ஸ்திரமான, சமநிலை வளர்ச்சி கொண்ட அபிவிருத்திப் பாதையிற் செல்ல இது உதவும்.

இதே கொள்கையை வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க — வேலையற்றுள்ளோருக்குத் தொழில் வாய்ப்புக்கள் வழங்க எதிர்காலத்தில் தொழில் துறைகளில் (உழைப்புச் சந்தையில்) சேரவுள்ளோருக்கு வேலை வசதிகள் வழங்க — இவர்கள் அனைவரையும் உற்பத்தித் துறையிலீடுபடுத்த — பொது, தனியார் துறைகளின் உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனை அதிகரித்து, மேலதிக உற்பத்தியையும் ஏற்படுத்த வேண்டும்; இதனை, நிலம், முதல் முதலிய எஞ்சும் மூலவளங்களுடன் இணைத்து மீண்டும் உற்பத்தி நடவடிக்கைகளிலீடுபடுத்தலாம். இங்ஙனம் பன்முக அடிப்படையிலான விரைவான உற்பத்திப்பெருக்கத்துக்கு இது வழி செய்வதுடன், இதன் மூலம் மேலதிக தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படலாம்.

மூலவளங்களை நிலைமைக்கேற்ப முக்கியத்துவம் கொடுத்து ஒதுக்கி நடவடிக்கை எடுப்பதானது அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளைக் குறைக்கவும் அவற்றின் பற்றுக்குறையைப் போக்கவும் உதவும். தொழில் வாய்ப்பை வழங்குதற்கான மார்க்கங்களுடனும், வெற்றிகரமான மக்கள் பங்குபற்றலுடன் அதனுடன் தொடர்பான மூலவளப் பகிர்சுவை, ஒழுங்கான முதலீட்டு வெளிநாட்டுச் செலாவணி பொருளாதார வரவு செலவுத் திட்டமிடல், நிலம் மற்றும் ஏனைய உற்பத்திக் காணிகளை முறையாக ஒதுக்கீடு செய்தல் முதலியனவற்றை மீண்டும் அறிமுகம் செய்வதன் மூலமே எய்த முடியும். இதனைச் செய்ய, திட்ட அமைச்சானது, நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தித் திட்டங்கள், முதலீடுகள் முதலியவற்றின் முன்னேற்றங்கள் பற்றி தொடர்ந்த ஆய்வுகளையும், பரிசீலனைகளையும், மதிப்பீடுகளையும் செய்ய மீண்டும் வழி செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்கு சீர்திருத்தியமைக்கப்பட்டதும் நெருங்கி இணைக்கப்பட்டதுமான ஓர் அபிவிருத்தி நிர்வாகம் திட்டமிடல் அமைச்சு, அபிவிருத்தி, திட்ட அமுலாக்கல் அமைச்சுக்களிடையேயும் அவற்றுடன் தொடர்பான திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களிடையே தேவை. இவற்றுட் சிலவற்றுக்கிடையே இன்று உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளமை சீரமைக்கப்பட வேண்டும்.

மூலவளங்களைப் பொருளாதார அடிப்படையில் பகிர்வு செய்தலும், அவற்றை உடனடி உற்பத்தித் துறையில் திறமையாகப் பயன்படுத்தலும், அரசாங்கத்தின் அமுலாக்கல், மற்றும் சேவை நிறுவனங்களைப் பிராந்திய உபபிராந்திய (மாவட்ட) அடிப்படையில் முற்றுகப் பரவலாக்கல் மூலமே அடையப் பெறலாம். பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம், மாவட்ட அபிவிருத்தித் திட்டம், தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்கு இவ்வகையில் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் முதலியவற்றுடன் இணைந்து இது செயற்படுத்தப்படலாம்.

தேவைகளுக்கேற்பத் தெரிவு செய்யப்பட்ட முக்கிய திட்டங்களின் உதவியுடன், விரைவான உற்பத்தியைத் தரக் கூடிய குறு

கிய கால செயற் திட்டங்கள் மூலம் போதுமான அளவு பொருள் நிரம்பல் உறுதி செய்யப்பட வேண்டும்; இதே வேளை, நாட்டின் எம்மூலை முடுக்குகளிலும் அத்தியாவசியம் பொருட்களைப் பெற்றுக் கொள்ள வழி செய்யும் வகையில் விநியோகத் (பங்கீடு) துறை புனரமைப்புச் செய்யப்படவும் வேண்டும். போதுமான அளவு நிரம்பல் இருக்கையில், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. இது முறையற்ற விநியோகம், ஊழல்கள் முதலியவற்றையும் அகற்றும். ஆக, மிகவும் அத்தியாவசியமான பொருட்களுக்கும், மிக அரிதாகக் கிடைக்கும் பொருட்களுக்கும் நாட்டின் மிகவும் வசதி குறைந்த மக்களுக்கும் மாத்திரம் இக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை அரசாங்கம் அமுலாக்கலாம்.

உற்பத்தி பெருகி பொருள் நிரம்பலும் அதிகரிக்கையில், மேலும் பல பொருட்கள் படிப்படியாக கட்டுப்பாட்டுப் பங்கீட்டுத் திட்டத்திலிருந்து அகற்றப்பட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்வாளர்களுக்கு பொருள்கள் நேரடியாகச் சென்றடையும் ஒரு சுதந்திரமான விநியோகமுறை இயல்பாகவே உருவாகிவிடும். மேற்படிக் கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக மூலவள ஒதுக்கீடு, இறக்குமதித் திட்டம், சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், நிதி நடவடிக்கைகள் (வரி, தீர்வைகள் முதலியன) ஆகியனவற்றை அரசாங்கம் உற்பத்தி, விலை ஒழுங்கு என்பன தொடர்பாக மேற்கொள்ளலாம்.

உற்பத்தி, உற்பத்தி சார் தொழில் முறைகள், மெய் வருமானத்தை அதிகரித்தல் என்பன நுகர்வுப் .பொருட்கள் அரசாங்க மானிய உதவியில் வழங்கப்படலைப் படிப்படியாக அகற்றவும் வழி செய்யும். ஆரம்பத்தில் இச்சேம நலக் கொள்கைகள் ஒரு சிறு காலப்பகுதிக்குத் தேவைதான் என்றாலும், நாட்டின் மிக வறிய மக்கள் அதன் முழுப் பயனையும் அனுபவிக்கும் வண்ணமும் பொருளாதாரத்தில் அது மேலதிக தாக்கங்களை ஏற்படுத்தாதிருக்கும் வண்ணமும் சரியான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். முதலில் இம்மானிய உதவிகளைப் பெறுவோரின் எண்ணிக்கையைத் தெரிந்தெடுத்துப் படிப்படியாகக் குறைப்பதன் மூலமும், மானிய உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலமும், பொருளாதாரத்தில் அது ஏற்படுத்தும் தாக்கத்தை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கலாம். மறுபுறத்தில் மூலவளங்களை மீள ஒதுக்கீடு செய்து, அத்தியாவசியப் பொருட்களின் நிரம்பலை அதிகரிக்கலாம்.

எமது பொருளாதாரத்தில் கடந்த சுமார் 15 வருட காலமாக நிலவி வரும் சிக்கல் சேம நல நுகர்வு, விநியோகக் (பங்கீட்டு) கொள்கைகள், அபிவிருத்தி, உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடாகும். முன்னைய அம்சத்தில் அதிக கவனம் செலுத்தியமையின் காரணமாக பின்னையது வெகுவாகப் பாதிக்கப்பட்டது. உண்மையில் இது இன்று எமது பொருளாதாரத்தால் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படுத்தியுள்ளது. நுகர் பொருட்கள், மற்றும் பொது வசதிகள் சேவைகள் என்பவற்றை மானிய அடிப்படையில் வழங்கும் முறையும், விலைக் கட்டுப்பாடு, பங்கீட்டு அடிப்படையிலான விநியோகம், அரசாங்க நிறுவனங்களது நட்டங்களையும் விரயங்களையும் கணக்கிலிருந்தும் அகற்றிவிடல் முதலியன ஒரு புறத்திலும், மறு புறத்திலும் உற்பத்திக் காரணிகளுக்கு மானிய உதவிகள் வழங்கலும், மற்றும் உத்தரவாத விலை, வரிச் சலுகை முதலிய ஒன்றிலொன்று தங்கிய ஊக்க நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. நாம் எத்தகைய அரசியற் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டாலும், தேசிய பொருளாதாரத்தின் உற்பத்தி - நுகர்வு ஆகிய இரு துறைகளதும் முக்கிய அம்சமாக ''விலை'' யே இன்னும் இருக்கிறது. இதற்கு இலகுவான உபாயத்தைக் கையாளல் இன்றைய நிலையில் அவசியமாகவுள்ளது. மேற்குறித்த குறுகிய கால உற்பத்தி இலக்குகள் அடையப் பெறலாம் எனவும் பொதுத் துறை உற்பத்தித் திறன் ஸ்தாபிக்கப்படலாம் எனவும் நாம் ஏற்றுக்கொள்ளுவோம்; அப்படியாயின் விநியோகம், விலைகள் எனபவற்றிலேயே தீர்வு தங்கியுள்ளது. உணவுத் திணைக்களம், சந்தைப்படுத்தல் திணைக்களம், கூ. மொ. வி., ப. நோ. கூ. ச., நெற் சந்தைப்படுத்தற் சபை, அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் பசளை, எண்ணெய்க் கொழுப்பு, பெற்றோலியம் முதலிய கூட்டுத்தாபனங்களில் அரசாங்கத்தின் பெருமளவு சந்தைப்படுத்தல் இயக்க நடவடிக்கைகள் இன்று உள்ளன. இவை தவிர, உற்பத்திகளுக்கான உள்ளீடுகளையும், சேவைகளையும் வழங்கி, முடிந்தபொருட்களைச் சந்தைப்படுத்தும் பால் சபை, சீனி, கடற்றொழில் கூட்டுத்தாபனம் போன்றனவும் உள்ளன. விலை நிர்ணயக் கொள்கைகள், திறமையின்மை, நட்டம் என்பன, காரணமாக நுகர்வாளர், உற்பத்தியாளர்கள் இருவரும் விலைகளை உயர்த்துதற்கு இவை குறிப்பிடத்தக்களவு காரணமாக விருந்துள்ளன. இவற்றுட் சிலவற்றைக் கட்டாய இலாப நோக்கற்ற சேவை நிறுவனங்களாகப் பிரகடனம் செய்தலே இதனைத் தீர்ப்பதற்கான வழியாகும். நேரடியாக அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்படும் பணத்தைக் கொண்டு இவற்றை நடத்தலாம். இவற்றின் மூலம் விலைக் குறைப்பு, சந்தையில் ஸ்திரமான விலை, தெரிவு செய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்களைத் திறமையாக விநியோகித்தல் என்பன சாத்தியமாகும்; இதே வேளை இதே நிறுவனங்கள் உற்பத்திகளை ஊக்க (அதிக) விலைகள் கொடுத்துக் கொள்வனவு செய்வதன் மூலம் உற்பத்தியை ஊக்குவிக்கவும் உதவலாம்.

வேலை வாய்ப்பை அதிகரித்தலும், மூலப் பொருள் உபயோகமும் ஒரு முதலீட்டு தொழில் விகிதத்தை அவசியமாக்குகிறது. தொழிற்படும் ஒவ்வொரு அலகுக்கும் முன்னரைப் போலன்றி சிறிதளவு முதலீடே தேவைப்படும்; எனவே, குறித்த ஓர் அளவு முதலீடு கூடிய வேலை வாய்ப்பை எற்படுத்தும். இது அதிக தொழிலாளர்கள் கூடிய வருமானத்தைப் பெற வழி செய்யும், இதனை எய்துவதாயின் முதலீட்டுச் செறிவற்ற உள்ளூர்த் தொழில் நுட்பத்தையே பயன்படுத்த வேண்டும். வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தின் அறிமுகமோ, வெளிநாட்டுதவியோ, அல்லது வெளிநாட்டவர் உற்பத்தித் துறையில் பங்கு கொள்வதோ கூடாதென்பது இதன் அர்த்தமல்ல; அபிவிருத்தியைப் பாதித்து விடாத வகையில் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தைத் தெரிந்தெடுப்பதிற் கவனமாக இருக்க வேண்டுமென்பதையும், காலங் கடந்துபோன இயந்திராதிகளையும் பொருத்த

மற்ற உபகரணங்களையும் கொண்டு சேர்க்கும் மையமாக எமது அபிவிருத்தித் திட்டங்கள் மாறிவிடக் கூடாதென்பதையுமே இது குறிக்கிறது. இங்ஙனம் ''மதிப்பில் உயர்ந்த'' அல்லது ''கௌரவமிக்க'' திட்டங்களை ஆரம்பித்து நமக்கு ஏராளமான அனுபவம் உண்டு. இவை இவற்றுக்கான உதவிகளை வழங்கும் வெளிநாட்டவர்களுக்கும், வெளிநாட்டுப் பயணங்களாலும், விசேட கமிஷன்களாலும் கவரப்பட்ட எமது உள்ளூர் அதிகாரிகளுக்குமே ''மதிப்பில் உயர்ந்தனவாக'' இருந்து வந்துள்ளன. இதன் மூலம் முதற்செறிவு மிக்க சில கனரகக் கைத்தொழில்களையும் கூடாதெனக் கூறவில்லை; ஏனெனில், சிறு கைத்தொழில்கள், மற்றும் விவசாய, நிர்மாணத்துறைகளுக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய கனரகக் கைத்தொழில்களிலும் இலங்கை விரைவில் தன்னிறைவு அடைதல் வேண்டும்.

இவ்விஷயத்தில் கனரகக் கைத்தொழில்களுக்குத் தேவையான கனிப்பொருள் மூலப் பொருட்கள் உள்ளூரிற் கிடையாமை, அதே போன்று இக் கனரகக் கைத்தொழில்களுக்குத் தேவையான தொழில் நுட்பம், போக்குவரத்து வசதிகள், இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள், நாணயவித மூலப் பொருட்கள் என்பன போதாமல் இருப்பதும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. இதே வேளை சாதகமற்ற சென்மதி நிலுவை நிலைமைகள், வெளிநாட்டு உதவிகளையும் மீறி அதிகரிக்கும் வெளிநாட்டுக் கடன்கள் ஆகியனவற்றால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். இக் காரணத்துக்காகவே வெளிநாட்டு உதவிகளையும், தொழில் நுட்பங்களையும் தெரிந்தெடுப்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமாகவுள்ளது. இல்லையேல் நாம் மீண்டும் வெளிநாட்டுச் செலவினங்களை வீணாக அதிகரித்துக் கொள்ளும் தவறையே செய்வோம்.

மக்கள் பங்குபற்றல்

பேரளவு உற்பத்தித் தொழில் வாய்ப்பு, உற்பத்தித் துறைகளின் விரைவான அபிவிருத்தி, வேலையின்மையையும் சோம்பலையும் அகற்றல் போன்றவற்றுக்கான முழு அடிப்படையுமே பொது மக்கள் உற்பத்தித் துறையிற் பங்குபற்றலிலேயே தங்கியுள்ளது இதற்கு என்னென்ன நிலைமைகள் தேவை?

சேவைகள், உற்பத்திக் காரணிகள், கடன், விலைகள் என்பன வற்றை அரசே நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கட்டுப்படுத்துகின்றபடியாலும், உற்பத்தி அபிவிருத்தித் துறைகளில் முதன்மைகளையும் அதுவே நிர்ணயிப்பதாலும், பயன் மிக்க முதலீட்டுக்கும் பங்குபற்றலுக்கும் பொருத்தமான பொருளாதாரச் சூழலையும், சந்தர்ப்பங்களையும் ஏனைய காரணிகளை விடவும் அரசாங்கக் கொள்கைகளே நிர்ணயம் செய்கின்றன.

எனவே, அரசாங்கத்திலும் அதன் கொள்கைகளிலும் நம்பிக்கை ஏற்படுதல் அவசியம். குறிப்பாக, வாழ்க்கைச் செலவு, உற்பத்திச் செலவு, இலாபம் பெறக்கூடிய சாத்தியங்கள் முதலியனவற்றைப் பொறுத்தளவில் இது கட்டாயமாகின்றது. உற்பத்தியாளர்களுக்கு குறைந்த அச்சத்தையும், உறுதியான சந்தையையுமேஇது குறித்து நிற்கிறது.

சுய தொழில் அடிப்படையில், அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளல் எனபதற்கும் — அது கூலிக்கோ சிரமதானத்துக்கோ — ஒரு நம்பிக்கையுணர்வும், சமூகப் பொறுப்புணர்ச்சியும் நாட்டில் நிலவ வேண்டும். மக்களது அடிப்படைத் தேவைகள் இலகுவில் கிடைக்கக் கூடியதாகவிருந்தால் தான் இதற்கான சூழல்கள் நாட்டில் ஏற்படும். பசியால் வாடும் மக்கள் இங்ஙனம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கு கொள்ள முடியாது. அரசியல் காரணங்களாலும், கட்டாயக் காரணங்களாலும் இங்ஙனம் பங்குபற்ற மேற்கொள்ளப்படும் தூண்டுதல் தற்காலிகமான ஒன்றே. மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டங்கள், ஜனவாசாக்கள், தெரிவு செய்யப்பட்டாத கூட்டுறவுச் சங்கங்கள் என்பன இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

சரியான முறையிற் தெரிவு செய்யப்பட்ட நிறுவன முறைகளும், ஸ்தாபனங்களும் இப்பங்கு பற்றலை ஊக்குவிக்கும். திட்டமிடப்பட்ட யோசனைகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட ஸ்தாபனங்கள் அவசியம். சமூக ஜனநாயக அமைப்பைப் பொறுத்தளவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவன ஏற்பாடு உண்மையான கூட்டுறவே ஆகும். கூட்டுறவு என்கையில், தற்போது இந்நாட்டில் காணப்படும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் ஸ்தாபிக்கப்பட்டு நிர்வாகிகளாலும், அரசியல் வாதிகளாலும் அவர்களது பிரதிநிதிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டுவரும் கூட்டுறவுச் சங்கங்களைக் குறிக்கவில்லை. உண்மையான கூட்டுறவு நடவடிக்கை மக்கள் தேவைகளை நிவிர்த்திக்கவென மக்கள் மத்தியிலிருந்தே தோன்ற வேண்டும்; மக்கள் பலர் ஒன்றிணைந்து தங்கள் பலத்தை அதிகரித்து, பொருளாதார வர்த்தக நன்மைகளைக் கருத்திற் கொண்டும், பாதகமான சந்தைச் சக்திகளுக் கெதிராகவும், தங்கள் வளங்களையும் நடவடிக்கைகளையும் ஒன்றுதிரட்டலே உண்மையான கூட்டுறவாகும். அது உற்பத்திக்காக விருந்தால் என்ன, அபிவிருத்திக்காக விருந்தாலென்ன, சந்தைப்படுத்தலுக்காக விருந்தாலென்ன, பல நோக்கம் கொண்டதாக விருந்தாலென்ன அதன் அங்கத்தவர்களது பொது நன்மைகளைக் கருத்திற் கொண்டதாகவே இருத்தல் வேண்டும்; அதன் நிர்வாக சபை காலத்துக்குக் காலம் அதன் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படல் வேண்டும். இச் சபையானது அதன் நிர்வாக நடவடிக்கைகளையும் ஏனைய தீர்மானங்களையும் மேற்கொண்டு அதனை நடத்தும்; அத்துடன் அதன் நிதி நிலைமைகளையும் பொருளாதார நடவடிக்கைகளையும் அதே போன்று அதன் அங்கத்தவர்களது தேவையான நலன்களை அபிவிருத்தி செய்தற்கான நடவடிக்கைகளையும் இச் சபை மேற்கொள்ளும்.

அபிவிருத்திக்கான முதலீடுகள்

தேறிய சேமிப்பை முதலீடாக மாற்றக்கூடிய ஒரு நாட்டின் திறமையானது, உற்பத்தித் திறனையும் நிதி அபிவிருத்தியையும் அபிவிருத்தி செய்யக்கூடிய அதன் திறமையையும் தீர்மானிக்கிறது. இது, அத்தியாவசியத் சேவைகள், பொருட்கள், சேவைகள் என்பனவற்றை மக்களுக்கு இலகுவாக வழங்கக் கூடிய நிலையை உருவாக்கும். அத்துடன், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் உதவும்.

இதற்கு உண்மையான தேறிய சேமிப்புக்கள் அரசாங்க வருமானத்திலிருந்து வரவேண்டுமென்பதுடன் அதன் வெளியகக் கணக்

குகளிலிருந்து மேலதிகத்தைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும். இலங்கை நீண்ட காலமாக நிதி நெருக்கடியிலிருந்து வந்துள்ளது. அரசாங்கச் செலவினங்கள் வருமானத்திலும் பார்க்க அதிகரித்ததுடன், சாதகமற்ற சென்மதி நிலுவை நிலைமைகளும் நாட்டைப் பாதித்தன. உலக நிதி நிலைமைகளில் ஏற்பட்ட பெரும் பாதிப்பு, இறக்குமதிகளின் விலைகள் வெகுவாக அதிகரித்தமை, ஏற்றுமதி வருமானங்கள் குறைந்தமை அல்லது அதில் தேக்கம் ஏற்பட்டமை, போன்ற வெளிக் காரணிகளே பெருமளவில் சென்மதி நிலுவை நிலைமைகள் மோசமடைந்தமைக்குக் காரணங்களாகும். வெளியகக் கணக்கு வழக்குகள் சரியான முறையிற் கையாளப்படாமையும் இதற்கு இன்னொரு காரணமாகும். வரவு செலவுப் பற்றுக்குறையைச் சமன் செய்யவும், ஏற்றுமதி வருவாய்களைவிட உயர்ந்து சென்ற இறக்குமதிச் செலவினங்களை ஈடு செய்யவும் அடிககடி வெளிநாட்டுக் கடனுதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதனுல், வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தேவையான பணம், உதவியாகக் கிடைக்கும் தொகைகளை விடக் கூடிக் காணப்பட்டது; அத்துடன் எமது கட்புலனுகா வெளிநாட்டுக் கொடுப்பனவுகள், எமது கட்புலனுகா வருமானத்தில் 75% ஆக உயர்ந்தன. மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட நுகர் பொருட்கள், போக்குவரத்து வசதிகள், இலவச மருத்துவ சேவைகள், இலவசக் கல்வி முதலியன காரணமாகவும், பெருஞ் செலவில் பாரிய அளவில் பொதுத் துறையானது விஸ்தரிக்கப்பட்டதன் காரணமகவும் அரசாங்கச் செலவினங்கள் அதன் வருமானத்தை விடவும் தொடர்ந்து கூடின. இவை எல்லாம் நிதி நெருக்கடியை அதிகரித்தன. குறை வருமானப் பெரும்பான்மை, குறுகிய வரி அடிப்படை, நுகர்ச்சியில் ஏற்படுததப்பட்ட தடைகள் காரணமாக சுருங்கிச் சென்ற வருமானம், முதலிய பல்வேறு காரணிகள் காரணமாக மூலதன வரவு செலவுகளை மட்டுமன்றி, நடைமுறைக் கணக்குகளைச் சரிக்கட்டக்கூட வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு அரசாங்கம் ஆளானது. விலை வீக்கத்துக்கும் இது ஓரளவு காரணமாக விருந்தது. ஏனெனில், பொருட்களின் நிரம்பல் அதிகரிக்காது பணம், நாட்டுக்குள் பெருமளவிற் புகுத்தப்பட்டது.

பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்கி, பொருட்கள் சேவைகளது வெளியீட்டை அதிகரித்து அத்தியாவசியப் பொருட்களின் பற்றுக்குறையை அகற்றவும், விலைகளைக் குறைக்கவும், தொழில் வாய்ப்புககளுக்கான புதிய வழிவகைகளை உருவாக்கவும் தற்போது 12%க்குக் குறைந்த நிலையிற் காணப்படும் சேமிப்பு முதலீட்டுவிகிதம் 18% குறையாது அதிகரிக்கப்படல் வேண்டும்.

ஏற்றுமதி வருமானம் தொடர்பான எதிர்கால முற்கூற்றுக்கள், வெளிநாட்டு உதவிகள் பற்றிய அனுபவங்கள் என்பனவற்றை ஆராய்கையில் முதலீட்டு இடைவெளியை இவை தீர்த்து வைக்கும் எனக் கூறமுடியாது. எனவே பொதுத் துறைக்குச் செலவிடும் தொகையைப் பாரியளவிற் குறைத்து, முறையற்ற நிர்வாகத்தை ஒழித்து, யதார்த்தமற்ற சேமநலச் செலவினங்களைக் குறைத்தலே உள்ள ஒரே வழியாகும்.

உண்மையில் பொதுத்துறை முதலாளித்துவம், உற்பத்திச் சொத்துக்களின் பெரும்பகுதியை விழுங்கியுள்ளது. அதன் கீழ் உள்ள துறைகள் ஒவ்வொன்றும் முதலீட்டு, நடைமுறைச் செலவினங்கள் இரண்டும் நீங்கலாக மேலதிக உற்பத்தியிலீடுபட வேண்டும். உற்பத்திசாரா நடவடிக்கைகளையும் ஈடு செய்யக் கூடிய வகையில் இம் மேலதிக உற்பத்தியானது அமைதல் வேண்டும். சமூகத்தின மிக வறிய மக்கட் பிரிவினருக்கு மாத்திரம் கிடைக்கக் கூடியதாகவே சேமநலச் செலவினங்கள் செலவிடப்பட வேண்டும். உண்மையில் இச் சேமநல நடவடிக்கை முழுவதும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். மேல், மத்திய மட்ட வருமானம் பெறுவோர் மானியஅடிப்படையில் உணவு, மற்றும் இலவச கல்வி, வைத்திய வசதிகளைப் பெறல் தவிர்க்கப்படல் வேண்டும். சமூக நல நடவடிககைகள் பலவற்றை அரசாங்கங்கள் மேற்கொண்டிருந்த பொழுதிலும் இலங்கை வாக்காளர்கள் தமக்குத் தேவையான நேரங்களில் அரசாங்கங்களை மாற்றுவதில் பின்நிற்கவில்லை. மானிய அடிப்படையில் வழங்கப்படும் உணவுகள், இலவச ஆனுல் நோயாளர் நிரம்பி வழியும் ஆஸ்பத்திரிகள், மானிய உதவியில் வழங்கப்படும் ஆனுல் ஜனநெரிசல் மிக்க போக்குவரத்து வசதிகள் ஆகிய வசதிகளை பற்றி அதிகம் கவலை கொள்ளாது பொருளாதாரத் தேவைகள், தொழில் வாய்ப்பு, வாழ்க்கைத் தர நிலைமைகள் ஆகிய ஏனைய வசதிகளை கவனத்திற் கொள்ளும் சமுதாய உணர்வில் சிந்திக்கக் கூடிய மக்கட்கூட்டம் இன்று அதிகரித்து வருகின்றது.

பொருளாதார அபிவிருத்தியையும் சமூக முன்னேற்றத்தையும் நோக்கி நாம் செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. இப் புனர் நிர்மானத்திற்கு அரசியல் துணிச்சல் அதிகம் தேவை. அத்துடன், பாரிய மாற்றங்களானவை, புதிய அரசாங்க மொன்று பதவியேற்றமுதல் 6 மாத காலத்துள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வேலையில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் வாழ்க்கைச் செலவு குறைப்பு என்பன உறுதி செய்யப்பட வேண்டும். குறுகிய காலத்தில் வெளிநாட்டு கடன்களின் மூலமாகத்தான் இதனைச் செய்ய வேண்டுமென்ருலும் பரவாயில்லை. அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்து கீழ்மட்ட வருமானம் பெறுவோரின் வேதனங்களை அதிகரிப்பதைவிட சேமநலச் செலவினங்களை குறைப்பதற்கு வேறு வழியிலலை என்றே கூற வேண்டும். அத்துடன், வருமான உச்சவரம்பு போன்ற சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை உயர் மட்ட வருமானம் பெறுவோருகென நிர்ணயித்தலும் இதற்கு உதவும். சரியான முறையில் பயன்படுத்தப்படுமாயின் கட்டாயச் சேமிப்பு கூட இந்த வகையில் உதவும்.

எனவே, முடிவாகக் கூறுவதாயின், கூடிய முதலீட்டு மட்டம், அபிவிருத்தி, உற்பத்தி முதலியவற்றின் வெற்றி பின்வருவனவற்றில் தங்கியிருக்கினறதெனலாம்:—

(1) பொதுத் துறைச் செலவினங்களைக் கட்டுப்படுத்தல்;

(2) பொதுத்துறை உற்பத்தி திறன்களை அதிகரித்தல்;

(3) யதார்த்தமற்றதும் அளவுக்கதிகமானதுமான சேமநல வசதிகளைக் குறைத்தல்;

(4) முடியுமான இடங்களில் வரி மட்டத்தை விஸ்தரித்தல்.





சோவியத் ரசியாவில் 1000 பேரைக் கொண்ட ஒரு சருவதேசக் குழுவினால் ஒரு வாயுக் குழாய் வழி அமைக்கப்படுகிறது. இது ஊரல் நதிக் கரையிலிருந்து ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளுக்கு வாயுவைக் கொண்டு செல்லும். (மேலே)

சூரியவலு: சூரியனிலிருந்து வலுவைப் பெற ஐக்கிய அமெரிக்கா மேற்கொண்டுள்ள முயற்சி (வலது) →



நீர்மின்வலு: இந்தியாவில் ஓர் அணை கட்டப்படுகிறது. (இடது)

←



பெட்ரோல் வலுவின் பெரும் பகுதி மோட்டார் வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. பிரயாணிகளைக் கொண்டு செல்லும் வண்டிகளே பெரும் பகுதியை உபயோகிக்கிறது. போக்குவரத்துத் துறையிலே மிகக் குறைந்த எரிபொருள் பயன்பாடே பெறப்படுகிறது. (வலது)

விண்வெளிக்கு அனுப்பப்படுதல்: சந்திரகலத்தின் முதல் கட்டமான சட்டர்ன் 5. இது ஐந்து எப் 1 திரவ ஒட்சிசன் மண்ணெண்ணெய் மோட்டர்களைக் கொண்டது. ஒவ்வொன்றும் 680 தொன் உதைப்பை உடையது. (வலது பக்கக் கடைசிப் படம்) → → →

பத்து இலட்ச மெழுகுதிரிச் சக்தியை உடைய கொண்டுசெல்லக்கூடிய நீடொளி ஒன்று. எனினும் அதன் எடை 7 இருத்தல்களே (வலது)

அணுவலு: அணுக்குண்டு வெடித்தல் (அடிப்படம்)





Registered as a Newspaper at the G.P.O.

பொருளியல் நோக்கு

விலை 2/-

பொருளியல் நோக்கில் இடம் பெற்றுள்ளவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ
மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 137 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது.